விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka

பக்கங்கள் :இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 27 வியாழக்கிழமை (11.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 236

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

## யுவதி மீது கூட்டு வன்புணர்வு
## குற்றவாளிகள் 4 பேருக்கு 15 வருட கடூழியச் சிறை

(யாழ்ப்பாணம்)

விசேட தேவையுடைய யுவதியொருவரை கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கைதான நால்வருக்கு பதினைந்து ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதித்து யாழ்.மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. குறித்த வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணின் சாட்சியத்தை அடிப்படையாக கொண்டே குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கைதடியை சேர்ந்த 25 வயதுடைய விசேட தேவையுடைய பெணணொருவரை 2009 ஆம் ஆண்டு

23ஆம் பக்கம் பார்க்க....

## மிருக பலியிடல் தடை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு ஆலயங்களில் மிருகபலியிடலை மேற்கொள்வதற்கு யாழ்.மேல் நீதிமன்றம் விதித்திருந்த இடைக்காலத்தடையுத்தரவு மேலும் இரு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. குடாநாட்டு ஆலயங்கள் சிலவற்றில் நடைபெறும் மிருக பலியை தடுத்து நிறுத்தக்கோரி சைவமகா சபையினரால் யாழ். மேல நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட

23ஆம் பக்கம் பார்க்க....


## 2016ஆம் ஆண்டுக்கான யாழ் விருது ஓய்வுநிலை அரச அதிபர் இராசநாயகத்திற்கு

### யாழ்.மாநகர ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழு வருடந்தோறும் வழங்கும் யாழ் விருது இவ்வருடம் கிளிநொச்சி மாவட்டத்தின் ஓய்வுபெற்ற அரச அதிபரும் கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தலைவருமாகிய தி.இராசநாயகம் அவர்களுக்கு வழங்கப்படுவதாக யாழ்.மாநகர

23ஆம் பக்கம் பார்க்க....



## பாலம் எதுவும் அமைக்கப்படாது

(கொழும்பு)

இந்தியா-இலங்கைக்கு இடையில் பாலம் அமைக்கப்படுவதாக வெளியிடப்பட்டுவரும் தகவல்களில் எவ்வித உண்மையும் இல்லை எனத் தெரிவித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவ்வாறான பாலம் ஒன்று அமைக்கப்படாது என்பதையும் திட்டவட்டமாக நேற்று அறிவித்தார்.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்படும் ஒட்கா ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கை நாட்டவர்களுக்கே வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்பதையும் பிரதமர் கூறினார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று பகல் கூடிய நாடாளு

23ஆம் பக்கம் பார்க்க....

# விஷ ஊசியில் விஷமப் பேச்சு

## போராளிகளின் மரணத்தில் சிவமோகன் எம்.பி குதர்க்கம்

(கொழும்பு) --------------

முன்னாள் போராளிகளின் மர்மமான உயிரிழப்புகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டிருப்பது காரணம் என வெளிவரும் தகவல்களில் உண்மையில்லை எனத் தெரிவித்த தமிழ்த் தேசி



## சாட்சியமளிப்போரின் இரகசியம் காப்பு!

(கொழும்பு)

காணாமல் போனோர் தொடர்பாக அமைக்கப்படும் பணியகத்திற்கான சட்டமூலத்தினால் தகவல் அறியும் உரிமைச் சட்டத்திற்கு எவ்வகையிலும் பாதிப்பு ஏற்படாது எனத் தெரிவித்த ஊடகத்துறை பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவித்தாரன, பணியகத்தில் தகவல் அளிப்பவர்களின் இரகசியத்தன்மை நிச்சயம் பேணப்படும் என்றும் உறுதியளித்தார்.

அத்துடன் பணியக விசாரணை நடவடிக்கைகள் நீதிமன்ற விசாரணைக்கு ஒப்பானதல்ல என்று கூறிய அவர், பணியக நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு நிபுணர்களின் உதவிகளும் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். (செ-11)

தரம் - 5

வித்தார்.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்படும் ஒட்கா ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கை நாட்டவர்களுக்கே வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்பதையும் பிரதமர் கூறினார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று பகல் கூடிய நாடாளு

23ஆம் பக்கம் பார்க்க....




## சி.எஸ்.என் நிறுவன நிதிகள் முடக்கம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோசித்த

23ஆம் பக்கம் பார்க்க....

# போராளிகளின் மரணத்தில் சிவமோகன் எம்.பி குதர்க்கம்



(கொழும்பு)

**முன்னாள் பேராளிகளின் மர்மமான உயிரிழப்புகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டிருப்பது காரணம் என வெளிவரும் தகவல்களில் உண்மையில்லை எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவமோகன் வயிற்று வலி, வாந்திபேதிக்கும் ஊசி ஏற்றப்படும் என குதர்க்கமாக பேசியுள்ளார்.**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கும் குழுநிலைக்கூட்டம் நேற்று பி.ப.2.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நடைபெற்றிருந்தது.

த.தே.கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முன்னாள் போராளிகளின் மர்மமான உயிரிழப்புக்கள் தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

இதன்போதே சிவமோகன் எம்.பியினால்

23ஆம் பக்கம் பார்க்க....

வகையிலும் பாதிப்பு ஏற்படாது எனத் தெரிவித்த ஊடகத்துறை பிரதியமைச்சர் கருணாரத்ன பரணவித்தாரன, பணியகத்தில் தகவல் அளிப்பவர்களின் இரகசியத்தன்மை நிச்சயம் பேணபபடும் என்றும் உறுதியளித்தார்.


அத்துடன் பணியக விசாரணை நடவடிக்கைகள் நீதிமன்ற விசாரணைக்கு ஒப்பானதல்ல என்று கூறிய அவர், பணியக நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டு நிபுணர்களின் உதவிகளும் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார். (செ-11)

# பிணை வழங்கப்பட்டும் மறியலில் தயாமாஸ்டர்

(குருமன்காடு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஊடக இணைப்பாளராக இருந்த தயா மாஸ்டர் என்ற வேலாயுதம் தயாநிதிக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நேற்று தாக்கல்

23ஆம் பக்கம் பார்க்க....



# வடக்கு மீள்குடியேற்ற செயலணியில் விக்னேஸ்வரனை இணைக்க மறுப்பு

## சாள்ஸ் எம்.பியின் கோரிக்கையை ரணில் நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வட மாகாண மீள்குடியேற்ற செயலணியில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும் இணைத்துக் கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது. நாடாளுமன்றம் நேற்று பிற்பகல் கூடிய போது சபையில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மல நாதன், வடமாகாண மீள்குடியேற்ற செயலணி குறித்து கருத்துக்களை வெளியிட்டார்.

அந்த செயலணிக்குள் அங்கம் வகிக்கும் வர்த்தக அமைச்சர் ரிஷாட் பதியூதீன் அண்மைக்காலமாக வடக்கு மக்களின் நம்பிக்கையை இழந்து வந்தவர் என்பதோடு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ

24ஆம் பக்கம் பார்க்க....

## சந்திரிகா இன்று யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

இன்றைய தினம் யாழ்.வருகை தரும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் யாழ் மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

வட மாகாண ஆளுநர் மற்றும் யாழ்.மாவட்ட அரச அதிபரின் ஆலோ

24ஆம் பக்கம் பார்க்க....

# அநாதரவாகப் போடப்பட்ட ஆண் குழந்தையின் தாய் கைது

## சந்தேகத்தின்பேரில் ஆணொருவரும் கைது

(கரணவாய்)

பண்டத்தரிப்பு வடலியடைப்புப் பகுதியில் ஆண் குழந்தை ஒன்றை அநாதரவாக போட்டுவிட்டு சென்ற சம்பவத்தில் அக்குழந்தையின் தாயார் கைது செய்யப்பட்டதுடன் அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் அக்குழந்தையின் தந்தை எனச் சந்தேகிக்கப்படும் ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 7ஆம் திகதி ஞாயிற்றுக்

24ஆம் பக்கம் பார்க்க....

# சர்வதேச நீதிபதிகளை அழைக்குமாறு அரசுக்கு உத்தரவு பிறப்பிக்க முடியாது

## உச்சநீதிமன்றம் மறுப்பு

(கொழும்பு)

போர்க் குற்ற விசாரணை களை மேற்கொள்வதற்கு சர்வதேச நீதிபதிகள் அழைக்கப்படுவர்களா என்பது குறித்து தெளிவுபடுத்தும்படி அரசாங்கத்துக்கு உத்தரவு பிறப்பிக்க முடியாதென்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தேசப்பற்றுள்ள தேசிய அமைப்பின் தலைவர் குணதாச அமர சேகர தாக்கல் செய்த மனுவொன்றை தள்ளுப்படி செய்த பின்னர் தலைமை நீதிபதி ஸ்ரீபவன் இதனை அறிவித்தார்.

போர் குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு சர்வதேச நீதிபதிகளை அழைக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடா

24ஆம் பக்கம் பார்க்க....

# வாய்ப்புற்று நோய் இலங்கையில் அதிகரிப்பு

## நாளொன்றுக்கு 6-7 பேர் எனத் தகவல்

நாட்டில் ஆண்கள் மத்தியில் வாய்ப்புற்று நோய் அதிகரித்து வருவதாக சுகாதார அமைச்சகம் தகவல்கள் வெளியிட்டுள்ளது.

மார்பாகபுற்று நோய் பெண்கள் மத்தியில் கூடுதலாக காணப்படுவது போல் வாய்ப்புற்று நோய் ஆண்கள் மத்தியில் கூடுதலாக காணப்படுவதாக அறிக்கை கூறுகிறது.

ஆண்டு தோறும் 2ஆயிரத்து500 வாய்ப் புற்று நோயாளர்கள் அடையாளம் காணப்படுவதாகவும் இந் நோயாளர்களில் 78 சத வீதமானோர் ஆண்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புற்று நோயாளர்களின் மரண எண்ணிக்கையில் கூடுதலான மரணங்கள் வாய்ப்புற்று நோய் மரணங்கள் என சுகாதார அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசிய புற்று நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி திட்டம் கூறுகின்றது.

நாளொன்றுக்கு மூன்று பேர் என ஆண்டுக்கு 800 முதல் 900 மரணங்கள், வாய்ப்புற்று நோயால் ஏற்படுவதாக மருத்துவமனை தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது என தேசிய புற்று நோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சி திட்டத்தை சேர்ந்த வைத்தியர் சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன் தெரிவித்தார்.

**யாருக்கு வருகிறது புற்றுநோய்?**

புகைத்தல், வெற்றிலை, பாக்கு, புகையிலை உட்கொள்ளல் போன்ற பழக்கமுடையவர்கள் மத்தியில்தான் இந்த வாய்ப்புற்று நோய் அதிகம் காணப்படுகிறது.

அத்துடன் வாய்ச்சுகாதாரம் சரியான முறையில் பேணப்படாமையும் இந் நோய்க்குரிய மற்றமோர் காரணியாக அமைவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார்

இலங்கையில் புற்று நோயாளர்களின் எண்ணிக்கை நாள்தோறும் அதிகரித்து வரும் நிலையில் நாளொன்றுக்கு 6 -7 வாய்ப் புற்று நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றார்கள்

இது தொடர்பாக குறிப்பிட்ட வைத்தியர் சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன் ஒவ்வொரு ஆண்டும் அடையாளம் காணப்படும் புற்று நோயாளர்களில் 12-15 சத வீதம் வாய்ப்புற்று நோயாளர்கள். அது போல் 18-20 சதவீதம் மார்பக புற்று நோயாளர்கள் என்றார்.

இந் நோயாளர்களில் 70 சத வீதமானோர் கடைசி தருணத்தில்தான் மருத்துவமனைகளை நாடுவதாக தேசிய புற்று நோய் கட்டுப்பாட்டு பிரிவு சுட்டிக் காட்டுகிறது.(செ-11)

# தாஜுதீன் கொலை வழக்கு

## முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபரின் மறியல் 24-ம் திகதிவரை நீடிப்பு

(கொழும்பு)

முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டிய குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோரின் விளக்கமறியல் எதிர்வரும் 24ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.



நாட்டின் பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பிலான சாட்சிகளை மறைக்க முற்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த மே மாதம் 23 ஆம் திகதி இவர்கள் இருவரும் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், வசீம் தாஜுதீனின் கொலை வழக்கு நேற்று புதன்கிழமை புதுக்கடை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2012ஆம் ஆண்டு இடம்பெற்ற வசீம் தாஜுதீனின் மரணம் தொடர்பில் சர்ச்சைகள் நிலவி வந்த நிலையில், தற்போதைய அரசாங்கத்தின் மீள் விசாரணையில் கொலை என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கொலையின் முக்கிய ஆதாரமாக கருதப்படும் சீ.சீ.டி.வி காணொளியில் காணப்படும் தெளிவின்மை காரணமாக குறித்த பதிவு எதிர்வரும் 22ஆம் திகதி கனடாவுக்கு மேலதிக ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்படவுள்ளது.

முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனாநாயக்க மற்றும் நாரஹேன்பிட்டிய குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோர் மீண்டும் தாக்கல் செய்திருந்த பிணை மனுக்களையும் நீதிமன்றம் நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# யாழ் பல்கலை வணிக முகாமைத்துவ பீட விரிவுரைகள் திங்களன்று ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் 2ஆம் மற்றும் 3ஆம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக பதிவாளர் அறிவித்துள்ளார்.


விஞ்ஞானபீடத்தைச் சேர்ந்த தமிழ் - சிங்கள மாணவ குழுக்களுக்கிடையில் கடந்த ஜூலை மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்ற கைகலப்பின் காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மூடப்பட்டது. இந்நிலையில், ஜூலை மாதம் 20 ஆம் திகதி மருத்துவ, விவசாய மற்றும் சித்த வைத்திய பீடங்களின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பித்திருந்தன.

அதனைத்தொடர்ந்து, ஜூலை மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் கலைப்பீடத்தின் முதலாம் வருட மாணவர்கள் மற்றும் வணிக முகாமைத்துவ பீடத்தின் முதலாம் மற்றும் இறுதியாண்டு வருடாங்களின் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் சுமுகமாக ஆரம்பிப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் தலைமையிலான குழுவினர கடந்த 4 ஆம் திகதி சந்தித்துக் கலந்துரையாடினர்.

இதனடிப்படையில், தற்போது முகாமைத்துவ பீடத்தின் கல்விச் செயற்பாடுகளையும் முழுமையாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (செ-11)

# மரண அறிவித்தல்



(சி-5417)

## திருமதி பொன்னம்மா நடேசலிங்கம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**

*கரணவாயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்மா நடேசலிங்கம் நேற்று (10.08.2016) புதன்கிழமை காலமாகி விட்டார்.*

*அன்னார் காலஞ்சென்ற நடேசலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செந்தூரன் அவர்களின் தாயாரும், ராதா செந்தூரன் அவர்களின் மாமியும், விதுரபிமன் அவர்களின் பேர்த்தியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.08.2016) வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**நாவற்கலட்டி, கரணவாய், கரவெட்டி.**

**தகவல் : குடும்பத்தினர்**
**தொ.பே : 077 023 8158**

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

கீழ்க்காணும் உணவகங்களை நடத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பதிவாளர் பணிமனையில் 26.08.2016 ஆம் திகதி மு.ப. 10 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| இல | உணவகங்கள் |
|---|---|
| 01 | பிரதான உணவகம் 1 - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி |
| 02 | பிரதான உணவகம் 2 - யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி |
| 03 | RAFA உணவகம்- மருதனார்மடம் |
| 04 | பொறியியல் பீட உணவகம்- அறிவியல் நகர், கிளிநொச்சி |

மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 2000/= உம் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 500/= உம் தனித்தனியாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மக்கள் வங்கி கணக்கு இலக்கம் 162- 1001-60000-880 இற்குச் செலுத்தி அல்லது பல்கலைக் கழக நிதிக்கிளையில் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினைச் சமர்ப்பித்து கேள்விப்படிவங்களை இப் பல்கலைக் கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து அல்லது கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகத்தில் அமைந்துள்ள பிரதிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப்படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

**மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.**

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (சி-5422) **11.08.2016**

# அரச நிறுவனங்களை தனியார் துறைக்கு விற்பனை செய்வது அரசின் கொள்கையல்ல

## ஜனாதிபதி மைத்திரி திட்டவட்டம்



(கொழும்பு)

அரச நிறுவனங்களை தனியார் துறைக்கு விற்பனை செய்ய அரசாங்கம் தயாராகி வருவதாக சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டபோதும் அரச நிறுவனங்களை விற்பனை செய்வது தமது அரசாங்கத்தின் கொள்கையல்ல என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களாக இருந்தால் அவற்றின் வருமானத்தை அதிகரித்து இலாபம் ஈட்டும் நிலைக்கு கொண்டுவருவதற்கு எடுக்க வேண்டிய தீர்மானங்களை எடுப்பதோடு, சில சந்தர்ப்பங்களில் அது தொடர்பாக தனியார் துறையுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதேயன்றி ஒருபோதும் அந்த நிறுவனத்தை தனியார் துறைக்கு விற்கப் போவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.நேற்று முற்பகல் இடம் பெற்ற இலங்கைத் துறைமுக அதிகார சபையின் CFS 1 கப்பற்சரக்கு கொள்கலன்கள் செயற்பாட்டு மத்திய நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். (இ-7-10)

## முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றல் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் கவலை

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டதாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக்க கவலை வெளியிட்டுள்ளார்.

அவர்களுக்கு இவ்வாறு விஷ ஊசியை உடலில் ஏற்ற வேண்டிய அவசியம் இல்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளில் நூற்றுக்கும் மேற்பட்டோர் தற்போது உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், குறித்த முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு முகாம்களில் வைத்து ஊசிகள் ஏற்றப்பட்டதாகவும், இரசாயனம் கலந்த உணவுகள் வழங்கப்பட்டதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், புனர்வாழ்வு பெற்ற போராளிகளை சர்வதேசத்தின் உதவி கொண்டு பரிசோதனை செய்ய வேண்டும் எனவும் கோரிக்கைகள் எழுந்தன.

இதனையடுத்து, நேற்று முன்தினம் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்களின் உடல்நிலையை சர்வதேச வைத்தியர்கள் நியமிக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென வட மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது, வட மாகாண முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் குறித்த பிரேரணையினை சமர்ப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## ராணுவத்தினருக்கு அச்சுறுத்தலாக மாறும் காணாமற் போனோர் அலுவலகம்-திஸ்ஸ

(கொழும்பு)

காணாமற் போனோர் தொடர்பாக அமைக்கப்படவுள்ள அலுவலகமானது அரசியல்வாதிகள் மற்றும் இராணுவத்தினருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

பொரளையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன் போது தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், இராணுவத்தை அச்சுறுத்தும் நடவடிக்கையின் முதற்கட்டமே குறித்த அலுவலகம்.

இந்த அலுவலகமானது நாட்டின் அரசியலமைப்பு மற்றும் உயர்நீதிமன்றம் ஆகியவற்றுக்கு கீழ் இல்லாமல் அதிகாரங்களை மீறி செயற்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7-10)

## போதைப் பொருளை ஒழித்துக்கட்டுவதில் பிராந்திய ரீதியிலான கூட்டுறவு அவசியம்

### ஜனாதிபதி வலியுறுத்து

(கொழும்பு)

போதைப்பொருள் எமது இளைஞர்களை பெரிதும் பாதித்து வருவதாகத் தெரிவித்துள்ள ஜனாதிபதி போதைப் பொருட்கள் மற்றும் போதைப் பொருள் கடத்தலை முற்றாக ஒழித்துக்கட்டுவதற்கு பிராந்திய ரீதியான கூட்டுறவு மிகவும் அவசியம் என்றும் தெரிவித்துள்ளார்.

அடுத்து நடைபெறவுள்ள பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்பின் (SAARC) உச்சிமாநாட்டின் போது இவ்வாறானதொரு கூட்டுறவைக் கட்டியெழுப்புவதற்கு தாம் அழைப்பு விடுக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் விமானப்படை தளபதி எயார் சீப் மார்சல் சொஹைல் அமானை நேற்று முன்தினம் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் சந்தித்தபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7-10)

## பொது மக்களுக்கு எதிரான சட்டங்களை தோற்கடிப்போம்

### தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு



பொதுமக்கள் மீது வரியை சுமத்தும் வகையிலான வரிச் சட்டங்கள் கொண்டு வரப்பட்டால் அதனை தோற்கடிப்போம்என நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் மீது வரியை சுமத்தும்நோக்கில் அரசாங்கம் வற் வரியை மீளவும் கொண்டு வந்தால் அதனையும் தோற்கடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.வற் வரி சட்டத்தை சூன்ய மாக்குமாறு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு நாட்டு மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும்.இந்த வெற் றியை மக்களு க்கு கிடைக்க செய்ய கூட்டு எதிர்க்கட்சியினர் முக்கிய பங்கினை ஆற்றினர். இந்த சட்டத்திற்கு அமைச்சரவை யின் அனுமதி கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

அமைச்சரவையின் அனுமதியில்லா சட்டமொன்றை எவ்வாறு நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முடியும். இது குறித்து நாடாளுமன்ற பொதுச் செயலாளர் தேடிப்பார்க்க வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகள் நாடாளுமன்றினை இழிவுபடுத்தும் வகையிலானது என தினேஷ் குணவர்தன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

## ரத்ன தேரருக்கும் இரசாயன உணவு

### உரியநேரத்தில் மௌனத்தை கலைப்பேன் என்கிறார்

உரிய தருணத்தில் நீண்ட மௌனத்தை தான் கலைப்பேன் என ஜனாதிபதி ஆலோசகரான அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.மூலோபாய நிறுவன முகாமைத்துவ நிலையத்தின் தேசிய நுகர்வோர் வலையமைப்பை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நஞ்சு இல்லாத நாட்டை உருவாக்கும் நோக்கத்தில் தாம் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.இரசாயனங்கள் கலந்த உணவுப் பொருட்களையே தொடர்ந்தும் நுகரும் நிலைமை காணப்படுவதாகவும் அத்துரலிய ரத்ன தேரர் மேலும் சுட்டிக்காட்டினார். (இ-7-10)

## 1,595 முறைப்பாடுகளில் 237 விசாரணைகள் நிறைவு

பாரிய ஊழல் மோசடி தொடர்பாக விசாரணை நடத்திவரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு 1595 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இதில் 237 வழக்குகள் நிறைவடைந்துள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2010ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த வருடம் ஜனவரி மாதம் வரை அரச நிறுவனங்களில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாக கிடைத்த முறைப்பாடுகளில் 1049 முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாகவும் அதில் 237 முறைப்பாடுகளின் விசாரணைகள் நிறைவுற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 689 முறைப்பாடுகள் ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் 43 முறைப்பாடுகள் வேறு நிறுவனங்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 146 முறைப்பாடுகளில் ஆரம்பகட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் பாரிய ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளில் இன்னும் 62 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் செய்யப்படவுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## எட்டு பல்நோக்கு போர் விமானங்களை கொள்வனவு செய்ய அரசு நடவடிக்கை

### ஜனாதிபதியின் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கை விமானப் படைக்காக பல்நோக்கு போர் விமானங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய ஆயுதங்களையும் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்வைத்த யோசனைகளுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. ஓர் அரசிடமிருந்து பிறிதொரு அரசுக்கு பொருட்கொள்வனவு செய்யும் அடிப்படையின் கீழ் (Government to Government Basis) போர் விமானங்கள் வழங்கும் ஆர்வம் கொண்ட விமான உற்பத்தியாளர்கள், உதவி உற்பத்தியாளர்கள். அதிகாரம் பொருந்திய அரச அதிகாரிகள் மூலம் விருப்பத்தின் அடிப்படையில் (Expressions of Interest) இலங்கை விமானப்படைக்காக இந்த விமானங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய ஆயுதங்களையும் கொள்வனவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

### பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைக்க வலியுறுத்தி

# முதியவர் ஒருவர் உணவு தவிர்ப்பு போராட்டம்


ஓமந்தையில் பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப்படவேண்டும் என கோரி ஓமந்தை பகுதியை சேர்ந்த முதியவரொருவர் நேற்று தொடக்கம் காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தா. மகேஸ்வரன் என்ற 73 வயதுடைய முதியவரே வவுனியாவில் அமைக்கப்படவுள்ள பொருளாதார மத்திய நிலையம் ஓமந்தைப் பகுதியில் அமைக் கப்படவேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளதுடன் இது தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், வட மாகாண முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள தா.மகேஸ்வரன் தெரிவிக்கையில்,

வவுனியாவிற்கு பொருளாதார மத்திய நிலையம் ஒன்றை அமைப்பதற்கு 2010 ஆம் ஆண்டே தீர்மானிக்கப்பட்டு நிபுணர் குழுவின் ஆலோசனையின் படி ஓமந்தையில் 18 ஏக்கர் காணியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அப்போதைய இணைத்தலைவர்களான ஆளுநர் சந்திரசிறி, அமைச்சர் றிசாட் பதியுதீன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், நூர்தீன் மசூர், நுனைஸ்பாறுக் மற்றும் அரச அதிகாரிகள் என 82 பேர் கொண்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலும ஏகமானதாக அந்த இடம் தெரிவு செய்யப்பட்டது.



இந்நிலையில் தற்போது பொருளாதார மத்திய நிலையத்தை ஒட்டுமொத்த விவசாயிகளினதும், ஒருங்கிணைப்புக்குழுவினதும முடிவுக்குமாறாக வேறு இடத்தில் அமைக்க




முயற்சி எடுக்கப்படுவதை எதிர்த்தே இநத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளேன்.


சாதகமான பதில் கிடைக்கும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் இருப்பேன். எனது பிணத்தின் மேல் தான் பொருளாதார மையம் அமைக்கப்பட வேண்டும் என்றால் அவ்வாறே அமையட்டும் எனத்தெரிவித்தார். (செ-250)

# பிரேசிலுக்கு முதல் தங்கம்

பிரேசிலுக்கு முதல் தங்கப்பதக்கத்தை ஜூடோ வீராங்கனை ரபெலா சில்வா வென்று கொடுத்தார்.

ரியோ ஒலிம்பிக் போட்டியின் 3-வது நாளில் போட்டியை நடத்தும் நாடான பிரேசில் முதல் தங்கப்பதக்கத்தை கைப்பற்றியது. பெண்களுக்கான ஜூடோ போட்டியில் 57 கிலோ உடல் எடைப்பிரிவில் இறுதி சுற்றில் பிரேசிலை சேர்ந்த 24 .வயதான ரபெலா சில்வா, உலகின்நம்பர் வன்வீராங்கனையான சுமியா டோர்ஜ்சுரெனை (மங்கோலியா) வீழ்த்தி தங்கப்பதக்கத்தை தனதாக்கினார்.

குடிசைப் பகுதியில் பிறந்தவரான ரபெலா சில்வா 2013-ம் ஆண்டு உலக போட்டியிலும தங்கப்பதக்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரேசில் முதல் தங்கப்பதக்கத்தை



வென்றதை அந்த நாட்டு ரசிகர்கள் ஒன்று திரண்டு ஆட்டம், பாட்டத்துடன் கொண்டாடி மகிழ்ந்தனர்.

தங்கம் வென்ற பிறகு ரபெலா சில்வா கருத்து தெரிவிக்கையில், 'ஜூடோ தான் எனது வாழ்க்கையாகும். உள்ளூர் ரசிகர்களின் ஆதரவு எனக்கு நல்ல ஊக்கம் அளித்தது. இந்த பதக்கம், பிரேசில் அணி இந்த வாரத்தில் மேலும் பல பதக்கங்களை வெல்ல திறவு கோலாக அமையும் என்று நம்புகிறேன் என்றார். (க)

# பதக்க பட்டியலை உயர்த்தினார் தங்க வேட்டை நாயகன் பெல்ப்ஸ்

ஒலிம்பிக்கின் "தங்க வேட்டை நாயகன்" என்று அழைப்படும் மைக்கேல் பெல்ப்ஸ் தற்போது ரியோ ஒலிம்பிக்கில் மேலும் 2 தங்கம் வென்று தனது தங்க பதக்க வேட்டையை 21 ஆக உயர்த்தியுள்ளார்.

அமெரிக்காவை சேர்ந்த மைக்கேல் பெல்ப்ஸ், நீச்சல் வீரரான இவர் ஒலிம்பிக்கில் அதிக தங்கம் (18), அதிக பதக்கம் (22) வென்று சாதனை வீரராக இருந்தார்.

இந்நிலையில் நடந்த 4X100 மீ தொடர் நீச்சல் பந்தயத்தில் அமெரிக்க அணி தங்கம் வென்றது.

அமெரிக்க அணி பந்தய தூரத்தை 30 நிமிடம் 09.02 வினாடியில் கடந்தது. 4 பேர் கொண்ட அந்த அணியில் 31 வயதான பெல்ப்சும் இடம் பெற்றிருந்தார்.

இதன் மூலம் அவரது தங்க பதக்கங்களின் எண்ணிக்கை 19 ஆகவும், மொத்த பதக்கம் 23 பதக்கம் (19 தங்கம், 2 வெள்ளி, 2 வெண்கலம்) ஆகவும் உயர்ந்து இருந்தது.

இந்த நிலையில் நேற்று நடந்த நீச்சல் பந்தயத்தில் பெல்ப்ஸ் மேலும் 2 தங்கம் வென்றார்.

200 மீற்றர் பட்டர்பிளை பிரிவில் அவர் 1 நிமிடம் 53:40 வினாடியில் தூரத்தை கடந்து முதலிடத்தை பிடித்து தங்கம் வென்றார்.


இதைத் தொடர்ந்து நடந்த 4X200 மீற்றர் தொடர் பிரிஸ்டைலிலும் தங்கம் வென்றார்.

சோனர் டையர், டவுன்லி, ஹாஸ், ரியான லாச்செட் மைக்கேல் பெல்ப்ஸ் ஆகியோர் அடங்கிய அமெரிக்க அணி பந்தய தூரத்தை 7 நிமிடம் 00.66 வினாடியில் கடந்தது.

நேற்று பெற்ற 2 தங்கம் மூலம் ஒலிம்பிக் போட்டியில் பெல்ப்ஸ் வென்ற தங்கத்தின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்தது.

ஒட்டுமொத்தமாக ஒலிம்பிக்கில் 25 பதக்கம் வென்று முத்திரை பதித்து இருக்கிறார். அவரை யாரும் நெருங்க முடியாத அளவுக்கு உச்சத்தில் இருக்கிறார்.

பெல்ப்சுக்கு இந்த ஒலிம்பிக் போட்டியில் மேலும 2 போட்டிகள் (4X100 மீறறர் மெட்லி, 200 மீற்றர் தனிநபர் மெட்லி) இருப்பதால் அவரது தங்கம் எண்ணிக்கை மேலும் உயரலாம். (க)





# துப்பாக்கி சுடும் போட்டியில் சுவிஸுக்கு வெண்கலம்

ரியோ டி ஜெனீரோவில் நடைபெற்று வரும ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் முதன் முறையாக சுவிட்சர்லாந்து இடம் பிடித்துள்ளது.

இதில் சுவிட்சர்லாந்தின் துர்காவ் பகுதியை சேர்ந்த 47 வயதான Heidi Diethelm Gerber துப்பாக்கி சுடுதல் போட்டியில் வெணகல பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

சீனாவின் ஸாங் ஜியான் ஜியான் என்பவரை 8 : 4 என்ற புள்ளிக் கணக்கில் வீழ்த்தி ஹைதி இந்த வெற்றியை ஈட்டியுள்ளார். தகுதி சுற்று போட்டியில் 8 பேரில் ஏழாவது இடத்தை தக்கவைத்துக் கொண்ட ஹைதி, அடுத்துள்ள சுற்றுகளில் சுதாரித்துக் கொண்டு போட்டியிட்டுள்ளார்.



அரையிறுதியில் அபாரமாக போட்டியிட்ட ஹைதி 4-வது இடத்தை கைப்பற்றி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். பினனர் நடைபெற்ற இறுதிப் போட்டியில் 3-வது இடம் பிடித்த ஹைதி வெண்கல பதக்கத்தை கைப்பற்றினார். இதுவரையான ஒலிம்பிக் போட்டிகளில துப்பாக்கி சுடுதல் பிரிவில் முதன் முறையாக சுவிஸ் பெண்மணி ஒருவர் பதக்கம் வென்றுள்ளது நினைவில் கொள்ளத்தக்கது.

ஆனால் ஒலிம்பிக் போட்டிகளில் இதுவரை குறிப்பிட்ட பிரிவில் 20 பதக்கங்களை சுவிஸ் ஆடவர் அணி கைப்பற்றியுள்ளது.

Obwalden பகுதியை சேர்ந்த Michel Ansermet என்பவர் கடந்த 2000 ஆம் ஆண்டு சிட்னி ஒலிம்பிக்கில் பதக்கம் வென்றுள்ளார். (க)


# தனிநபர் வில்வித்தையில் காலிறுதியில் இந்திய வீரர்

ரியோ ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான தனிநபர் வில்வித்தையில் இந்தியாவின் அதானுதாஸ் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்குள் நுழை ந்தார்.

ரியோ ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான வில்வித்தை ரிகர்வ் பிரிவின் வெளியேற்றுதல் சுற்றில் இந்திய வீரர் அதானு தாஸ், நேபாள வீரர் ஜித் பஹதுர் முக்தானை எதிர்கொண்டார். இதில் அபாரமாக செயல்பட்ட அதானுதாஸ் 6-0 என்ற புள்ளி கணக்கில் பஹதுருவை பந்தாடினார். கடைசி கேமில் மட்டும் அதானு மூன்று முறை துல்லியமாக 10 புள்ளிகளை குவித்து பிரமாதப்படுத்தினார்.

இதன் பின்னர் அடுத்த சுற்றில் அதானு தாஸ், அட்ரியன் ஆன்ட்ரஸ் புயன்டெஸ் பெரேசை (கியூபா) சந்தித்தார். இதில் கடும் சவால்களை எதிர்கொண்ட போதிலும் தடைகளை வெற்றிகரமாக கடந்த அதானு தாஸ் 6-4 என்ற புள்ளி கணக்கில் அட்ரியனை தோற்கடித்து கால் இறுதிக்கு முந்தைய சுற்றுக்குள் நுழைந்தார்.

கொல்கத்தாவை சேர்ந்த 24 வயதான அதானுதாஸ் கால்இறுதிக்கு முந்தைய சுற்றில் பலம் வாய்ந்த தென்கொரிய வீரர் லீ செங் யுனுடன் மோதுகிறார். லீ செங் யுன், ரிகர்வ் அணிப்பிரிவில் தங்கம் வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆட்டம் நாளை நடபெறவுள்ளது. (க)



# ஒரு மாத காலத்தில் எட்டு லட்சம் பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவு

(கொழும்பு)

ஒரு மாத காலத்தில் எட்டு இலட்சம் பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கத்தவர்களாக இணைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர்பாடல் பிரிவு பொறுப்பாளர் சுதத் சந்திரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை வாக்காளர்களில் மூன்றில் இரண்டு பங்கினரை கட்சியின் அங்கத்தவர்களாக உள்வாங்கிக் கொள்வதே தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாக அமைந்துள்ளதாகவும் கட்சியின் 70ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வினை முன்னிட்டு 30 இலட்சம் அங்கத்தினரை இணைக்கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வரலாற்றில் முதல் தடவையாக இணையத்தின் ஊடாக கட்சி அங்கத்துவ முறைமை அறிமுகம் செய்யப்பட்டது.

இதிலும் பெரும் எண்ணிக்கையிலான அங்கத்தவர்கள் இணைந்து கொண்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)


## கண்ணீர் அஞ்சலி



(சி-5418)

**பற்குணராசா பாலமுருகன்(குகன்)**

**[அல்பா மிக்சர் உரிமையாளர்]**

அவர்களின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

உரிமையாளர்: வலம்புரி T.C, நவாலி.



# கண்ணீர் அஞ்சலி

## நடராசா அன்னம்மா

வாரிவளவு காரைநகர்

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராசா அன்னம்மா அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



(சி-5420)

383, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
E.S.P. நாகரத்தினம் குடும்பம்


# இராசி பலன்

11.08.2016
(ஆடி 27, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
அட்டமி நண்பகல் 12.01 மணிவரை
விசாகம் மாலை 5.37 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
அட்டமி-நவமி

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரேவதி, அச்சுவினி<br>பகல் 11.09 மணிக்கு<br>விருச்-சந்தி | | சூரி |
| | | | ராகு<br>சுக்<br>புத |
| | சனி<br>செவ் | சந் | குரு |

**மீனம்** அன்பால் சாதித்துக் காட்டும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம்.

**மேடம்** இறை வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், தேகாரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், உறவினர்கள் வழியில் சுப செலவுகள் ஏற்படலாம்.

**இடபம்** ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் அக்கறை உருவாகும், சென்ற இடத்தில் சிறப்புகளைப் பெறுவீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**மிதுனம்** வீட்டை பராமரிப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறலாம்.

**கடகம்** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், உடல்நலன் சீராகும்.

**மகரம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், தனவரவு திருப்திகரமாக அமையும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.

**சிம்மம்** வெளியூர்த் தொடர்புகள் சிறப்பாக இருக்கும், வாகன சுகமுண்டு, சிந்தித்து செயற்பட்டு சிறப்புகளைக் காண வேண்டிய நாள், பெற்றோர் நலனில் அக்கறை கூடும்.

**தனுசு** ஊர்மாற்றம், தொழில் மாற்றம் என்பன இடம்பெறலாம், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப செலவுகள் ஏற்படலாம்.

**விருச்சிகம்** குடும்ப உறுப்பினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பணவரவு திருப்திதரும், விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** வருமானம் வரும் வழியைக் கண்டுகொள்ள முயற்சிப்பீர்கள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**கன்னி** உடன் பிறப்புக்கள் உங்களுக்கு பக்கபலமாக இருப்பர், நீண்ட நாளைய பிணக்குகளில் திடீர் திருப்பங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையலாம்.





இலங்கை வங்கியின் 77ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு திருநெல்வேலி கிளையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான நிகழ்வு இம் முறையும் 100 இற்கும் மேற்பட்ட கொடையாளர்களின் பங்களிப்புடன் நடைபெற்றது. 2011 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக 6ஆவது தடவையாக நடைபெற்ற இவ் இரத்ததான நிகழ்வின் மூலம் இலங்கை வங்கியின் திருநெல்வேலி கிளையானது தனது சமூக நல நடவடிக் கையில் தொடர்ச்சியான பங்களிப்பினை வழங்கி யதனை கௌரவிக்கும் முகமாக தேசிய இரத்த வங்கியினால் வடமாகாணத்தில் கடந்த ஆண்டு கௌரவிக்கப்பட்ட ஒரே நிறுவனமாகவும் திகழ்கின்றது. இவ் இரத்ததான நிகழ்வினை இலங்கை வங்கியின் வட மாகாண உதவி பொது முகாமையாளர் பிரபாகரன். வட மாகாண செயற்பாட்டு முகாமையாளர் சுந்தரலிங்கம், கிளை முகாமையாளர் பிருதிவிராஜ் ஆகியோர் பார்வையிட்டனர்.

## இன விடுதலைக்காக ஆயுதம் ஏந்தியவர்களை

# புனர்வாழ்வு என்ற பெயரிலே நடைபிணங்களாக்குவதை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை

## அகில இலங்கை இந்து மாமன்றம் கடும் ஆட்சேபனை

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களின் உரிமைக்காக ஆயுதமேந்திப் போராடினார்கள் அல்லது போராட்டத்திற்கு உதவினார்கள் என்ற ஒரே காரணத்திற்காக எமது இளம் சமூகத்தை புனர்வாழ்வு என்ற பெயரில் நடைபிணங்களாக்குவதை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் கடும் ஆட்சேபனை வெளியிட்டுள்ளார்.**

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், "இலங்கை இந்து மன்ற அமைப்புக்களினதும், ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றிய




மாகத்" திகழும் அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த ஆறு தசாப்தகாலமாக நாடளாவிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அதன் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்கின்றது.

இவ்வாறு எமது சமய, சமூக, பொருளாதார, கல்வி மற்றும் சமூக நலன் திட்டங்களை முன்னெடுக்கும் நேரத்தில் எமது நெஞ்சங்களைக் கலங்கவைக்கும் பிறிதொரு துயரச் செய்தி எம்தலைமேல் இடியென விழுவதை உணர்கின்றோம்.

அதுவே-சரணடைந்த-கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் உள்ளிட்ட தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு "புனர்வாழ்வு அளிக்கின்றோம்" என்ற பெயரில் இனம் தெரியாத ஊசி ஏற்றப்படுகின்றது-என்பதாகும்.

புனர்வாழ்வு என்ற பெயரில் தம்மை சமூகத்துடன் இணைக்கும்போது ஏதோவொரு தடுப்பூசியை தம் உடலில் ஏற்றுகின்றனர் எனவும் இது நாளடைவில் தமக்கு உடல்,உள ரீதியான தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் சிலர் இதனால் மரணத்தைக் கூட தழுவு கின்றனர் என்ற செய்தி எம் நெஞ்சங்களைப் பிழிந்தெடுக்கின்றது.

இவ்வாறான ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படு மிடத்து அதன் உண்மைத் தன்மையை மருத்துவ ரீதியாகப் பரீட்சித்து அதன் பெறு பேற்றை மக்களுக்கு அறிவிப்பதை விடுத்து, அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை என்ற தோரணையில் அரசாங்கமும், சுகாதார அமைச்சரும் விளக்கமளிப்பது எமக்கு மிகுந்த வேதனையைத் தருகின்றது.

உண்மை நிலையை அறிய வேண்டுமாயின் பாதிப்புக்குள்ளான அனைவருக்கும் மருத்துவப் பரிசோதனை நடத்துவதே ஒரே வழியாகும்.

அவ்வாறு ஊசி ஏற்றப்பட்டது உண்மையாயின் அதன் காரணத்தையும், இதற்கான காரண கர்த்தாக்களையும் கண்டறிந்து அவற்றை மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவது அரசின் கடமையல்லவா?

அதைவிடுத்து "அப்படி எதுவும் நடக்கவில்லை" யெனப் பொறுப்புவாய்ந்தவர்கள் கூறுவது எவரைக் காப்பாற்றுவதற்கென பாதிப்புற்ற சமூகம் கேட்கின்றது.

அவ்வாறு ஒரு தடுப்பூசி ஏற்றப்பட்டிருந்தால் அது எமது வம்சவிருத்தியை இல்லாததாக்கி, எமது சமூக த்தை அழிக்கும் நடவடிக்கையாகக் கூடக்கருதலாம். இது எவ்வகையிலும் நியாயப் படுத்த முடியாத குற்றமல்லவா?

எனவே இராணுவ முகாம்களிலோ, புனர்வாழ்வு நிலையங்களிலோ இவ்வாறான சமூக அழிப்பு நடவடிக்கைகள் நடைபெறுவதை உடன் தடுத்து நிறுத்தவும், அதனால் எவரும் பாதிக்கப்பட்டிருந்தால் அவர்களை உடன் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி மாற்றுச்சிகிச்சை அளித்து அவர்கள் உயிர்களைக் காப்பாற்றுமாறும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம். அத்தோடு இவ்வாறான இன அழிப்பு நடவடிக்கைகள் நடந்திருந்தால் அதற்கான சூத்திரதாரிகள் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட்டு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன் இதனால் பாதிக்கப்பட்ட சகல பிரஜைகளுக்கும் தகுந்த நட்டஈடு வழங்கப்படவும் வேண்டும். இதுவே சகல சமூகத்தவரையும் ஒன்றிணைத்துச் செல்லும் முதற்படியாக அமையும்.

தமது மக்களின் உரிமைக் காக ஆயுதமேந்திப் போராடினார்கள் அல்லது போராட்டத்திற்கு உதவினார்கள் என்ற ஒரே காரணத்திற்காக எமது இளம் சமூகத்தைப் புனர்வாழ்வு என்ற பெயரில் நடைபிணங்க ளாக்குவதை எம்மால் ஜீரணிக்க முடியவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் யாவரும் பாராளுமன்றத்தில் ஒருமித்துக் குரல்கொடுத்து எமது இளம் சமூகத்தைக் காப்பாற்ற வேண்டுமெனவும் பகிரங்க வேண்டுகோள் விடுக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பான விழிப்புணர்வு நாடகம் சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கற்கோவளம் மற்றும் வல்லிபுரம் கிராம சேவையாளர் பிரிவில் அண்மையில் நிகழ்த்தப்பட்டது.

(படங்கள்: அராலிச் செய்தியாளர்)

## தமிழ்ச்சங்கம் நடத்தும் புத்தகத் திருவிழா

நல்லூர்ப் பெருந்திருவிழாவையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நடத்தும் புத்தகத் திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி மஞ்சத் திருவிழா நாளில் ஆரம்பமாகி செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை நல்லூர் வடக்கு வீதியில் உள்ள கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் மாத்திரம் காட்சிப்படுத்தப்படுவதற்கும் விற்பனை செய்யப்படுவதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்படவிருப்பதால் ஆர்வமுடையோர் தங்கள் நூல்கள் மற்றும் விலை விபரங்களை பொதுச் செயலாளர், யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம், இல.90. ஞானவைரவர் வீதி, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் என்ற முகவரிக்கு (பேராசிரியர் அ.சண்முகதாஸ் இல்லம்) அனுப்பி வைக்குமாறும் அல்லது 021 222 3457 என்ற தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொள்ளுமாறு தமிழ்ச்சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (இ-5)

# செய்தித்துளிகள்

## சற்சங்க அறநெறி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். காரை திருமதி சண்முகம் மனோன்மணி ஞாபகார்த்த சற்சங்கமும் வவுனியா வாழும் கலை அமைப்பும் மாங்குளம் -அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலயமும் இணைந்து நடத்தும் மூன்றாவது சற்சங்க அறநெறி விழா எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அம்பகாமம் மம்மில் பிள்ளையார் ஆலயமண்டபத்தில்இடம் பெறவுள்ளது. (இ-3)

## 2016-2017ம் ஆண்டிற்கான அமர்வு

இன்னர் வீல் கழகத்தின் 2016-2017 ஆம் ஆண்டிற்கான அமர்வு நாளை 11 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப. 2.30 மணிக்கு ரி.சி.ரி. மண்டபத்தில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தினராக 2016-2017 ஆம் ஆண்டின் மாவட்டத் தலைவர் திருமதி. விஜி கேதீஸ்வரன் கலந்து கொள்வார். (இ-3)

## காலியில் இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதி விபத்து

### 38 பேர் காயம்

காலியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 38 பேர் காயமடைந்துள்ளனர்.

காலி லபதுாவ பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரண்டு பேருந்துகள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்தவர்கள் காலி கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் குறித்து அக்மீமன பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (இ-7-10)

## இலங்கை வான்பரப்பில் ஓர் அதிசயம்; மர்ம ஒளியால் ஆச்சரியத்தில் மக்கள்

இலங்கையில் குருநாகல் மாவட்டத்தின் தஹய்யாகமுவ மற்றும் தெனியாய பிரதேச வான் பரப்பில் நேற்று முன்தினம்மர்மஒளிஒன்றினை பிரதேசவாசிகள் அவதானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகவும் வேகத்துடன் குறித்த ஒளி மறைந்து சென்றதாகவும் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒளி மறைந்து சென்ற சில நிமிடங்களில் புதுவகையான நறுமணம் ஒன்றை பிரதேசவாசிகளால் நுகரக் கூடியதாக இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர். (இ-7-10)

## சீனாவில் நடைபெறும் 'கன்டன' சர்வதேச வர்த்தக கண்காட்சி

(கொழும்பு)

சீனாவில் ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறும் கன்டன் சர்வதேச வர்த்தக கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் வர்த்தகர்கள் 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழகத்துடன் நேரடியாகவோ அல்லது 021 222 8593 என்ற இலக்க தொலைபேசியூடாக தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என யாழ். வணிகர் கழகத்தால் 31.08.2016 ஆம் திகதிவரை பதிவுகளை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பசுமாடு திருட்டு

துன்னாலை குமரன் பகுதியில் கட்டி நின்ற பசுமாடு ஒன்றுதிருடப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொஸிலில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த 7 ஆம் திகதி இரவு பட்டியில் கட்டப்பட்டிருந்த மாடுகளில் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பசுமாடு திருட்டுப் போயுள்ளது.

இது தொடர்பில்மாட்டின் உரிமையாளர் மறுதினம் நெல்லியடி பொலிஸில்முறைப்பாடு புதிவு செய்துள்ளார்.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-60)

# நல்லூர் ஆலய சூழலில் இன்று

## தெய்வீக இசைச் சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 8 மணி வரை நடத்திவரும் தெய்வீக இசைச் சங்கமத்தில் இன்று 11 ஆம் திகதி வியாழக்கிழமை ஸ்ரீமதி மாதவராஜசர்மா சுவஸ்திக சர்மா, செல்வி.கிருஷ்ணவேணி கந்தசாமி, செல்வி வதனா திருநாவுக்கரசு ஆகியோரின்இசைசமர்ப்பணம் இடம்பெறும். (இ-3)

## தெய்வீக சொற்பொழிவு

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு உலக சைவத் திருச்சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் "தெய்வீகச் சொற்பொழிவு" நிகழ்வுகளில் இன்று 11 ஆம் திகதி வியாழக்கிழமை நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் ஆசிரியர் மு.நித்தியானந்தாவின் "வேல் உண்டு வினைதீர்க்க" எனும் தலைப்பில் சொற்பொழிவு இடம்பெறும். (இ-3)

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணிவரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று 11 ஆம் திகதி வியாழக்கிழமை பாட்டு-திருமதி. சிவரஞ்சினி ரமணா, வயலின் -சு.கோபிதாஸ், மிருதங்கம்- பிரம்மஸ்ரீ வி.ரமணா ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## ஆன்மீக சொற்பொழிவு

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6 மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. இன்று வியாழக்கிழமை அடிப்படை மனித உரிமை சட்டக்கல்வி பயிற்றுவிப்பாளர் வி.சுமதீஸ்வரனின் கந்தன் கருணை பற்றிய சிறப்பு சொற்பொழிவு இடம்பெறும். (இ-7)



அன்பு வாசகர்களே!

நல்லூர் முருகப் பெருமானின்
மகோற்சவ காலத்தில்
வலம்புரியில் வெளிவரும்

நல்லைக்கந்தன் பாமாலைக்கு

உங்கள் கவிதைகளை

பிரதம ஆசிரியர் - வலம்புரி
இல.3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க முடியும்

## இலவச இலைக்கஞ்சி வழங்கல்

(யாழ்ப்பாணம்)


வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் முருகன் கோவில் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையில் சித்த மருத்துவப்பிரிவு வருடந்தோறும் நடத்தும் சிறப்பு சித்த மருத்துவ முகாம் இம்முறையும் சிறப்பாக நடைபெறுகின்றது.

கொடியேற்ற உற்சவத்தில் இருந்து தினமும் முற்பகல் 10-11 மணியளவில் இலவச இலைக்கஞ்சி வழங்கப்பட்டு வருகின்றது.

நாளை 12 ஆம் திகதியிலிருந்து சிறந்த சித்த மருத்துவ கண்காட்சி திறந்து வைக்கப்படவுள்ளது. இதில் பல பயன்தரு சித்த மருத்துவ மருந்துகள் விற்பனைக்காக காத்திருக்கின்றன.

அத்துடன் துறைசார்ந்த வைத்தியர்களினால் வைத்திய ஆலோசனைகளை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். (இ

# நல்லூரானுக்கு இன்று 4ஆம் திருவிழா



## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

ஆதியென வந்தமென வளவுகோ லற்றவொரு
அற்புதக் கந்தனுருவே
சோதியென நல்லைநகர்த் திருக்கோவில் தன்னிலே
சுடராக வோங்குங்கருவே
நீதியொடு நியாயங்கள் நின்னருளு மின்றியே
நிலைக்காது விந்தவுலகில்
நாதியில் லாதோற்கும் நற்கருணை நல்கிடும்
நல்லூரின் கந்தவேளே!

*கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்*



பொங்கிவரும் நந்தவனங்களெல்லாம்
கந்தா உன் பாதம் வந்தடையுதே
பறந்துவரும் சேவலும் மயிலும் கூட
கடம்பா உன்னிடத்தே சரணடையுதே
அலையென வரும் பக்த வெள்ளம்
முருகா உன்னிடத்தே அடிபணியுதே
நின் திருப்பாதந் தடம்பட்ட மண்ணை
அள்ளித் தின்றிடும் பாக்கியம் தேடி
ஓடிவரும் உன் அடியேனுக்கு
உன் அடிமண் தருவாய் குமரா
இப்பிறவி ஒன்றே போதுமடா அழகா

*-மாவை நா.கஜேந்திரன்*

## நல்லாட்சி புரியும் நாயகனே



நல்லை நகர் வீதியிலே
நானிலம் போற்றுமளவிற்கு
புலம்பெயர் நாடுகள் தோறும்
உன்னுடைய திருவிழாவினை
காண வருகின்ற
அடியவர்களுக்கு நல்லாட்சி
புரிந்திடுவாய் நல்லைக்குமரா

*-வி.காயத்திரி*

## "பாலை வனத்தை சோலை வனமாக்கு முருகா"

எம் தமிழர்களின் சொந்த மண்ணும் பறிபோச்சு
வடக்கு இள சுகளின் கலாசாரமும் பண்பும் மாறிவிட்டது
முன்னர் வருஷம் மும்மாரி பெய்த வடக்கு
சோலைவனம் மாறி இன்று பாலைவனமாய் போச்சு
நீர் நிலைகள் வற்றி கால்நடைகள் மடிகின்றது
காமுகர்கள் கூட்டம் கரைபுரண்டு ஓடுகின்றது
கொலை, கொள்ளை, வழிப்பறி கட்டுகடங்கவில்லை
இன்று தேவியர்களுடன் வீதிவலம் வரும் முருகா
இத்தனைக்கும் தீர்வுகாண வழி சமைக்காயோ கந்தா

*-க.கனகசபை, சண்டிலிப்பாய்*

## காத்திடுவான் கந்தன்



நல்லயம்பதியிலே
நலங்கள் யாவும் தருவதற்காக
புள்ளி மயில் மீது அமர்ந்திருந்து
அடியவர்களை காத்து வரும்
வன்னி மணாளனே
வாளெடுக்கும் கூட்டம் இங்கே
வாழுகின்ற காலமய்யா
வேலெடுத்து வாருமய்யா
மன வேதனையை தீருமய்யா

*-க.செல்வமலர், திருநெல்வேலி*

## இரணைமடுவில் அத்துமீறி

# புத்த விஹாரை அமைப்பதற்கு எதிரான போராட்டம் தொடர்பில் கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

**இரணைமடுவில் அத்துமீறி புத்த விஹாரை அமைப்பதற்கு எதிரான மக்கள் போராட்டம் குறித்த கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கிளிநொச்சி ஏ-9 வீதி பரவிப்பாஞ்சானிலுள்ள வசந்த வாசாவில் நடைபெறுமென தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டம் இரணைமடுக்குளத்திற்கு அருகில் அமைந்துள்ள கனகாம்பிகை ஆலயத்தின் 3 ஆம் வீதியில் இராணுவத்தினரால் புத்தர் சிலை வைக்கப்பட்டு பாரிய புத்த கோயிலாக மாற்றும் நோக்கில் மதில் அமைக்கப்பட்டு வருகின்றது. இச் செயற்பாடு உடனடியாக தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்.

மேற்படி கட்டுமான வேலைகளில் பெருமளவு இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டு அவசர அவசரமாக மதில் கட்டி எழுப்பும் வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்கம் தனது இராணுவ மற்றும் அரச அதிகாரத்தை பயன்படுத்தி மேற்கொள்ளும் மேற்படி அத்துமீறிய பௌத்தமயமாக்கல் நடவடிக்கையை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றது.

கட்டமைப்புசார் இன அழிப்பை மேற்கொள்வதன் மூலம் தமிழ்த் தேசத்தின் இருப்பை இல்லாது அழிக்கும் செயற்பாடுகளை அரசு கடந்த ஏழு தசாப்தங்களாக வடக்கு, கிழக்கில் எல்லைக் கிராமங்களில் தீவிரமாக மேற்கொண்டு வந்துள்ளது.

தற்போது தமிழர் தாயகத்தின் வடக்கு பிரதேசத்தின் இதயப் பகுதியாகவும், முழுமையாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதியாகவும் உள்ள கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுப் பிரதேசத்தில் தமிழரின் பண்பாட்டு அடையாளங்களை அழித்து பௌத்த மேலாதிக்கத்தை ஏற்படுத்தி படிப்படியாக சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் இராணுவக் குடியேற்றங்களை ஏற்படுத்தி தமிழர்களது சனத்தொகை பரம்பலை மாற்றியமைக்கும் நோக்கிலும் மேற்படி பௌத்த விஹாரை அமைக்கப்பட்டு வருகின்றது.

மக்களின் உணர்வுகளை கணக்கிலெடுக்காது தமது மேலாதிக்க மனோபாவத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளின் தொடர்ச்சிதான் இந்த ஆக்கிரமிப்பு. ஆட்சிகள் மாறியபோதும் சிங்கள தேசத்தின் அணுகுமுறை மாறுவதில்லை என்பதை இது மீண்டும் எமக்கு எடுத்துரைக்கிறது.

இராணுவத்தினரைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் மத்தியில் அச்சத்தையும், அமைதியின்மையையும் ஏற்படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் கட்டமைப்புசார் இனவழிப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமான மேற்படி பௌத்த கோவில் அமைக்கும் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பெரும்பான்மையான மக்களின் வாழ்வாதாரத்தின் உயிர் நாடியாக அமைந்துள்ள இரணைமடுக் குளத்தை சிங்கள ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதன் மூலம் ஒட்டுமொத்த கிளிநொச்சி மாவட்டத்தையும் சிங்களமயமாக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் இந்த பௌத்த விஹாரை அமைக்கும் செயற்பாட்டை தடுத்து நிறுத்த அனைவரும் வேறுபாடுகளை மறந்து ஒற்றுமையாக ஓரணியில் திரளவேண்டிய தருணம் இதுவாகும்.

மேற்படி அத்துமீறி பௌத்த விஹாரை அமைப்பதற்கு எதிரான பொதுமக்களது நடவடிக்கை தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் அனைத்து பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் ஆர்வலர்களை கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரணைமடு புத்தகோவில் விவகாரம் பௌத்த மதத்திற்கு முரணானது. ஒரு இந்துக் கோவிலின் அருகில் பௌத்த விஹாரை அமைப்பது. தவறில்லை.

ஆனால் மேற்படி கோவிலுக்கு அருகில் அமைக்கப்படுகின்ற பௌத்த விஹாரை அவ்வாலய நிர்வாகத்தின் அனுமதி இன்றியோ அல்லது மக்களின் விருப்பமின்றியோ அமைக்கப்பட்டதாயின் அது பௌத்த ஆகமத்திற்கு முரணானது என பாலியகொட கங்காராம பௌத்த விஹாரையின் மதகுரு விமலகனாவே தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொன்னகர் பகுதிக்கு நேற்று முன்தினம் வருகை தந்து உணவுப்பொருட்கள் மற்றும் ஆடைகள் அடங்கிய சிறிய பொதிகளை வழங்கி வைத்து விட்டு கூறுகையிலேயே மேற்கண்டவாறு அவர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)




## பாடசாலைகளுக்கு கட்டடங்கள் அமைப்பு

(மல்லாவி)

வடக்கு மாகாண நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 3 கோடி 74 இலட்சம் செலவில் துணுக்காய் கல்வி வலயத்தின் கீழுள்ள இரு பாடசாலைகளில் இரு மாடிகளைக் கொண்ட ஆரம்பக் கற்றல் வள நிலையம் மற்றும் கனிஷ்ட இடைநிலை ஆய்வுகூடம் என்பன அமைக்கப்பட உள்ளதாக வடக்கு மாகாண சபையின் அலுவலகத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது, துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/அனிஞ்சியன்குளம் தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் ஒரு கோடியே 76 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் இரு மாடிகளைக் கொண்ட ஆரம்பக் கற்றல் வள நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை மு/கற்சிலைமடு அ.த.க. பாடசாலையில் ஒரு கோடியே 98 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கனிஷ்ட இடைநிலை ஆய்வுகூடம் அமைக்கப்படவுள்ளது. மேற்படி இரு வேலைகளும் மிக விரைவாக ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் அத்தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

## வலயக்கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்

உலக வங்கியின் நிதி அனுசரணையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கல்வி மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியிலுள்ள 97 வலயக்கல்வி அலுவலகங்களின் எண்ணிக்கைகளை மேலும் அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சின் அலுவலக தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவது, நாட்டில் 1998 ஆம் ஆண்டு தொடக்கம் கல்வி வலய முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கமைய வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்களிலும் பன்னிரண்டு கல்வி வலயங்கள் நடைமுறையில் உள்ளன.

கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களில் பதினேழு கல்வி வலயங்கள் காணப்படுகின்றன.

இலங்கையில் அதிகூடிய கல்வி வலயங்கள் உள்ள மாகாணமாக கிழக்கு மாகாணம் காணப்படுகின்றது. கல்வி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்வி வலய முறைமையின் கீழ் சகல இன பாடசாலைகளையும் உள்ளடக்கியதாக முப்பது முதல் ஐம்பது பாடசாலைகளுக்கு ஒரு கல்வி வலயம் என்ற அடிப்படையில் புதிய கல்வி வலயங்கள் அமைக்கப்படவுள்ளன.

அதிகூடிய பாடசாலைகளைக் கொண்ட கல்வி வலயமாக தெஹியோவிட்ட கல்வி வலயம் உள்ளது. இங்கு 234 பாடசாலைகள் காணப்படுகின்றன. இப்புதிய கல்வி வலய முறைமையின் கீழ் மேலும் இரண்டு அல்லது மூன்று புதிய வலயக்கல்வி அலுவலகங்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-15)

## கிளிநொச்சி கண்ணகைபுரத்தில் மணல் அகழ்வு; தடுத்து நிறுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்ணகை புரத்தில் மணல் அகழ்வு காரணமாக சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சிப் பிரதேசத்துக்குட்பட்ட கண்ணகைபுரம் கிராமத்தின் ஆற்றுப்படுக்கையை அண்டிய பகுதியில் மணல் அகழ்விற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


இந்த மணல் அகழ்வினால் ஏற்படும் மண்ணரிப்பை தடுக்கும் வகையில் தென்னோலைகள், மணல் ஆகியவற்றினால் தடுப்பணை அமைக்கப்பட்டுள்ளது.

எனினும் இச் செயற்பாட்டினால் மண்ணரிப்பை தடுக்க முடியாதுள்ளது. இது வெறும் கண் துடைப்பு நடவடிக்கையாகவே காணப்படுகிறது.

இதனால் மண்ணரிப்பு காரணமாக சுற்றுச்சூழல் பாதிப்படைந்து வருவதாக அப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே அனுமதி உடனோ அல்லது அனுமதியின்றியோ இப் பகுதியில் மணல் அகழ்வை முற்று முழுதாக தடை செய்யுமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (2)






முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மணற்குடியிருப்பு கிராம மக்களின் பயன்பாட்டிற்காக யுஎன் ஹபிராட் நிறுவனத்தால் 2.9 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் நேற்று முன்தினம் மக்களிடம் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் உள்ளிட்ட விருந்தினர்கள் பலர் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள் :- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# இராணுவம் வெளியேறாவிடின் நாளை மறுதினம் போராட்டம்

## பரவிப்பாஞ்சான் காணி உரிமையாளர்கள் உறுதி



(மல்லாவி)

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் காணியில் உள்ள இராணுவத்தினர் வெளியேறி எமது காணிகள் ஒப்படைக்கப்பட வேண்டும். இல்லாவிடின் நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் தொடர்ச்சியான போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக பரவிப்பாஞ்சான் மக்கள் நேற்று தெரிவித்தனர்.

பரவிப்பாஞ்சான் காணியில் உள்ள இராணுவத்தினர் வெளியேறி தமது காணிகளை கையளிக்க வேண்டும் எனக் கோரி குறித்த பகுதி மக்கள் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்நிலையில் ஒருபகுதி காணி விடுவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்ட போதிலும் அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படாத நிலையில் நேற்றுக்காலை மீண்டும் தமது காணி விடுவிப்பு தொடர்பில் கேட்டறிய குறித்த பகுதிக்கு காணிகளின் உரிமையாளர்கள் சென்றிருந்தனர்.




முற்பகல் 10 மணிமுதல் காத்திருந்த மக்களை சந்திப்பதற்கு இராணுவ உயரதிகாரிகள் வருகை தராத நிலையில், மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த மக்கள், தமது காணிகளை இராணுவம் விடுவிக்க வேண்டும். காணியில் நாம் குடியேற அனுமதி வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தனர்.

குறித்த காணி விடுவிக்கப்படும் வரை தாம் நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் தொடர்ச்சியான போராட்டத்தினை முன்னெடுக்க உள்ளதாக மக்கள் தெரிவித்தனர். தாம் மீள்குடியேறிய காலம் முதல் காணியை விடுவித்து தருமாறு கோரி வருகின்றோம். ஆனால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

நாம் உறவினர் வீடுகளிலும், தற்காலிக வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வாழ்கின்றோம். எமது காணிகளை விடுவிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து தர வேண்டும்.

அதுவரை நாம் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை தொடர் போராட்டத்தை முன்னெடுக்க உள்ளோம் என மக்கள் மேலும் தெரிவித்தனர். (2-15)

---

### மன்னார்-தலைமன்னார் வீதியிலுள்ள

## வீடொன்றிலிருந்து 1.5கி.கி. கேரள கஞ்சா மீட்கப்பட்டது



(மல்லாவி)

மன்னார் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மன்னார்-தலைமன்னார் வீதியிலுள்ள காட்டு ஆஸ்பத்திரிக் கிராமத்தில் உள்ள வீடொன்றிலிருந்து 1.5 கிலோ கிராம் நிறையுடைய கேரள கஞ்சாப் பொதி மீட்கப்பட்டுள்ளதாக மன்னார் போதைப்பொருள் தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சந்தேகத்தின் பேரில் நபர் ஒருவரையும் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கேரள கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து குறித்த வீட்டை நேற்று அதிகாலை 4.30 மணியளவில் சுற்றி வளைத்த பொலிஸார் கஞ்சா பொதியை மீட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி கிராமத்தில் உள்ள வீடு ஒன்றை சுற்றி வளைத்து தேடுதல் மேற்கொண்ட போது ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதியுடைய 1.5 கிலோகிராம் நிறையுடைய கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடையவர் என சந்தேகத்தின் பேரில் அவ்வீட்டில் இருந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகயை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். (2-4-15)

---

## வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெறாதவர்களின் முறைப்பாட்டிற்கமைய விசாரணையும் மீள்பரிசீலனையும்

### ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது



(முள்ளியவளை)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வீட்டுத் திட்டம் கிடைப்பதற்கு தகுதியிருந்தும் வீட்டுத்திட்டம் கிடைக்கப்பெறாதவர்கள் பதிவு செய்த முறைப்பாட்டிற்கு அமைய விசாரணையும் மீள்பரிசீலனையும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ய.அனிருத்தன் தலைமையில் நேற்றுக்காலை ஆரம்பமாகி பிற்பகல் 4 மணிவரை மேற்படி செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் சுமார் ஆயிரத்து 500 பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மாற்றுத்திறனாளிகள், விதவைகள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் என பல தரப்பினர் கலந்து கொண்டிருந்தனர்.

இங்கு மக்கள் மத்தியில் பிரதேச செயலாளர் உரையாற்றுகையில்,

எமது பிரதேசத்தில் சுமார் 2 ஆயிரம் வீடுகள் தேவையாகவுள்ள நிலையில் வீட்டுத் திட்டத்தின் ஊடாக 200 வீடுகள் மட்டுமே அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனால் ஆயிரத்து 800 பயனாளிகளுக்கு வீடுகள் வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதேவேளை உள்வாங்கப்பட்ட 200 பயனாளிகளில் தகுதியற்றவர்கள் எனக்காணப்படும் குடும்பத்திற்கு வீடு நிராகரிக்கப்படும் என சுட்டிக் காட்டினார்.

சுமார் ஆயிரத்து 500 இற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டமையால் முதல் கட்டமாக பிரதேச செயலக அதிகாரிகள் மட்டத்தில் விண்ணப்பங்கள் விண்ணப்பதாரிகளின் முன்னிலையில் பரிசீலனை செய்யப்பட்டு 50 புள்ளிகள் பெற்றவர்கள் மாவட்ட செயலக அதிகாரிகள் முன்னிலையில் இரண்டாம் கட்டமாக பரிசீலனைக்குட்படுத்தப்பட்டார்கள்.

50 புள்ளிகளுக்கு குறைவாக பெற்றவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். (2-302)

---

## மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் சிவில் விவகாரங்களில் இராணுவம் தலையீடு

### அனுமதிக்க முடியாது என்கிறார் சிறிதரன் எம்.பி

கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினர் சிகை அலங்கரிப்பு நிலையங்களை அமைத்து தொழில் செய்வதால் எமது பாரம்பரிய தொழில் கேள்விக் குறியாகியுள்ளது என அழகக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கிளிநொச்சி மாவட்ட அழகக சங்கத்தினரை கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தின் கேட்போர் கூடத்தில் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இதன்போதே அழகக சங்கத்தின் நிர்வாகிகள் மேற்படி முறைப்பாட்டைத் தெரிவித்திருந்தனர். இக்கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அழகக சங்கத்தின் தலைவர் க.சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதில் அழகக சங்கத்தினர் எதிர்நோக்குகின்ற பல்வேறுபட்ட பிரச்சினை குறித்து கலந்துரையாடப்பட்டது. இயக்கச்சி, கிளிநொச்சி நகர், இரணைமடு, முறிகண்டி போன்ற பகுதிகளில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் சிகை அலங்கரிப்பு நிலையங்களை அமைத்து குறைந்த கட்டணங்களில் தொழில் செய்து வருகின்றார்கள். இதனால் பாரம்பரியமாக இத்தொழிலையே நம்பி செய்து வரும் எமது தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் சங்க விதிமுறைகளும் மீறப்பட்டுள்ளன எனச் சுட்டிக் காட்டப்பட்டது.




இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவிக்கின்ற சமூக ஆர்வலர்கள் குறைந்த கட்டணங்களில் இராணுவம் சிகை அலங்கரிப்புத் தொழிலில் ஈடுபடுவதன் நோக்கம் புலனாய்வு ரீதியான தகவல்களைச் சேகரிப்பதற்காகவும் மக்கள் மத்தியில் தொடர்ந்தும் நிலைத்திருந்து மக்களது நிலங்களை ஆக்கிரமிக்க வேண்டும் என்பதே எனத் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கலந்துரையாடலில் இவ்விடயம் குறித்து கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நீங்கள் ஒரு கூட்டுறவுச் சங்கப் பதிவுக்குட்பட்டவர்கள். உங்களுடைய தொழில் பாதுகாப்பு, தொழில் கௌரவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இங்கே இராணுவம் பாதுகாப்புப் படை என்ற போர்வையில் எல்லாத் தொழில்களிலும் ஈடுபடுகின்றார்கள். முன்பள்ளி நடத்துகின்றார்கள். மீன்பிடிக்கின்றார்கள். கடை நடத்துகின்றார்கள். விவசாயம் செய்கின்றார்கள். மாடு. ஆடு வளர்க்கிறார்கள். இப்படியாக மக்களுக்குரிய வாழ்வாதாரங்களைப் பாதிக்கக் கூடிய வகையில் சிவில் விவகாரங்களில் தலையிடுகின்றார்கள். இதனை அனுமதிக்க முடியாது. எனவே இவ்விடயம் குறித்து கூட்டுறவுத்துறை அமைச்சர், பிரதேச சபை, பொலிஸார் போன்றோரை ஒன்று கூட்டி எங்களுடைய தேச வழமை நிலைமைகளை எடுத்துரைத்து தீர்வு பெறுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்றார்.

இக்கலந்துரையாடலில் அழகக சங்க நிர்வாகிகள் மற்றும் கரைச்சிப் பிரதேச சபையின் முன்னாள் துணைத் தவிசாளர் நகுலேஸ்வரன், மத்திய செயற்குழு உறுப்பினர் ஜெயக்குமார், மாவட்ட அமைப்பாளர் வேழ மாலிகிதன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (2-251)

---

## முல்லைத்தீவு கடற்கரைப்பகுதியில் அட்டைத் தொழில் தொடர்பான ஆய்வு

### ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினர் முன்னெடுப்பு



முல்லைத்தீவு கடற்கரைப் பகுதியில் அட்டைத் தொழில் தொடர்பான ஆய்வு ஒன்று ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆய்வு உதவியாளர் மற்றும் பட்டப்படிப்பின் படிப்பு மாணவன் கூநிஷாந்தனினால் நேற்று முன்தினம் முல்லைத்தீவு சாலைக் கடலிற்கு விஜயம் செய்து அட்டையின் தரத்தை உயர்த்துவது தொடர்பாகவும் உலக சந்தையில் விலையை உயர்த்துவது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது 25 அட்டை ஒரு கிலோ 4ஆயிரம் ரூபா விற்கும் 40 அட்டை ஒரு கிலோ 3 ஆயிரம் ரூபாய்க்கும் 60 அட்டை ஒரு கிலோ 2 ஆயிரத்து 200 ரூபாய்க்கும் 80 அட்டை ஒரு கிலோ ஆயிரத்து 500 ரூபாய்க்கும் சிங்கப்பூருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இதனை அதிக விலைக்கு விற்பனை செய்வதற்கு அட்டையின் தரத்தினை தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சந்தைப்படுத்துவதன் மூலம் இதன் விலையினை அதிகரிக்க முடியும். அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நடுத்தரமான அட்டையும் குறைந்த வருமானம் தரும் அட்டையும் முல்லைத்தீவு கடற்பரப்பில் காணப்படுகின்றது. இதனை அதிக விலைக்கு சந்தைப்படுத்துவது தொடர்பான ஆய்வினை ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகம் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# குருப்பெயர்ச்சி பலன்கள்



### செய்யும் தொழிலே தெய்வம் என்ற தத்துவத்தை மறவாத கும்ப ராசி அன்பர்களே!

"தர்மம் தலைகாக்கும்" என்ற தத்துவத்தை மறக்காதவர்கள் நீங்கள். வீட்டிற்கு வரும் விருந்தினர்களை உபசரிப்பதில் உங்களுக்கு நிகர் யாருமில்லை. தனித்தன்மையோடு வாழ வேண்டுமென்று விரும்புவீர்கள். வரவறிந்து செலவு செய்தால் தான் வாழ்க்கை சிறப்பாக இருக்கும் என்று கூறுவீர்கள். பழைய சடங்கு, சம்பிரதாயங்களில் ஆழமான நம்பிக்கை வைத்திருப்பீர்கள். அதைக் கடைப்பிடிக்க முடியாத பட்சத்தில் காலத்திற்கேற்ப உங்களை மாற்றிக்கொள்ள முன்வருவீர்கள். எதையும் ஆழமாக ஊடுருவிப்பார்க்கும் தன்மை உங்களிடம் உண்டு. சந்தேகக்கண் கொண்டு பார்ப்பதால் பல சந்தர்ப்பங்களை நழுவ விட்டு விடுவீர்கள். புதிய மனிதர்களை சந்திக்கும் பொழுது அவர்களைப் பற்றிய அனைத்து விபரங்களையும் கேட்டு அறிந்து கொள்வீர்கள். ஆனால் உங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட எடுத்துச் சொல்ல மாட்டீர்கள்.

நீங்கள் அதிகம் ஆசைப்படாதவராக இருந்தாலும், வசதிகள் தானாக வரும் பொழுது அதை ஒதுக்கித் தள்ளமாட்டீர்கள். குறுகிய வட்டத்திற்குள் வாழாமல், பழக்க வழக்கங்களை விரிவுபடுத்திக் கொள்ள பிரியப்படுவீர்கள். ஆரம்ப காலத்தில் மற்றவர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தாலும், இளம் வயதிற்கு மேல் எதிர்காலம் பற்றிய கவலை வந்துவிடும். முன்கோபத்தின் காரணமாக முன்னேற்றத்தில் பாதிப்புகள் வந்து சேரலாம். அண்ணனாக இருந்தாலும் தம்பியாக இருந்தாலும் கறாராக இருக்க விரும்புவீர்கள்.

இல்லை உத்தியோகத்திலேயே உறுதியாக இருக்கலாமா? என்பது தெரியும். உங்கள் சுய ஜாதகத்தைப் புரட்டிப்பாருங்கள். மேற்கண்ட மூன்று கிரகங்களின் அமைப்பைப் பொறுத்தே முன்னேற்றத்தின் முதல் படிக்குச் செல்ல இயலும். கிரகங்கள் சரியான அமைப்பில் இல்லாவிட்டால் பரிகாரங்கள் மற்றும் வழிபாடுகள் மூலமே பலன்களைப் பெற இயலும்.

இந்த குருப்பெயர்ச்சியின்போது, 8 ஆம் இடத்திற்கு குரு வருகிறது. அதுமட்டுமல்ல ஜூலை 2017 ராகு-கேதுக்கள் மாற்றமடைகின்றன. அதுவரை உங்கள் ராசியிலேயே கேதுவும், ஏழில் ராகுவும் இருக்கிறார்கள். எனவே சர்ப்ப தோஷத்தின் பிடியிலும் சிக்கியிருக்கிறீர்கள். எனவே நாகசாந்திப் பரிகாரங்களை உங்களுக்கு யோகம் தரும் நாளில் உங்கள் ஜாதக அமைப்பிற்கு ஏற்ற ஆலயத்தில் செய்வது நல்லது. அதோடு அதற்கு முன்னதாக குருவிற்குரிய சிறப்பு வழிபாடுகளையும் செய்தால்தான் வரப் போகும் நாட்களெல்லாம் வசந்தமாக மாறும். வருமானமும் திருப்தி தரும்.




விரயங்கள் கூடுதலாக இருக்கும். விழிப்புணர்ச்சி தேவை. தீட்டிய திட்டங்கள் திசை மாறிச் செல்லும். குடும்பச் சுமை அதிகரிக்கும். பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் மாறலாம். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. சேமிப்புகள் கரையலாம். அருள்தரும் குருவைக் கவசம் பாடி ஆராதனை செய்து வழிபட்டால் பொருள் வளம் சிறப்பாக இருக்கும். பொன்னான வாழ்வும் அமையும்.

**குரு பார்வை கொடுக்கும் பலன்கள்**

நவக்கிரகங்களில் சுபகிரகம் என்று வர்ணிக்கப்படுபவர் குருபகவான். அவர் 8 ஆம் இடத்தில் இப்பொழுது சஞ்சரித்தாலும் அவருடைய பார்வை 2,4,12 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே அந்த ஸ்தானங்களெல்லாம் புனிதமடைகின்றன. எனவே அவற்றிற்குரிய ஆதிபத்யங்களெல்லாம் சிறப்பாக நடைபெறப் போகிறது.

வாக்கு, தனம், குடும்பம் என்னும் இரண்டாமிடத்தை பார்ப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற வைப்பார். குடும்பச் சுமை கூடுதலாக இருந்தாலும் அதைச் சமாளிக்கும் ஆற்றல் உங்களுக்கு உண்டு. கூட்டாளிகள் ஒருசிலர் விலகினாலும், புதிய கூட்டாளிகள் வந்திணைவர். வீடுவாங்க, விற்க எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பூர்வீக இடத்தை விட்டுவிட்டு புதிய இடத்தில் வீடு கட்டலாமா? என்று சிந்திப்பீர்கள். பத்திரப் பதிவில் இருந்த தடைகள் அகலும். கோவில் கும்பாபிஷேகம் நடத்தும் வாய்ப்பு கிடைக்கும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். வாகன யோகம் வந்து சேரும். பயணங்கள் பலன் தரும். வெளிநாட்டு தகவல் அனுகூலமாக அமையும்.



அதிசாரமாகவும் துலாம் ராசிக்கு செல்கிறார். குரு அதிசாரத்தில் இருக்கும் பொழுது அற்புதமான பலன்கள் வந்து சேரும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் வளம் சிறப்பாக இருக்கும். முன்னேற்றம் வேகம் எடுக்கும். அதே நேரத்தில் குருவின் வக்ர காலத்தில் கூடுதல் விரயங்கள் ஏற்படலாம். கொடுக்கல்-வாங்கல்களில் பகை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். குடும்ப உறுப்பினர்களோடு அனுசரித்துச் செல்வது நல்லது. கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு கவலையை உருவாக்கும் நேரம் இது. வருத்தமான சம்பவங்களும் நடக்கலாம். வருங்கால முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் தாமதமும் ஏற்படலாம். இதுபோன்ற காலங்களில் குரு வழிபாட்டை முழுமையாக மேற்கொள்வது நல்லது.

**செல்வம் தரும்**
**சிறப்பு வழிபாடு**

ராசிநாதன் சனி என்பதால் சனிக்கிழமை தோறும் விரதமிருந்து வடக்கு நோக்கிய விநாயகரையும், வாலில் மணி கட்டிய ஆஞ்சநேயரையும் வழிபட்டு வருவது நல்லது.

## 02.08.2016 முதல் 01.09.2017 வரை

**அஷ்டமத்திற்கு வருகிறார் குருபகவான்**

ஆடி 18 ஆம் திகதி (2.8.2016) அன்று 8 ஆம் இடத்திற்கு குரு வருகிறார். வரும் குருவால் வளர்ச்சி ஏற்படுமா, தளர்ச்சி ஏற்படுமா?, வாய்ப்புகளை தட்டி விடுமா?, இல்லை வரவழைத்துக் கொடுக்குமா? என்பதை பற்றிய சிந்தனையெல்லாம் இரண்டு மாதத்திற்கு முன்னதாகவே உங்கள் இதயத்தில் இடம் பிடித்திருக்கும்.

என்னதான் குரு நல்லவராக இருந்தாலும் 8 இல் வரும் பொழுது, ஆரோக்கியத் தொல்லைகளை வழங்குவார். எனவே, சீரான உடல் அமைய மாற்று மருத்துவத்தை மேற்கொள்ளுங்கள். கோபத்தைக் குறைத்துக் கொண்டு குணமோடு செயற்படுவதன் மூலமும், குருவைப்பார்த்து தரிசிப்பதன் மூலமும் ஆபத்து அகலும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமையும். விழிப்புணர்ச்சியோடு செயற்பட்டால் விரயங்களிலிருந்து தப்பிக்கலாம். பலவித மாற்றங்கள் ஏற்படலாம்.

அயன சயன ஸ்தானம் எனப்படும் 12ஆம் இடத்தைக் குரு பார்ப்பதால் விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். மன அழுத்தம் மாறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி கூடும். திடீர் பயணங்கள் லாபம் தரும்.

குருபகவான், சூரிய சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (2.8.2016 முதல் 19.9.2016 வரை) கூடுதல் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது. குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். வரவு வந்தவுடன் செலவாகலாம். அரசியலில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளில் மாற்றம் ஏற்படும். வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. இடமாற்றங்கள் வரப்போவது போல் தோன்றி கைநழுவிச் செல்லலாம்.

குருபகவான், சந்திர சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (20.9.2016 முதல் 24.11.2016 வரை) தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். திடீர் உத்தியோக வாய்ப்புகள் கிடைக்கும். மன அமைதிக்காக குடும்பத்துடன் கோவில் வழிபாட்டை மேற்கொள்வீர்கள்.

**ஜோதிடக் கலைமணி**
**சிவல்புரி சிங்காரம்**

### மங்கையருக்கான மகத்தான பலன்கள்!

கும்ப ராசியில் பிறந்த பெண்களுக்கு அஷ்டமத்து குருவின் ஆதிக்கத்தால் குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்- வாங்கல்களில் பற்றாக் குறை அதிகரிக்கும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்பட்டாலும் மற்ற குடும்ப உறுப்பினர்களால் சச்சரவுகள் ஏற்பட்டு மன அமைதி குறையும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. குறிப்பாக வக்ர குருவின் காலத்தில் பிள்ளைகளால் பெரும் விரயம் ஏற்படலாம். அரசியலில் உள்ளவர்களுக்கு அதிகாரப் பதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இடமாற்றமும் பதவி உயர்வும் வந்து சேரலாம். புகுந்த வீட்டை அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் கிடைக்கும். ராகு-கேதுக்களை முறையாக வழிபட்டு சர்ப்ப சாந்தி செய்து கொள்வது நல்லது. பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.

## அஷ்டமக்குருவாய் வருகின்றார்!
## அவரை தொழுதால் பலன் கொடுப்பார்

உங்கள் மண வாழ்க்கை மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால் சூரிய பலம் நன்றாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் ராசிநாதன் சனிக்கு சப்தமாதிபதி சூரியன் பகைவன். எனவே பொருத்தம் பார்த்து திருமணம் செய்வதே நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். தனாதிபதியாக குரு விளங்குவதால் குரு பலத்தைப் பொறுத்தே தனவரவு தாராளமாக வந்து கொண்டிருக்குமா? இல்லை தடைகளும், தாமதங்களும் குறுக்கிடுமா? என்பதை அறிந்து கொள்ள இயலும். செவ்வாய் பலம் உங்கள் ஜாதகத்தில் நன்றாக இருந்தால் தான் தொழில் வளம் சிறப்பாக இருக்குமா?

குடும்பத்தில் குழப்பங்கள் அதிகரிக்கலாம். வம்பு, வழக்குகள் வாசல் தேடி வரக் கூடும். நம்பிக்கைக்குரியவர்கள் உங்களை ஏமாற்ற முயற்சி செய்யலாம். சிந்தனையில் தெளிவு ஏற்படாது. சில சமயம் இனம்புரியாத கவலை இடம்பிடிக்கும். இருப்பினும், நீங்கள் செய்த பெரிய பாக்கியம், குரு உங்கள் ராசிக்கு 2 ஆம் இடத்தையும், 4ஆம் இடத்தையும், 12 ஆம் இடத்தையும் பார்ப்பது தான். மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். கதிரவனைக்கண்ட பனித்துளி போல் கவலைகள் அகல இறைவழிபாடும், இதயத்தில் உங்களுக்கு இருக்கும் தன்னம்பிக்கையும் கைகொடுக்கும்.

உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர்.

குருபகவான், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் பொழுது (25.11.2016 முதல் 21.2.2017 வரை மற்றும் 2.7.2017 முதல் 1.9.2017 வரை) பொருளாதார வசதி பெருகும். புதிய சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகும். சுபகாரிய தடை அகலும். பிணை சொல்லி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். உற்சாகத்தோடு செயற்படும் நேரம் இது. உடனுக்குடன் பல நல்ல முடிவுகளை எடுத்துக் காரியங்களை நடத்திக் காட்டுவீர்கள்.

**அக்கறை செலுத்த வேண்டிய**
**வக்ர காலம்**

இம்முறை குரு வக்ரம் பெறுவதோடு

(நாளை மீனம்)

# VACANCIES

## VAVUNIYA CAMPUS, UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna Will Entertain Applications from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF APPLIED SCIENCE**

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Information and Communication Technology.

**Note:**
Special consideration will be given to those who have degrees in Information & Communication Technology.

**FACULTY OF BUSINESS STUDIES**

Senior Professor/ Professor of Human Resource Management

Senior Lecturer Grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Applied Mathematics & Computing/ Business Economics

Instructress in Physical Education Grade III

**SALARY AND OTHER BENEFITS**

| Post | Salary scale |
|---|---|
| Senior Professor | Rs.67,100-11x1425-82,775/-p.m |
| Professor | Rs.56,505-13x1310-73,535/-p.m |
| Senior Lecturer Grade I | Rs.45,545-7x1050-52,895/-p.m |
| Senior Lecturer Grade II | Rs.39,755-11x790-48,445/-p.m |
| Lecturer (Probationary) | Rs.27,775-10x645-34,225/-p.m |
| Instructress in Physical education Grade III | Rs.21,370-18x320-27,130/-p.m |

**Note:**

In addition to the above salary, the following allowances will also be paid for academic staff:

| | |
|---|---|
| i. Academic allowance-Senior Professor | -152% of the basic salary |
| Professor | -147% of the basic salary |
| Senior Lecturer Gr.I/Gr.II | -136% of the basic salary |
| Lecturer (probationary) | -100% of the basic salary |

ii. Special allowance- 20% of the basic salary
iii. Additional Monthly Allowance -20% of the basic salary
iv. Interim Allowance- Rs.10,000/-p.m
v. Cost of living allowance- Rs.7,800/-p.m
vi. 35% of the basic salary will be paid as Research allowance based on the research activity of the academic staff.

For Instructress in Physical Education Grade III, in addition to their salary the allowances mentioned under the academic staff No (ii), (iii),(iv),(v) and Monthly Compensatory Allowance-20% of the basic salary will also be paid.

**Statutory benefits:**
i) Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr-II and above.
ii) Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system
iii) Gratuity payments
iv) Employees Trust Fund benefits
v) Free Medical Services

**Closing Date:**
**Post of Senior Professor/ Professor -10.10.2016**
**Other Posts -09.09.2016**

Applications and other documents for the post of Senior Professor/ Professor shall be sent to the **Vice- Chancellor** with the covering letter. Applications for the other posts shall be sent to the **Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Thirunelvely, Jaffna.**

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/Academic Establishments. Univerity of Jaffna, Sri Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self- addressed stamped envolope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website:**www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/ Postal Order for Rs. 100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for more than one post should apply in separate forms.

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**
**10.08.2016**
(C-5416)

# 30ஆவது ஆண்டு திருமண வாழ்த்துக்கள்



திரு.திருமதி கணேசமூர்த்தி சந்திரபிரபா
11.08.2016

முழுமதியாய் முழு நிலவாய்
முந்நூறு ஆண்டுகள் நீர்
ஒளி வீசி எமக்கு அருள் தருவீர்
மூபத்தாம் மண நாள்
இன்நாளில் இன்று போல்
என்றும் நீர் இன்புடன்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

இன்று முப்பதாவது திருமண
ஆண்டு காணும்
எமது தாய், தந்தையரை
இன்னும் பல்லாண்டு
காலம் நோய் நொடியின்றி
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

"சுந்தரி வாசா"
ஆத்தியடி,
பருத்தித்துறை.

வாழ்த்துவோர்:-
பிள்ளைகள்:-பகீ,மயூரன், சிவகாமி
மருமக்கள்:-பிரியா,சுஜன்.

(5545)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா:28சூரிசெவ் 8 இல்<br>உயரம்: 5'11"<br>தகைமைதொழில்:வங்கியாளர்<br>தொ.இ: B/4683 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 9 1/2சூரிசெவ் 11 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/282 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம: ரேவதி<br>கி.பா: 19<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:பொறியியலாளர்<br>சிங்கப்பூர்<br>தொ.இ: B/4684 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 44<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:பட்டதாரி/ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: G/323 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 16<br>உயரம்: 5'9"<br>தகைமைதொழில்:ITபொறியியலாளர்<br>மலேசியா<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: B/4690 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 19செவ் 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:HNDA/தனியார் தொழில்<br>தொ.இ: G/333 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 6<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L இத்தாலி<br>தொ.இ: B/4692 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 16<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:BBA/கணக்காளர்<br>தொ.இ: G/368 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# வித்தியா கொலை வழக்கின் சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்க யாழ்.மேல் நீதிமன்று மறுப்பு

## மேலும் மூன்று மாதங்களுக்கு மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

சமூகத்தின் நலனைக் கருதியும், குற்றத்தின் பார தூரத்தை கருத்திற்கொண் டும் வித்தியா கொலை வழக் கின் ஒன்பது சந்தேக நபர் களையும் பிணையில் விடு விப்பதற்கு யாழ்.மேல்நீதி மன்றம் அனுமதி மறுத்துள்ள தோடு, சந்தேகநபர்களை மேலும் மூன்று மாதங்க ளுக்கு விளக்கமறியலில் வைப்பதற்கு அனுமதியளித் துள்ளது.

கூட்டு வன்புணர்வின் பின் புங்குடுதீவில் பாடசாலைமாணவி யான வித்தியா படுகொலை செய்யப்பட்டிருந்தார். குறித்த கொலைக்கு காரணமான வர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஒன்பது பிரதான சந் தேக நபர்கள் கைது செய்யப் பட்டிருந்தனர். இவர்கள் தொடர்பான வழக்கு ஊர்கா வற்றுறை நீதிமன்றில் நடை பெற்று வரும் நிலையில்,

குறித்த வழக்கு ஒரு வரு டத்தை கடந்து நடைபெற்று வருவதனால் சந்தேக நபர் களை ஒருவருடத்திற்கு மட் டுமே நீதவான் நீதிமன்றம் விளக்கமறியலில் வைப்ப தற்கு அதிகாரம் உள்ள கார ணத்தினாலும் சந்தேக நபர் களை மேலும் ஒருவருடத் திற்கு விளக்கமறியலில் வைப் பதற்கு யாழ்.மேல் நீதிமன்றி டம் சட்டமா அதிபர் திணைக் களத்தினால் அனுமதி கோரப் பட்டது.

இந்த நிலையில் குறித்த வழக்கு கடந்த ஜூன் மாதம் யாழ்.மேல் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு முதற் கட்டமாக மூன்று மாதத் திற்கு விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டது.

இந்த மூன்று மாதகாலம் நேற்றைய தினம் நிறைவுற்ற நிலையில் மீண்டும் குறித்த வழக்கு யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட் டது.

இதன்போது அரச சட்ட வாதி தரப்பில் ஆஜராகியி ருந்த சட்டவாதி சகிஸ் இஸ் மாயில், வித்தியா கொலை வழக்கின் குற்றப்புலனாய்வு துறையினரின் விசாரணை முடிவுற்று உள்ளதாகவும் விசாரணை அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக் கப்பட்டுள்ளது. நீதவான் நீதி மன்றின் விசாரணையும் முடிவுறும் நிலையிலுள்ளது.

இந்த நிலையில் சந்தேக நபர்களை பிணையில் விடு விப்பது விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படும். எனவே சந்தேக நபர்கள் ஒன்பது பேரையும் இரண்டாம் கட்ட மாக மேலும் மூன்று மாதங் களுக்கு விளக்கமறியலில் வைப்பதற்கு மன்று அனு மதியளிக்க வேண்டும் என சட்டவாதி தனது வாதத்தில் கூறினார்.

இதன்போது எதிரி தரப் பில் ஆஜராகியிருந்த சட்டத் தரணி சரத் வல்ஹமுவ, அரச சட்டவாதியின் விண்ணப் பத்திற்கான தனது ஆட்சே பனையை தெரிவித்ததோடு, தனது தரப்பு வாதிகளான நான்காம், ஏழாம், ஒன்பதாம் சந்தேகநபர்கள் நேரடியா கவோ மறைமுகமாகவோ குறித்த கொலையில் சம்பந் தப்பட்டு இருக்கவில்லை எனவும்,

செய்யாத குற்றம் ஒன் றிற்காக 15 மாதங்கள் சிறை யில் வைக்கப்பட்டுள்ளார் கள். இதனால் அவர்களுடைய குடும்பங்கள் பெரும்பாதிப்பை எதிர் நோக்கி வருகின்றன. தொடந்து விளக்க மறியலில் இருப்பத னால் அவர்கள் உள ரீதியாக பாதிப்பினை யும் எதிர்நோக்கி வருகின் றனர்.

நான்காம், ஒன்பதாம் சந்தேக நபர்களது தாயாரும் சிறைச்சாலையில் விளக்க மறியலில் இருக்கும் போது உயிரிழந்துள்ளமையால் அவர்கள் மனதளவில் கடுமையாக பாதிக்கப்பட் டுள்ளனர். எனது தரப்பு வாதிக ளான நான்காம் சந்தேகநபரான மகாலிங்கம் சசிந்திரனுக்கு திருமணமாகி இரண்டு பிள்ளைகள் உள்ளனர்.

ஏழாம் சந்தேக நபரான ப.குகானந்தன் என்பவருக்கு திருமணமாகவில்லை. அவ ரது தாயார் வயதானவர். ஒன்பதாம் சந்தேக நபரான மகாலிங்கம் சசிக்குமார் என்பவருக்கு தற்போது நாற் 43 வயது. அவருக்கு மூன்று வயது குழந்தை ஒன்றும் உள்ளது.

எனவே இவர்களது குடும்ப பின்னணியை கருத்திற் கொண்டு மூவரையும் பிணை யில் விடுவிக்குமாறு கோரினார்.

இதன் பின்னர் கட்டளை யிட்ட நீதிபதி மா.இளஞ் செழியன்,1991 ஆம் ஆண்டு 30 ஆம் இலக்க பிரிவு 17 இன் கீழ் சட்டமா அதிபர் யாழ்.மேல் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளார். இரு தரப்பு விண்ணப்பங்களி லும் சட்டமா அதிபரது விண் ணப்பம் ஏற்றுக்கொள்ளப் பட்டு, சந்தேக நபர்களை பிணையில் விடுவிக்குமாறும், சந்தேக நபர்களது விளக்க மறியல் காலத்தை மேலும் மூன்று மாத காலத்திற்கு நீடிக்க மறுக்க வேண்டும் எனவும் எதிரி தரப்பு சட் டத்தரணியால் முன்வைக் கப்பட விண்ணப்பம் நிரா கரிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த குற்றம் பாரதூரமான குற்றமாகும், சட்டமா அதிபர் குற்றப்புல னாய்வு துறையினரின் அறிக் கையை பரிசீலனை செய்ய வதற்கு கால அவகாசம் வழங்க வேண்டிய பொறுப்பு நீதிமன்றத்திற்கு உண்டு. நீதவான் நீதிமன்றின் விசா ரணை முடிவுறாத நிலையில் அதற்கு ஒத்துழைக்க வேண் டிய பொறுப்பும் மன்றுக்கு உண்டு.

எனவே சமூகத்தின் நலன் கருதியும் குற்றத்தின் பார தூரத்தை கருதியும் சந்தேக நபர்கள் மீதான பிணை விண்ணப்பத்தை நிராகரிப் பதோடு, மேலும் மூன்று மாதகாலத்திற்கு சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைப்பதற்கு அனுமதியளிப் பதாகவும் நீதிபதி கட்டளை யிட்டார். (இ-4)

# அலெப்போவில் கடும் மோதலுக்கு தயாராகும் சிரிய அரச படை மற்றும் கிளர்ச்சியாளர்கள்

அலெப்போ நகர அரச நிலைகளை கிளர்ச்சியாளர் கள் முறியடித்து இரண்டு தினங்கள் கடந்த நிலையில் சிரிய அரசு அங்கு ஆயிரக் கணக்கான மேலதிக படை யினரை அனுப்பி இருப்ப தாக கண்காணிப்பாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கிளர்ச்சியாளர்கள் முன் னேற்றம் கண்டிருக்கும் பகுதி களை மீட்பதற்காக லெப னான் ஷியா ஹிஸ்புல்லா அமைப்பு மற்றும் சிரிய அரசு 3000 இற்கும் அதிகமான துருப்பினர்கள் மற்றும் போரா ளிகளை குவித்துள்ளது.

மறுபுறம் எதிர்பார்க்கப் படும் கடும் மோதல் ஒன்றுக் காக அண்டைய மாகாண மான இத்லிப்பில் இருந்து நூற்றுக்கணக்கான அரச எதிர்ப்பு கிளர்ச்சியாளர்கள் அலெப்போவுக்கு வந்திருப் பதாக கண்காணிப்பாளர் களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.


கடந்த வார இறுதியில், போராளிகள் வசமிருந்த அலெப்போவின் கிழக்கு பகுதி யில் அரசு படைகள் விதித் திருந்த முற்றுகை நிலையை கிளர்ச்சியாளர்கள் கடுமை யாக போராடி தகர்ந்தெறிந் துள்ளனர்.

சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் அரச படை பலவீனம் அடைந்து வரும் நிலையில் அதிக தீவிரம் கொண்ட ஹிஸ்புல்லாஹ் போராளிகளே அதற்கு உதவி யாக யுத்த களத்தில் செயற் பட்டு வருகின்றனர்.

அலெப்போ நகரில் தாக் குதல்களை தீவிரப்படுத்த அரசு திட்டமிட்டிருப்பதாக சிரிய அரச செய்தி நிறுவன மான சானா குறிப்பிட்டுள் ளது. அலெப்போவில் கிளர்ச்சி யாளர்களின் முன்னேற்றம் நகரின் அரச கட்டுப்பாட்டு மேற்கு பகுதிக்கான விநியோ கப் பாதைகளை துண்டிக்கும் அபாயம் குறித்து அரசு அச்சப் படுகிறது. குறித்த பகுதிக்கு தேவையான அனைத்து அத் தியாவசிய பொருட்கள் மற் றும் எரிபொருட்கள் கைவசம் இருப்பதாக மாகாண ஆளு நர் முஹமது மர்வான் அல் அவுலாபி சானாவுக்கு குறிப் பிட்டுள்ளார்.

"பல எரிபொருள் தாங்கி கள் கடந்த திங்களன்று அலெப்போ நகரை வந்த டைந்ததாக" அவர் குறிப்பிட் டார். அலெப்போ நகரை முழு மையாக கைப்பற்றும் படை நடவடிக்கை ஒன்றை முன் னெடுத்திருப்பதாக கிளர்ச்சிப் படை கூட்டணி அறிவித் திருக்கும் நிலையிலேயே அரச படையும் அங்கு தமது படை நடவடிக்கையை தீவிரப் படுத்தியுள்ளது. அலெப்போ நகரை முழுமையாக விடு விக்கும் தாக்குதல் ஆரம் பிக்கப்படுவதாக கிளர்ச்சி கூட்டணி குறிப்பிட்டிருந் தது. (இ-7-10)

# ஏமனில் சவுதிக் கூட்டுப்படையின் விமான தாக்குதலில் 14 பேர் பலி!



சவுதி கூட்டுப்படை ஏமனில் நடத்திய தாக்குதலில், தொழிற்சாலையில் பணிபுரிந்து கொண்டிருந்த பொதுமக்கள் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஏமன் நாட்டில் அரசுக்கு எதிராக கிளர்ச்சியாளர்கள் ஆயுத போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்தில் ஏமன் அரசுக்கு ஆதரவாக சவுதி கூட்டுப்படை வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருகிறது. அண்மையில் ஐ.நா. நடத்திய அமைதி பேச்சுவார்த்தை தோல்வியடைந்த தையடுத்து மீண்டும் தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில்,சவுதி கூட்டுப்படை சனாவில் நேற்று முன்தினம் இரவு தொடங்கி நேற்று அதிகாலை வரை நடத்திய விமானத் தாக்குதலில், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலையில் இரவுப்பணியில் இருந்த 14 பேர் கொல்லப்பட்டதாக தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது. (இ-5)

# காஷ்மீர் மாநிலத்தில் மனித உரிமை மீறல்


## ஐ.நாவில் பாகிஸ்தான் புகார்

(இஸ்லாமாபாத்)

காஷ்மீர் மாநிலத்தில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாக ஐக்கிய நாடுகள் சபையில் பாகிஸ் தான் புகார் ஒன்றை தெரி வித்துள்ளது.

ஜம்மு-காஷ்மீர் மாநிலத் தின் பள்ளத்தாக்கு பகுதியில் கடந்த சில வாரங்களாக பதற்றமான சூழல் நிலவி வருகிறது. ஹிஸ்புல் முஜாகி தீன் அமைப்பின் தளபதி பர்கான் பாதுகாப்பு படையி னரால் கொல்லப்பட்டதை தொடர்ந்து காஷ்மீர் பள்ளத் தாக்குப் பகுதியில் கடந்த சில வாரங்களாக வன்முறை சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. இதனால் அங்கு பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

இந்நிலையில், காஷ்மீர் மாநிலத்தில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவதாக ஐக்கிய நாடுகள் சபையில்



பாகிஸ்தான் புகார் தெரிவித் துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை யின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் மற்றும் மனித உரிமைக்கான ஐ.நாவின் உயர் ஆணையர் அல் ஹூசைனிடம் இந்த புகார் அளிக்கப்பட்டது.

அந்த புகாரில் "ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் தொடர்ச்சியாக மற்றும் அதிர்ச்சியுண்டாக்குகிற வகையில் நடைபெற்று வரும் மனித உரிமை மீறல் சம்பவங்களை முடிவுக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்" என்று வலியுறுத்தப்பட்டுள் ளது.

இந்த இரண்டு தனித்தனி கடிதங்களிலும் பிரதமர் நவாஸ் ஷெரீப் சர்வதேச அமைப்புகளை ஐ.நா. பாது காப்பு கவுன்சிலின் விதி களை காஷ்மீரில் பின்பற்ற நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார். (இ-5)

# சவுதி விசா கட்டணம் உயர்வு



சர்வதேச சந்தையில் எண் ணெய் விலை வீழ்ச்சியால் பெரும் நெருக்கடியை சந்தித்து வரும் சவுதி அரேபியா அரச வருவாயை அதிகரிக்க விசா கட்டணத்தையும் உயர்த்தவுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய் ஏற்றுமதி வருவாய் குறைந்திருக்கும் சூழலில் கடந்த ஆண்டு வரவு- செலவு திட்டத்தில் சவுதி சுமார் 100 பில்லியன் டொலர் பற்றாக் குறையை சந்தித்தது. இந்நிலையில் தனது வரு வாயை அதிகரிக்க சவுதி புதிய வழிகளை தேடி வருகிறது.

அமைச்சரவையில் அங்கீகாரம் கிடைத்திருக்கும் புதிய விசா கட்டணத்தின்படி பல நுழைவு அனுமதி கொண்ட இரண்டு ஆண்டு விசா கட்டணம் 8ஆயிரம் ரியால்களாக (3,10,500 ரூபாய்) உயர்த்தப்பட்டுள்ளது.

அதேபோன்று பல தடவை நுழைவு மற்றும் வெளியேறும் மூன்று மாத விசா கட்டணம் 500 ரியால்களாக உயர்த்தப் பட்டுள்ளது. முன்னர் ஆறு மாதங்களுக்கே இந்த தொகை அறவிடப்பட்டது. எனினும் ஹஜ் மற்றும் உம்ராவுக்கு முதல் முறை பயணிப்பவர்களுக்கு விசா கட்டணம் தவிர்க்கப்பட்டுள்ளது. இதற்கமைய எதிர்வரும் ஒக்டோபர் 2ஆம் திகதி தொடக்கம் புதிய கட்டணம் அறவிடப்படவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஆயுதப்படை அதிகாரச் சட்டத்தை நீக்க வலியுறுத்தும் பொது மன்னிப்புச் சபை



ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சர்வதேச பொது மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

இந்தியப் பாதுகாப்பு படையினருக்கு வழங்கப்பட்டுள்ள ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டத்தை வாபஸ் பெறக்கோரி கடந்த 16 ஆண்டுகளாக உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய மணிப்பூரின் இரும்பு பெண்மணி ஐரோம் ஷர்மிளா (வயது 44) நேற்று முன்தினம் தனது போராட்டத்தை முடித்துக் கொண்டார்.

அவரது இந்த முடி வினை பல்வேறு தரப்பினரும் வரவேற்றுள்ள நிலையில், அவர் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு கைவிட வேண்டும் என்றும், ஆயுதப்படை சிறப்பு அதிகாரச்சட்டத்தை திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் சர்வதேச பொது மன்னிப்புச் சபை கேட்டுக் கொண்டுள்ளது. (இ-5)

# இரத்தப்புற்றுநோயால் அவதிப்பட்ட நடிகை ஜோதிலட்சுமி காலமானார்

(சென்னை)

பழம்பெரும் நடிகை ஜோதிலட்சுமி, இரத்தப் புற்றுநோய் காரணமாக நேற்று முன் தினம் இரவு திடீரென்று மரணம் அடைந்தார். அவருக்கு வயது 68. கடந்த சில மாதங்களாக, இரத்தப் புற்று நோய் காரணமாக கடுமையாக உடல்நிலை பாதிக்கப் பட்டிருந்தார்.

இந்நிலையிலும் அவர் தொலைக்காட்சி தொடர் நாடகங்களிலும், சினிமாப் படங்களிலும் நடித்து வந்தார். அவ்வப்போது அவருக்கு வைத்தியசாலையில் தீவிர சிகிச்சை அளிக்கப் பட்டது. ஆனால், நேற்று முன்தினம் இரவு 11.15 மணியளவில் தி.நகர் வீட்டில் இருந்த அவருக்கு திடீரென்று மூச்சுத்திணறல் ஏற்பட்டு அவதிப்பட்டார். தன் கணவரிடம், 'நான் இறந்து விடுவேன் என்று நினைக்கிறேன்' என்று உருக்கமாகச் சொல்லி கண் கலங்கி



இருக்கிறார். மயங்கி விழுந்தார். சிறிது நேரத்தில் உயிரிழந்தார். (இ-5)

# 4 வயதிலே வயோதிபரான சிறுவன்





(டாக்கா)

பங்களாதேஷத்தில் 4 வயது சிறுவனிற்கு ஏற்பட்ட இனந்தெரியாத நோயினால் முதுமைத் தோற்றத்தை அடைந்துள்ளார்.

குறித்த சிறுவன் வயதுக்கு மீறிய வகையில் மூப்படைந்து தளர்ந்து வயோதிபரை போல் காட்சியளிக்கின்றார்.

குறித்த சிறுவனின் முதிர்ந்த தோற்றத்தினை மாற்ற டாக்காவில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்று இலவச பரிசோதனைகள் மற்றும் சிகிச்சை செய்ய முன்வந்துள்ளது. (இ-5)

# ஜெயலலிதா இரங்கல்

(சென்னை)

தமிழ்த்திரைப்பட பழம்பெரும் நடிகையும் நடன கலைஞருமான ஜோதிலட்சுமி இரத்தப் புற்றுநோய் காரணமாக நேற்று முன்தினம் இரவு திடீரென மரணமடைந்தார்.

இவரது திடீர் மரணம் அறிந்த தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா தனது இரங்கலை வெளியிட்டுள்ளார்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்ட இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது,

பிரபல திரைப்பட நடிகையும், நடனக் கலைஞருமான ஜோதிலட்சுமி உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியை அறி



ந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

ஜோதிலட்சுமி 1963ஆம் ஆண்டில் வெளிவந்த "பெரிய இடத்துப் பெண்" திரைப்படம் மூலம் தமிழ் திரையுலகில் அறிமுகமாகி, நான் நடித்த "அடிமைப்பெண்", "நீரும் நெருப்பும்", "தேடிவந்த மாப்பிள்ளை", "கலாட்டா கல்யாணம்: உள்ளிட்ட 300 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். (இ-5)

# கலையுமா இரட்டை வேடம்?

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே காஷ்மீர் எல்லை பிரச்சினை உட்பட பல்வேறு விடயங்களில் போதிய புரிந்துணர்வு இல்லாமல் முரண்பாடு நீடித்து வருகிறது. அவ்வப்போது இரு நாடுகளின் நட்புறவை பரஸ்பரம் வளர்க்கும் வகையில் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதும், இரு நாட்டு எல்லை வீரர்களின் தளபதிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதும் வழக்கமாக உள்ளது. ஆனால் பேச்சுவார்த்தை ஒரு பக்கம் நடத்திகொண்டே தீவிரவாதத்துக்கு மறைமுகமாக பாகிஸ்தான் ஆதரவளித்து வருகிறது. இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிந்து தனி நாடாக அறிவிக்கப்பட்ட பிறகு நேரு, ராஜீவ்காந்தி, வாஜ்பாய், மோடி ஆகிய பிரதமர்கள் மட்டுமே அந்நாட்டுக்கு சென்று வந்துள்ளனர். என்ன நடந்தாலும், காஷ்மீர் மீது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற எண்ணத்தை பாகிஸ்தான் விடுவதாக இல்லை.

சமீபத்தில் காஷ்மீர் ஹிஸ்புல் முஜாகிதீன் தளபதி பர்கான் வானியை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர். அப்போது இறந்த தீவிரவாதியை தியாகி என்று பாகிஸ்தான் அறிவித்து கறுப்பு தினம் கொண்டாடியது. இது இந்திய அரசியல் தலைவர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது. பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நாடு என்பதற்கு இந்த சான்று ஒன்றே போதுமானதாக இருந்தது.

இந்நிலையில் இஸ்லாமாபாத்தில் நடந்த தெற்காசிய நாடுகளின் பிராந்திய கூட்டமைப்பு (சார்க்) மாநாட்டில் இந்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார். இந்த மாநாட்டு தலைவராக இருந்த பாகிஸ்தான்பிரதமர்நவாஷ ஷெரீப், காஷ்மீரில் விடுதலைக்கான புதிய அலை உருவாகி உள்ளது என்று சர்ச்சை பேச்சை முன்வைத்தார். ஷெரீப்பின் பேச்சுக்கு சம்மட்டையடி கொடுக்கும் வகையில் பேசிய ராஜ்நாத்சிங், தீவிரவாதிகள், தீவிரவாத இயக்கத்தின் மீது மட்டும் நடவடிக்கை எடுத்தால் போதாது.

அவர்களை ஆதரிக்கும் தனிநபர் மற்றும் நாடுகளுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தீவிரவாதம் என்றால் அதில் நல்லது, கெட்டது என்று பிரித்து பார்க்கக்கூடாது. தீவிரவாதிகளை தியாகிகளாக சித்தரிக்கக்கூடாது. தீவிரவாத சம்பவம் நிகழ்ந்த பின்னர் வெறுமனே கண்டனம் தெரிவிப்பது போதுமானது கிடையாது. தீவிரவாதத்துக்கு ஆதரவு தெரிவிப்பவர்கள், ஊக்குவிப்பவர்களை தனிமைப்படுத்த வேண்டும் என்று பேசினார். உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேச்சின் உள்ளடங்கிய உண்மைத்தன்மை, பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பின் மனச்சாட்சியை உறுத்தியது. இதையடுத்து ராஜ்நாத்சிங்கின் பேச்சை தொடர்ந்து ஊடகங்களில் ஒளிபரப்பு செய்யாமல் இருட்டடிப்பு செய்யப்பட்டது. பாகிஸ்தான் தீவிரவாதத்துக்கு எதிரான நாடாக இருந்தால், ராஜ்நாத் சிங் பேச்சு அவர்களுக்கு உறுத்தலை ஏற்படுத்தாமல், மகிழ்ச்சியை அளித்திருக்கும் ஆனால் அவர்களது எண்ணங்கள், அவர்களது செயல்களாலேயே காட்டிக்கொடுக்கப்பட்டு விட்டது.

உலக நாடுகளில் எங்கு தீவிரவாதம் நடந்தாலும், அதில் தொடர்புடையவர்கள் பாகிஸ்தானில் தஞ்சமடைகிறார்கள். அவர்களுக்கு மறைமுகமாக ஆதரவளிப்பதும், வெளியே கண்டிப்பதுமாக இரட்டை வேடம் போடுவதை பாகிஸ்தான் இனியாவது தவிர்க்க வேண்டும். தங்கள் நாட்டு வளர்ச்சி மட்டுமன்றி அண்டைநாட்டு வளர்ச்சிக்கும் ஆபத்தை விளைக்கும் இந்த தீவிரவாத போக்கை ஆதரிக்கும் பிடிவாதத்தை தளர்த்திக்கொண்டு உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாமல், நட்பை இதயம் முழுக்க நிரப்பி இனியாவது கைகுலுக்க வேண்டும். மாற வேண்டும் அண்டை நாடு கலைய வேண்டும் இரட்டை வேடம் இல்லாவிட்டால் எதிர்காலத்தில் கலையப்போவது உறுதி என தினகரன் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-5)

# புகையிரதத்தில் கொண்டு வந்த 5கோடி ரூபா பணம் கொள்ளை

## இந்தியாவில் பரபரப்பு

(சென்னை)

புகையிரதத்தின் மேற்தளத்தில் துவாரம் இட்டு கோடிக்கணக்கில் பணம் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சேலத்திலிருந்து புகையிரதம் மூலம் சென்னையில் உள்ள ரிசர்வ் வங்கிக்கு கொண்டுவரப்பட்ட கோடிக் கணக்கான பணமே இவ்வாறு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கிகளிலிருந்து சேதமடைந்த ரூபாய் நோட்டுகள் ஒன்றாகத் திரட்டப்பட்டு, சென்னையில் உள்ள ரிசர்வ் வங்கிக் கிளைக்கு புகையிரதத்தில் அனுப்பப்பட்டன.

ஒட்டுமொத்தமாக 325 கோடி ரூபாய் பணம், 226 பெட்டிக்ளில் அடைக்கப்பட்டு சேலம் - சென்னை புகையிரதத்தில் ஏற்றப்பட்டது.

பணம் ஏற்றப்பட்டிருந்த பெட்டி, புகையிர இயந்திரத்திற்கு அடுத்ததாக இணைக்கப்பட்டிருந்தது. இந்த புகையிரதம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை சென்னை வந்து சேர்ந்தது.

முற்பகல் சுமார் 11 மணியளவில் பணத்தை இறக்குவதற்காக ரிசர்வ் வங்கி அதிகாரிகளும் ரயில்வே பொலிஸாரும் பணம் இருந்த சரக்கு பெட்டியைத் திறந்த போது, அதன மேலே ஓர் ஆள் நுழையும் அளவுக்கு ஓட்டை போடப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

உள்ளே இருந்த பணப் பெட்டிகளில் சில உடைக்கப்பட்டிருந்தன. இதையடுத்து ரயில்வே பொலிஸ் விசாரணையில் இறங்கியது.

உடைக்கப்பட்ட பெட்டிகளில் இருந்த சேதமடைந்த ரூபாயின் மதிப்பு தொடர்ந்து கணக்கிடப்பட்டு வருகிறது. இதுவரை சுமார் 5.75 கோடி ரூபாய் அளவுக்கு பணம் காணாமல் போயிருப்பது தெரியவந்துள்ளது. தொடர்ந்து பணம் கணக்கிடப்பட்டு வருகிறது.

மேலும் இது தொடர்பிலான விசாரணையில்,

விசாரணையில் குற்றவாளிகளின் கைரேகை, இரத்த சிதறல்கள் ஆகியவை தடயங்களாக கிடைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று சேலத்தில் இரு



ந்து சென்னை ரிசர்வ் வங்கிகு 23தொனஎடைகொண்ட, சுமார் 342 கோடி பணம் 228 ரயில் பெட்டிகளில் சென்னை எழும்பூர்க்கு கொண்டுவரப்பட்டது.

தடயவியல் நிபுணர்களும், கைரேகை நிபுணர்களும் கொள்ளையடிக்கப்பட்ட புகையிரதப் பெட்டியில் சுமார் 9 மணி நேரம் ஆய்வில் ஈடுபட்டனர்.

ஆய்வில் சந்தேகத்திற்குரிய வகையில் 4 கைரேகைகளும், சில இரத்த சிதறல்களும் இருந்ததால், அவை உடனடியாக ஆய்வு கூடத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

ஏற்கனவே கொள்ளை சம்பவங்களில் ஈடுபடும் கொள்ளையர்களுடன் கைரேகை ஒப்பிட்டுப் பார்க்கும் பணி நடைபெறுகிறது.

இது குறித்து ரயில்வே கோட்ட மேலாளர் அரிசங்கர் வர்மா கூறியதாவது,

சேலத்தில் இருந்து புறப்பட்ட புகையிரதம் விருத்தாசலத்திற்கு 10 நிமிடம் முன் கூட்டியே வந்தது, ஆனால் சென்னைக்கு 10 நிமிடம் காலதாமதமாக வந்துள்ளது.

மேலும் வங்கி அதிகாரிகள் புகையிரதப் பெட்டியில் 23 தொன் பழைய நோட்டுகள் இருப்பதாக கூறி அதற்கான கட்டணத்தை செலுத்தினர். ஆனால் ரிசர்வ் வங்கி இது குறித்து தங்களிடம் பாதுகாப்பு எதுவும் கோரவில்லை எனவும் கூறியது.

குறிப்பாக புகையிரதத்தில் சேலத்தில் இருந்து சென்னை வருவதற்குள் பத்து இடங்களில் நிறுத்தப்பட்டு வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## எத்தடைவரினும் அபிவிருத்தித்திட்டங்களை அரசாங்கம் கைவிடாது - நிதி அமைச்சர்

எவ்வாறான தடைகள் ஏற்பட்டாலும் அபிவிருத்தித் திட்டங்கள் கைவிடப்படாது என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நாடாளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எவ்வாறான தடைகள், இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டாலும் நல்லாட்சி அரசாங்கம் அபிவிருத்தி நோக்கிச் செல்லும் பயணம் இடை நிறுத்திக் கொள்ளப்படமாட்டாது.

அரசாங்கம் பெற்றுக் கொள்ளும் கடன் பற்றி நாடாளுமன்றிற்கு உரிய முறையில் அறிவிக்கப்படும்.

எவ்வாறான தடைகள் ஏற்பட்டாலும் நாட்டின் அபிவிருத்தியை அரசாங்கத்தினால் முன்னெடுக்க முடியும்.

நாம் எந்தவொரு விடயத்தையும் மூடி மறைக்கவில்லை, வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுகின்றோம்.

உள்நாட்டு வருமானம் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. வரி அறவீடுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. அரசாங்கத்தின் வருமானத்தை நீதிமன்றம் சில சந்தர்ப்பங்களில் வரையறுத்துள்ளது.

கடந்த காலத்தில் ஒழுங்கற்ற வகையில் நிதிக் கொள்கைகள் பின்பற்றப்பட்டன. தற்பொழுது அந்த நிலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

நாட்டை முன்னோக்கி நகர்த்த வருமானம் அவசியமாகின்றது. நாம் சரியான முறையில் சரியான கொள்கைகளையே பின்பற்றுகின்றோம்.

அரசாங்கத்தின் வருமான வழிகள் முடக்கப்பட்டால் அதன் ஊடாக மக்களே பாதிக்கப்படுவர் என நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்க தெரிவித்துள்ளார். (இ-7-10)




# பசிலின் காணிகளைப் பறிக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை

## அமைச்சரவையில் ஏகமனதாகத் தீர்மானம்; ஜனாதிபதி மைத்திரியும் உடன்பாடு

(கொழும்பு)

**முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் முறையற்ற விதத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காணிகளை பறிமுதல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.**

கடந்த ஆட்சியின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக செயற்பட்ட பசில் ராஜபக்ஷவினால் கோடிக் கணக்கான பணம் கொள்ளையடிக்கப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் தவறான முறையில் பெற்றுக்கொண்ட பணத்தில் கொள்வனவு செய்த அனைத்து காணிகளையும் அரசாங்கத்திற்கு பறிமுகல் செய்ய அமைச்சரவை ஏகமனதான தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க நேற்று முன்தினம் இடம் பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்து. மேலதிக பொலிஸ் பயிற்சி கல்லூரி ஒன்றை நிர்மாணிப்பதற்காக வனாந்திரமாக உள்ள பகுதியில் காணி ஒன்றை பெற்றுக்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொழும்பிற்கு அருகில், மல்வானை களனி கங்கை அருகில் உள்ள 16 ஏக்கரில் பசில் ராஜபக்ஷவுக்கு சொந்தமாக உள்ள இடம் கிடைத்தால் சிறப்பாக இருக்கும் என அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

அந்தக் காணியை விரைவில் மேலதிக பொலிஸ் பயிற்சி கல்லூரி நிர்மாணிப்பதற்காக பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரின் இந்த யோசனைக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முழுமையான ஆதரவை வழங்கியுள்ள நிலையில், இந்தக் காணிகள் மக்களை ஏமாற்றி பெற்றுக் கொண்டவைகள், உடனடியாக அந்தக் காணியை மேலதிக பொலிஸ் பயிற்சி கல்லூரி ஒன்றை நிர்மாணிப்பதற்காக பெற்றுக் கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் மங்கள சமரவீர அமைச்சரவைக்கு யோசனை ஒன்றை சமர்ப்பித்து, மாத்தறை பிரவுன்ஸ் ஹில்லில் உள்ள பசில் ராஜபக்ஷவின் மைத்துனர் மற்றும் சகோதரிக்கு சொந்தமான இடத்தை அரசாங்கத்திற்கு பறிமுதல் செய்து அங்கு ஹோட்டல் மற்றும் பாடசாலை ஒன்று நிர்மாணிக்கப்பட வேண்டும் என குறிப்பிட்டுள்ளது.

கறுப்புப் பணத்தை வெள்ளை பணமாக மாற்றி கொள்வ னவு செய்யப்பட்ட காணிகளை முடிந்த அளவு விரைவில் அரசாங்கத்திற்கு பறிமுதல் செய்ய வேண்டும் என ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

அதற்கமைய இந்த இரண்டு காணிகளும் பொது மக்களின் நன்மைக்காக வெகுவிரைவில் பறிமுதல் செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. (இ-7-10)

## காஷ்மீர் கலவரம் குறித்து பாகிஸ்தான்; ஜனாதிபதி மைத்திரிக்கு விளக்கமளிப்பு

(கொழும்பு)

இந்திய ஆளுகையின் கீழ் உள்ள காஷ்மீரில் தற்போது நடந்து வரும் கலவரங்கள் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் சொஹைல் அமான் விளக்கமளித்துள்ளார்.



இலங்கை விமானப்படைத் தளபதியின் அழைப்பின் பேரில், இரண்டு நாட்கள் அதிகாரபூர்வ பயணமாக பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி கொழும்புக்கு வருகை தந்துள்ளார்.

இவர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களின் போது, போரின் போது இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்கியதற்காகவும், இலங்கை விமானப்படைக்கு பயிற்சிகளை வழங்குவதற்காகவும், அனைத்துலக அரங்கில் வழங்கி வரும் ஆதரவுக்காகவும். பாகிஸ்தானுக்கு ஜனாதிபதி நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

அத்துடன், இலங்கை-பாகிஸ்தான் இடையிலான பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவது குறித்து பேசப்பட்டதுடன், இந்திய ஆளுகையின் கீழ் உள்ள காஷ்மீர் விவகாரம் குறித்தும் பேச்சுக்கள் நடத்தப்பட்டிருக்கின்றன.

காஷ்மீரின் தற்போதைய கலவரங்கள் குறித்து ஜனாதிபதிக்கு பாகிஸ்தான் விமானப் படைத் தளபதி விளக்கிக் கூறியதாக, கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது. (இ-7-10)

## கல்வியியல் முதுமாணி, தமிழில் முதுகலைமாணி கற்கைநெறிகளுக்கான வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினால் யாழ்ப்பாண நிலையத்தில் நடத்தப்படும் கல்வியியல் முதுமாணி (அணி XII) இற்கான ஆரம்ப நிகழ்வும் தொடர்ந்து வகுப்புக்களும் மேலும் தமிழில் முதுகலைமாணி அணி VI இற்கான வகுப்புக்களும் நாளை மறுதினம் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு உயர் பட்டப்படிப்புகள் பீடத்தில் நடைபெறுமென யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி அறிவித்துள்ளார். (இ)

### தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-24

**(10.08.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)**

பகுதி I

| | | | |
|---|---|---|---|
| 01) 3 | 11) 1 | 21) 3 | 31) 2 |
| 02) 1 | 12) 3 | 22) 1 | 32) 1 |
| 03) 3 | 13) 2 | 23) 1 | 33) 1 |
| 04) 2 | 14) 1 | 24) 1 | 34) 3 |
| 05) 1 | 15) C,D | 25) 2 | 35) 3 |
| 06) 2 | 16) 2 | 26) 1 | 36) 2 |
| 07) 372 | 17) 2 | 27) 2 | 37) 2 |
| 08) 3 | 18) 1 | 28) 3 | 38) 3 |
| 09) 1 | 19) 3 | 29) 1 | 39) 3 |
| 10) 3 | 20) 2 | 30) 3 | 40) 1 |

# அமெரிக்காவுடனான ராணுவ உறவு தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## திஸ்ஸ விதாரண எச்சரிக்கை



(கொழும்பு)

**அமெரிக்கா- இலங்கை இடையிலான இராணுவ உறவுகள் வளர்ச்சியடைந்து வருவது, இலங்கையின் தேசிய பாதுகாப்புக்கு பிரதான அச்சுறுத்தலாக இருக்கும் என்று லங்கா சமசமாசக் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண எச்சரித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அவர்,

"அமெரிக்கா- இலங்கை இடையில் இராணுவ ஒத்துழைப்பு அதிகரித்து வருவதை அமெரிக்கத் தூதுவர் அதுல் கெசாப் உறுதிப்படுத்தியிருக்கிறார்.

அமெரிக்காவுடனான இராணுவ உறவுகளை இலங்கை தற்போதுள்ளது போல வளர்த்துக் கொண்டால் பிலிப்பைன்ஸ் போன்று அமெரிக்காவின் பொம்மையாகத் தான் மாறவேண்டியிருக்கும்.

திருகோணமலைத்துறைமுகத்தைப் பயன்படுத்த அமெரிக்கக் கடற்படையின் 7 ஆவது கப்பல்படைப் பிரிவுக்கு அனுமதித்ததன் மூலம் அரசாங்கம் இலங்கையின் இறையாண்மையை விட்டுக் கொடுத்திருக்கிறது.

முழு இந்தியப் பெருங்கடலையும் பாதுகாக்குமாறு இலங்கை கடற்படையிடம் அமெரிக்கா கேட்டிருக்கிறது.

கடற்படை மிகப் பெரிய சாதனைகளை நிகழ்த்தியிருந்தாலும், அதன் வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவை.

இந்தியப் பெருங்கடல் பாதுகாப்பில் கவனம் செலுத்தும் போது இந்திய மீனவர்களின் ஊடுருவல் உள்ளிட்ட இலங்கையின் கடல் எல்லைக்குள் நிலவும் பிரச்சினைகளை அவர்களால் கவனிக்க முடியாது.

இலங்கையின் சிறிய கடற்படையிடம் பெரிய பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால், அமெரிக்கக் கப்பல்கள் தான் இலங்கையில் நங்கூரமிடும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# நீரிழிவு காரணமாக இலங்கையில் பத்தாயிரம் பேர் உயிரிழக்கின்றனர்

நீரிழிவு நோய் காரணமாக ஆண்டு தோறும் இலங்கையில் சுமார் பத்தாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழக்கின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக் கிளை தெரிவித்துள்ளது.

நீரிழிவு நோயினால் அதிகளவில் 30 முதல் 69 வயது வரையிலானவர்களே உயிரிழக்கின்றனர்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 8 வீதமானவர்கள் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நீரிழிவு நோய்க்கு வழியமைக்கும் அதிக உடல் எடையைக் கொண்ட 26 வீதமானவர்கள் நாட்டில் இருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உடற் பயிற்சி, சரியான உணவுப் பழக்க வழக்கங்களின் ஊடாக 90 வீதமானவர்கள் நீரிழிவு நோயிலிருந்து மீள முடியும்.

அதிகளவில் மரக்கறி, பழ வகைகள் உட்கொள்ளுதல் மற்றும் அடிக்கடி மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளுதல் போன்றவற்றின் ஊடாக நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த முடியும்.

நாள் ஒன்றுக்கு பத்தாயிரம் அடி தூரம் நடப்பதன் மூலம் சிறந்த உடற்பயிற்சி கிடைக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (இ-7-10)

# போதைப் பொருட்களைக் கண்டறிய வெளிநாட்டிலிருந்து மோப்ப நாய்கள்

நாட்டுக்கு பெரிய கொள்கலன்களின் ஊடாக போதைப் பொருள் கடத்தப்படுகின்றமைக்கு எதிராக வெளிநாடுகளில் இருந்து மோப்ப நாய்கள் கொண்டு வருவதற்கு சுங்க அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதாக சுங்க திணைக்கள வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

அண்மையில், கொழும்பில் பாரியளவிலான போதைப் பொருள் கொள்கலன்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டதாக சுங்க திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்காக நாய்களை வெளிநாடுகளில் இருந்து கொண்டு வருவது தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் தான் கலந்துரையாட உள்ளதாக சுங்கத் திணைக்கள பொது பணிப்பாளர் சுலந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரேசிலில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனி கொள்கலனில் பாரியளவு கொக்கேய்ன் மீட்கப்பட்டது.

இதன் பெறுமதி பில்லியன் கணக்குகள் ஆகும். இவற்றை இனங்காண கடுமையான ஆய்வுக்கு உட்படவேண்டியிருந்ததாகவும் சுங்கத் திணைக்கள பொது பணிப்பாளர் தெரிவித்தார்.

இவ்வாறான கண்டுபிடிப்புகளுக்கு நான்கு சோதனையிடும் உபகரணங்களை கோரியுள்ளதாகவும் இந்த வருட இறுதிக்குள் உபகரணங்கள் கிடைத்து விடும் என சுலந்த பெரேரா நம்பிக்கை வெளியிட்டுள்ளார் (இ-7-10)

# அரசிடம் 59 கோடி கேட்கும் பொன்சேகா



(கொழும்பு)

எதிர்வரும் மாதங்களில் பிரதேச அபிவிருத்திக்காக அமைச்சர் சரத்பொன்சேகா 59 கோடியே 29 இலட்சம் நிதியினை அரசிடம் கோரியுள்ளார்.

இதற்கான மனுவானது ஜூன் மாதம் 28 ஆம் திகதி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், ஜூலை 12 ஆம் திகதி இதற்கான அனுமதி அமைச்சரவையால் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பிரதேச அமைச்சின் மூலதன செலவுகள் உள்ளிட்டவைக்கே, இந்த நிதி அமைச்சரால் கோரப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக பாராளுமன்றில் நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7-10)

# இன்று ஒரு தகவல்

## இங்கிதம் தெரியவேண்டும்!

இங்கிதம் என்றால் என்ன? நான் விசாரித்துப் பார்த்த வரை மிக விபரம் தெரிந்தவர்கள் என நான் எண்ணிக்கொண்டிருப்பவர்கள் கூட இதற்குத் தெளிவான அல்லது மனநிறைவு தரும் விளக்கத்தைத் தரவில்லை.

இங்கிதம் என்பதைச் சுருக்கமாக விளக்குவது கடினம் தான்.

ஆனால் கொஞ்சங்கூட இங்கிதம் தெரியாதவன் என்று நம் சமூகம் பலரைச் சுலபமாகக் குற்றச்சாட்டுக்கு ஆளாக்குகிறது.

இங்கிதம் தெரியாதவர்கள் உண்மையில் யார் என்றால்,

சுற்றுப்புற சூழ்நிலைகளை உணராதது அவற்றிற்கு நேர்மாறாக அதாவது எதிர்ப்பதமாக நடந்து கொள்பவர்களே இங்கிதம் தெரியாதவர்கள்.

பண்பு நிறைந்தவர்கள் மத்தியில் பண்பற்ற செயல்களைச் செய்பவர்கள் அல்லது பேசுபவர்கள்.

பிறர் கொஞ்சமும் விரும்பாத செயல்களில் ஈடுபடுகிறவர்கள். மற்றவர்கள் இரகசியம் பேச எண்ணும்போது அந்த இடத்தைவிட்டு விலகாதவர்கள்; இரகசியத்தை வெளிவிடக்கூடாத இடத்தில் அதைப் போட்டு உடைப்பவர்கள்; நேரங்கெட்ட நேரத்தில் மற்றவர்களைத் தொந்தரவு செய்கிறவர்கள்; மற்றவர்கள் கொஞ்சமும் விரும்பாததைக் கட்டாயப்படுத்திச் சாதித்துக் கொள்கிறவர்கள்; மற்றவர்கள் தங்கள் வேதனை குறித்துக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும்போது அதை மனதில் வாங்கிக் கொள்ளாமல் தங்கள் சுயநலத்தை வெளியிடுபவர்கள்; பிறரது அவசரங்களைப் புரிந்து கொள்ளாதவர்கள்; மற்றவர்களை இக்கட்டில் நெளிய வைக்கிற மாதிரி கேள்விகள் கேட்பவர்கள்; சொன்னாலும் புரியாமல் தன்னாலும் உணராமல் நடந்து கொள்கிறவர்கள் போன்ற இங்கிதம் தெரியாதவர்கள் பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம்.

மொத்தத்தில் மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கத் தெரியாதவர்களே இங்கிதம் தெரியாதவர்கள்.

நடைமுறையான வாழ்வு வாழாமல் நடைமுறைகளுக்கு அப்பாற்பட்ட வாழ்வு வாழ்கிறவர்கள் இவர்கள்.

எந்த ஒரு குற்றச்சாட்டுக்கு உள்ளானாலும் பரவாயில்லை; தயவு செய்து இங்கிதம் தெரியாத ஜென்மம் என்ற குற்றச்சாட்டுக்கு மட்டும் ஆளாகிவிட வேண்டாம்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

1488

## ஏன் சிரிக்கிறாய்?

ஒரு பண்ணையில் ஆண் கழுதை யொன்றும், பெண் கழுதையொன்றும் வளர்ந்து வந்தன. ஆண் கழுதை பகலில் கடுமையாக உழைக்கும். பண்ணைக்குள் கொண்டு செல்ல வேண்டிய சரக்குகளை முதுகில் சுமந்து செல்லும். மாலை தங்குமிடம் வந்ததும் அங்கு கிடக்கும் காய்ந்த புல்லை மேய்ந்து பசியாறும்.

பெண் கழுதை எந்த வேலையும் பாரப்பதில்லை. பசுமையாகக் கிடைக்கும் புல்லைத் தின்று விட்டு, தொழுவத்தில் தூங்கி எழும். மிகவும் மகிழ்ச்சியாக, வேலை பார்க்காமல் பொழுதை கழித்தது.

ஒருநாள் உழைத்த களைப்புடன் சோர்வாக ஆண் கழுதை வந்து சேர்ந்தது. களைப்பின் மிகுதியால் வந்தவுடனே படுத்தும் விட்டது. ஆண் கழுதையைப் பார்த்து பெண் கழுதை பரிதாபப்பட்டது.


"உன்னைப் பார்க்கவே பாவமாக இருக்கிறது!" என கிண்டல் செய்தது.

"என்ன செய்வது என் நிலை அப்படி, உழைததால தான் முதலாளி விடுவார்!" என்றது ஆண் கழுதை.

இதைக் கேட்டதும் பெண் கழுதை சிரித்தது.

"ஏன் சிரிக்கிறாய்?"

"சிரிக்காமல் என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? நான் மட்டும் கஷ்டப்பட்டு வேலையா செய்கிறேன்!"



ஆண் கழுதை அதை ஆச்சரியத்துடன் பார்த்தது.

"ஆமாம் நானும் இதைப் பற்றி உன்னிடம் கேட்க வேண்டும் என்று தான் நினைத்திருந்தேன். அதை முதலில் கூறு!"

"பண்ணையாள் வந்து உன் கயிற்றினை அவிழ்த்து விட்டதும், உடனே நீ வேலை செய்யப் போய் விடுவாய். நான் அப்படிப் போய் விட மாட்டேன்!"

"பிறகு என்ன செய்வாய்?"

"அப்படியே படுத்திருப்பேன். நான் எழவில்லை என்றதும் சாட்டையால் நான்கு அடி அடிப்பான். பொறுத்துக் கொண்டு படுத்துக் கொள்வேன். பிறகு என்னை விட்டு விடடுச் சென்று விடுவான்!" என்றது பெண் கழுதை.

"இவ்வளவுதானா!" ஆச்சரியமாகக் கேட்டது ஆண் கழுதை.

"ஆமாம் நீயும் அது போல சண்டித்தனம் செய்து விடு. உன்னையும் பண்ணையாள் விட்டுவிட்டுப் போய் விடுவான். எல்லாம் நம் கையில்தான் உள்ளது!" என அறிவுரை வழங்கியது.

காலைப் பொழுது வேலைக்குச் செல்லும் நேரம பண்ணையாள்வந்தான். வழக்கம்போல் ஆண கழுதையைப் பிடித்துக் கொண்டு செல்ல முயன்றான். இன்று ஆண் கழுதை படுத்துக் கொண்டு சண்டித்தனம் செய்தது.

பண்ணையாள் சாட்டை எடுத்து அடித்தும் பார்த்தான். ஆண் கழுதை எழுவதாய்த் தெரியவில்லை. பண்ணையாள் பல விதங்களிலும் முயற்சி செய்து பார்த்து விட்டு, முதலாளியிடம் சென்றான்.

"அய்யா! இந்த ஆண் கழுதை என்றுமில்லாமல் சண்டித்தனம் செய்கிறது!" என்றான்.

"சரி பரவாயில்லை. இன்றைக்கு ஆண் கழுதைக்கு ஓய்வு கொடுத்துவிடு. தினமும் நன்றாகச் சாப்பிட்டுக் கொழுத்து சும்மா இருக்கும், அந்தப் பெண் கழுதையை அடித்து இழுத்துப் போ!" என்றார்.

பண்ணையாளும் வந்து ஆண் கழுதை சாப்பிட பசும் புல்லைக் கொண்டு வந்து போட்டான்.

பிறகு, பெண் கழுதையை இழுத்துச் சென்று வேலையில் ஈடுபடுத்தினான். கெட்டதை சொல்லிக் கொடுக்கப் போய் தன்னுடைய பிழைப்பே போய் விட்டதை எண்ணி மிகவும் வருந்தியது பெண் கழுதை.

## 08.2016 11 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- கி.மு 2492 - ஆர்மீனியா அமைக்கப்பட்டது.
- கி.மு 480 - பாரசிகர்கள் கிரேக்கர்களை கடற்சமரில் வென்றனர்.
- கி.மு 586 - ஜெருசலேமில் சாலமோன் மன்னனால் கட்டப்பட்ட முதலாவது ஆலயம் பபிலேனியர்களினால் அழிக்கப்பட்டது.
- 355 - நாட்டுத்துரோகக் குற்றம் சாட்டப்பட்ட குளோடியஸ் சில்வானஸ் ரோமப் பேரரசனாகத் தன்னை அறிவித்தான்.
- 1786 - மலேசியாவில் பெனாங்க்கில் கப்டன் பிரான்சிஸ் லையிற் என்பவனால் பிரித்தானியக் குடியேற்றம் அமைக்கப்பட்டது.
- 1804 - இரண்டாம் பிரான்சிஸ் ஆஸ்திரியாவின் முத்லாவது மன்னன் ஆனான்.
- 1812 - இலங்கையில் தாவரவியல் பூங்கா அமைக்கப்பட்டது.
- 1898 - அமெரிக்கப் படைகள் புவெர்ட்டோ ரிக்கோவின் மயாகெஸ் நகரினுள் நுழைநதன.
- 1920 - லாத்வியாவின் அதிகாரத்தை போல்ஷெவிக் ரஷ்யாவிடம் வழங்கும் உடன்பாடு லாத்வியாவுக்கும் ரஷ்யாவுக்குமிடையில் ஏற்பட்டது.
- 1954 - கன்னியாகுமரி மற்றும் செங்கோட்டை மாவட்டங்களை தமிழ்நாட்டுடன் இணைக்கும் போராட்டத்தில் பங்கு பற்றிய 16 தமிழர்கள் காவற்துறையினரால் சுடப்பட்டு மாண்டனர்.
- 1960 - பிரான்சிடம் இருந்து சாட் விடுதலையை அறிவித்தது.
- 1965 - கலிபோர்னியாவில் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் வாட்ஸ் என்ற இடத்தில் இடம்பெற்ற இனக் கலவரங்களில் 34 பேர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர்.
- 1968 - பிரித்தானியாவின் நீராவித் தொடருந்து தனது கடைசி பயணிகள் சேவையை நடத்தியது.
- 1972 - வியட்நாம் போர்: கடைசி அமெரிக்க தாக்குதல் படையினர் தென் வியட்நாமை விட்டுப் புறப்பட்டனர்.
- 1975 - போர்த்துக்கீசத் தீமோரில் உள்நாட்டுக் கலவரம் ஆரம்பித்ததில் அதன் ஆளுநர் "மாரியோ லெமொஸ் பிரெஸ்" தலைநகர் டிலியை விட்டுத் தப்பினார்.
- 1984 - வானொலி ஒன்றிற்காக தனது குரலை சோதிப்பதற்காக அமெரிக்க அதிபர் ரொனால்ட் றேகன் கூறியது: "எனது சக அமெரிக்கர்களே, ரஷ்யாவை அழிப்பதற்கான சட்டவாக்கத்திற்கு இன்று ஒப்புதல் அளித்திருக்கிறேன். இன்னும் ஐந்து நிமிட நேரத்தில் குண்டுவீச்சு ஆரம்பமாகும்".
- 1999 - ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் முழுமையான சூரிய கிரகணம் தென்பட்டது.
- 2003 - ஆப்கானிஸ்தானுக்கு அமைதி காக்கும் படையை நேட்டோ நாடுகள் அனுப்பின.
- 2003 - ஜெமா இஸ்லாமியா இயக்கத் தலைவர் ரிதுவான் இசாமுதீன் (ஹம்பாலி) பாங்கொக் நகரில் கைது செய்யப்பட்டார்.
- 2006 - யாழ் குடாநாட்டையும் இலங்கையின் தென்பகுதியையும் இணைக்கும் ஏ9 நெடுஞ்சாலை காலவரையறையின்றி மூடப்பட்டு யாழ்ப்பாண மக்கள் குடாநாட்டுக்குள் முடக்கப்பட்டனர்.

### பிறப்புக்கள்

- 1837 - மரீ பிரான்சுவா சாடி கார்னோ, பிரெஞ்சு அரசியல்வாதி . (இ. 1894)
- 1897 - எனிட் பிளைட்டன், எழுத்தாளர். (இ. 1968)
- 1920 - மைசூர் •வீ. துரைசுவாமி ஐயங்கார், கருநாடக இசை வீணை வாத்தியக் கலைஞர். (இ: 1997)
- 1937 - ஜான் ஆபிரகாம், திரைப்பட இயக்குநர். (இ. 1987)
- 1943 - பெர்வேஸ் முஷாரஃப், பாகிஸ்தான் அதிபர்
- 1959 - தர்மரத்தினம் சிவராம், இலங்கையின் பிரபல ஊடகவியலாளர். (இ. 2005)

### இறப்புகள

- 1747 - விஜய ராஜசிங்கன் - கண்டி நாயக்க மன்னன்.
- 1890 - ஜான் ஹென்றி நியூமன், ஆங்கிலக் கர்தினால், ஆக்ஸ்போர்ட் இயக்கத் தலைவர்களில் ஒருவர். (பி. 1801)
- 1956 - ஜக்சன் பொல்லொக், அமெரிக்க ஓவியர். (பி. 1912)
- 2014 - ராபின் வில்லியம்ஸ், அமெரிக்க நடிகர். (பி. 1951)

### சிறப்பு நாள்


- சாட் - விடுதலை நாள். (1960)
- பிறேசில் - மாணவர் நாள்.

## தர்மரத்தினம் சிவராம்



தர்மரத்தினம் சிவராம் அல்லது தராக்கி சிவராம் (ஆகஸ்ட் 11, 1959 ஏப்ரல் 28, 2005) இலங்கையின் பிரபலமான ஊடகவியலாளரும் தமிழ்நெட்டின் பிரதான எழுத்தாளரும் முன்னாள் போராளியுமாவார். கொழும்பு பம்பலப்பிட்டியில் காவல் நிலையம் முன்பாக வெள்ளை நிற கூடுந்து (வான்) ஒன்றில் வந்த ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட இவர் தாக்கப்பட்ட பின்னர் வாகனமொன்றில் கொண்டு வரப்பட்டு இலங்கை பாராளுமன்றத்துக்கு அருகில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். தலையை இலக்கு வைத்தே 9 மில்லி மீட்டர் வகை கைத்துப்பாக்கியினால் இவர் சுடப்பட்டுள்ளார். சிவராம் கிழக்கிலங்கையின் மட்டக்களப்பில் மகேஸ்வரி, புவிராஜகீர்த்தி தர்மரட்ணம் அகியோருக்கு மகனாகப் பிறந்தார். சிவராமின் தந்தையார் கேம்பிறிட்ச் பல்கலைக்கழகத்தில் பயின்றவர். அவரின் பாட்டனார் சபாபதிப்பிள்ளை தர்மரெட்ணம் (வன்னியனார்) 938-ஆம் ஆண்டில் மட்டக்களப்பின் இரண்டாவது தெரிவு செய்யப்பட்ட இலங்கை சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர். சிவராம் 1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் யோகரஞ்சனி என்பவரை வாழ்க்கைத் துணையாக ஆக்கிக்கொண்ட சிவராமிற்கு வைஸ்ணவி, வைதேகி என்ற இரு மகள்களும் சேரலாதன் என்ற மகனும் உள்ளனர். ஆரம்பக்கல்வியை புனித மிக்கேல் கல்லூரியில் கற்றார். அதைத் தொடர்ந்து கொழும்பில் அக்குவானாஸ் கல்லூரியில் தொடர்ந்தார். பல்கலைக்கழகத்திற்கு தெரிவான இவர் பேராதனைப் பல்கலைகழகத்தில் அனுமதிபெற்றார். செப்ரெம்பர் 1981இல் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்ற அவர், ஆங்கிலத்தினையும் ஒரு பாடமாகக் கொண்டு இரண்டு ஆண்டுகள் மட்டுமே அங்கு பயின்ற பின்னர், அரசியல் ஈடுபாட்டினாலும், 1983 இல் இடம்பெற்ற இனக்கலவரங்களினாலும் பல்கலைக்கழகக் கல்வியைக் கைவிட்டார்.

# கதிரைகள் கையளிப்பு



பாராளுமன்ற உறுப்பினர் கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து தெல்லிப்பழை தந்தை செல்வாபுரம் கன்னிவளவு பிள்ளையான் அறநெறி பாடசாலைக்கு ஒரு தொகுதி கதிரைகள் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் டக்ளஸ் தேவானந்தா சார்பில் யாழ். மாவட்ட நிர்வாக செயலாளரும் யாழ். மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கா.வேலும் மயிலும்குகேந்திரன்(வி.கே.ஜெகன்) கலந்து கொண்டார். (இ-9)

# கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகள் 1134 பேருக்கு விரைவில் நியமனம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணப் பட்ட தாரிகள் 1134 பேருக்கு விரைவில் ஆசிரியர் நியமனம் வழங்க மத்திய கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கடந்த வாரம் பட்டதாரி ஆசிரியர்கள் 35 வயதுக்குட்பட்ட 355 பேருக்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. இந்நிலையில் முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட், மாகாணக் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் மற்றும் சம்பந்தப்பட்டவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து மீண்டும் 1134 பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்க இந்த அனுமதி கிடைத்துள்ளன.

இதன் பிரகாரம் தமிழ் மொழியில் 823 பட்டதாரிகளும், சிங்கள மொழியில் 311 பட்டதாரிகளும் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர் என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் நேற்று முன்தினம் தெரிவித்தார். (இ-7-10)

# உள்ளூராட்சி உதவியாளர்கள் பதவி அணிக்கான 26 புதிய ஆளணிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் உள்ளூராட்சி உதவியாளர்கள் பதவி அணிக்கான 26 புதிய ஆளணிகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

நிதிப்பிரமாணம் 71இன் கீழ் நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் (என். கொடாங்கண்ட) புதிதாக அங்கீகரிக்கப்பட்ட 26 உள்ளூராட்சி உதவியாளர்களின் (LGAS) பதவி ஆளணி விபரம் மாகாண சபைகள் உள்ளூராட்சிஅமைச்சின் செயலாளருக்கும் வடமாகாண பிரதம செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 17 வருடங்களாக உள்ளூராட்சி உதவியாளர்கள் வகுப்பு II,தரம்I பதவி உயர்வு அற்ற நிலையில் நியமன தரமான வகுப்பு III இலேயே தற்போதும் கடமையில் உள்ளனர்.

இந் நிலையிலேயே கடந்த 23.06.2016 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/NP/0171 இலக்க கடிதம் மூலம் அவர்களுக்குரிய பதவி உயர்வு கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு வழங்கப்பட்டது போன்று வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான அனுமதியைப் பணிப்பாளர் நாயகம் என். கொடாங்கண்டவினால் வழங்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் சம்பள நியமனம் அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3/2016 இன் MN-4-2016 என்ற அடிப்படையிலும் பதவி உள்ளூராட்சி உதவியாளர் என்ற அடிப்படையிலும் சேவை என்பது உள்ளூராட்சி உதவியாளர் சேவை குறிப்பு எனவும் சேவை மட்டம் இரண்டாம் தரம் வகுப்பு III,II,I என்ற அடிப்படையிலும் ஆக மொத்தம் வடக்கில் 26 புதிய ஆளணி அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பதவி உயர்வுகளை புதிய ஆளணி அங்கீகரிப்பின் பிரகாரம் வழங்கி அறிக்கையிடுமாறு பணிப்பாளர் நாயகம் கேட்டுள்ளார்.

மேற்படி கடிதம் யாவும் வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு முகவரியிட்டு செயலாளர், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சுக்கும் கணக்காய்வு அதிபதிக்கும் சம்பளங்கள் ஆளணிக்குழு செயலாளருக்கும் நிதி ஆணைக்கு செயலாளர்,வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளருக்கும் பிரதியிடப்பட்டுள்ளது. (இ)

Sats-Tech Engineers
மற்றும்
Tv Lanka Digital Cable Less Televion

நிறுவனத்தினர் இணைந்து வழங்கும்
நல்லூர் கந்தனின்
மஹோற்சவ கால விசேட சலுகை விற்பனை
தொலைக்காட்சி ரசிகர்களே!!!
ரூபாய் 4,999/-* செலுத்தி இணைப்பை
பெற்றுக்கொள்ளுங்கள்.
2 வருடங்கள் எந்தவிதமான
கட்டணங்களும் செலுத்த வேதவையில்லை.


Rs. 4,999/-*
2 year total free subscription

சன் டிவி/ கே டிவி உட்பட 25 தமிழ் சானல்கள் மற்றும்
விளையாட்டு/ சிறுவர் நிகழ்ச்சி
/ ஆங்கிலச்சானல்கள் / விஞ்ஞான சானல்கள்
மொத்தம் 60 டிஜிட்டல் டிவி சானல்களை கண்டு களிக்க
கூடிய அதி உயர் தொழில்நுட்ப முறையிலான
கேபிள் இல்லா தொலைக்காட்சி சேவை மூலம்
கண்டு களிக்க ஓர் அரிய வாய்ப்பு!


தொடர்புகளுக்கு :-
SATS-TECH ENGINEERS
NO 298 K.K.S ROAD JAFFNA
PHONE: 0212228812
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

## (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 806


யோகேஸ்




ராஜ்





நிசாந்தன்





கமலா




தர்சி




கன்சி



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# குழந்தை யாருடையது? விமான நிலையத்தில் பெண் தடுத்துவைப்பு

ஒரு வயதுக் குழந்தையுடன் இலங்கையிலிருந்து தனது சொந்த நாட்டுக்கு திரும்பியுள்ள இஸ்ரேல் பெண், டெல் அவிவ் விமான நிலையத்தில் கடந்த சனிக்கிழமை முதல் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணுடன் இருந்த குழந்தை யாருடையது என்ற கேள்வி எழுந்துள்ளதால், 49 வயதான கெலிட் நாகாஷ், என்ற பெண் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழந்தை அவருடைய சொந்தக் குழந்தையா என்பதை அறிய டி.என்.ஏ சோதனை செய்யப்படவுள்ளதாக தெரிகிறது.

இந்த சோதனையில் அந்த குழந்தை அவருடையது இல்லையென தெரிந்தால் அந்தக் குழந்தை இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படும் என்று அந்நாட்டு அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்.

இலங்கையை விட்டு வருவதற்கு இன்னொரு குழந்தையின் கடவுச்சீட்டை பயன்படுத்தி இருப்பதை விமான நிலைய அதிகாரிகள மேற்கொண்ட சோதனையில் தெரியவந்ததையடுத்து, அவர் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்.

வர்த்தகப் பயணத்தின்போது அவர் இலங்கையில் குழந்தையை பெற்றெடுத்ததாகவும் ஆனால் குழந்தைக்காக அவர் அளித்த விசா விண்ணப்பம் மறுக்கப்பட்டு விட்டதாகவும் நாகாஷ் கூறியுள்ளார். (இ-7-10)

# சீமெந்து தொழிற்சாலைகளில் புதிய முதலீடுகளை செய்ய தாய்லாந்து விருப்பம்

புத்தளம் மற்றும் காலி சீமெந்து தொழிற்சாலைகளில் புதிய முதலீடுகளை மேற்கொள்வதற்கு தாய்லாந்தின் முக்கிய சீமெந்து உற்பத்தி நிறுவனமான சியாம் சிட்டி நிறுவனம் விருப்பம் தெரிவித்துள்ளது.

அதன் தலைமை நிறைவேற்று அதிகாரி சிவ மகசண்டனா உள்ளிட்ட முன்னணி அதிகாரிகள் சிலர் நேற்று முன்தினம் முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தனர்.

இலங்கை இன்று அடைந்துள்ள பொருளாதார அபிவிருத்தி வேகம் இதன்போது இத்தூதுக் குழுவினரால் பாராட்டப்பட்டதுடன், இலங்கை இன்று முதலீட்டுக்கு மிகவும் பொருத்தமான ஒரு நாடு என்றும் எதிர்காலத்தில் இலங்கையில் மேலும் பல முதலீடுகளை செய்வதற்கு தமது நிறுவனம் விருப்பத்தோடு உள்ளதாகவும் மேலும் தெரிவித்தனர்.

இலங்கையில் நிலவும் புதிய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பாக ஜனாதிபதி இதன்போது தூதுக் குழுவினருக்கு விரிவாக விளக்கினார்.

இலங்கையின் தாய்லாந்து தூதுவரும் இந்நிகழ்வில் பிரசன்னமாகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 60 | 100 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 400 | 150 | 180-200 | 200 | 300 |
| தக்காளி | 50 | 100 | 50 | 60 | 30 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 80 | 80 | 60 | 100 |
| கோவா | 120 | 100 | 100 | 120 | 100 | 100 |
| கரட் | 100 | 200 | 120 | 140 | 160 | 100 |
| பூசணி | 60 | 40 | 60 | 60 | 60 | 60 |
| புடோல் | 50 | 40 | 30 | 60 | 40 | 40 |
| வாழைக்காய் | 80 | 150 | 100 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 60 | 80 | 60 | 60 | 70 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 65 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 120 | 200 | 100 | 130-200 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 | 60 | 80 | 40 |
| கருணைக்கிழங்கு | 60 | 150 | — | 120 | 140 | 150 |
| பயற்றங்காய் | 40 | 20 | 20 | 40 | 20 | 60 |
| லீக்ஸ் | 100 | 100 | 50 | 120 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 50 | 60 | 80 | 50 | 80 |
| கறிமிளகாய் | 200 | 300 | 200 | 200-400 | 160 | 150 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 100 | 120 | 120 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 200 | 200 | 150 |
| கத்தரிதம்பள்ள | 40 | 50 | 70 | 60 | 50 | 100 |
| கீரை – 1பிடி | 30 | 20 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 160 | 120 | 150 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-50 | 40 | 40 | 20-30 | 40 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 160 |
| வெங்காயப்பூ | 140 | 80 | 140 | 120 | 120 | 120 |
| முள்ளங்கி | 30 | 50 | 20 | 50 | 60 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 50 | 10 | 30 | 50 | 50 | 50 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## விடுதலைப்புலி விமானங்கள் கடைசி கட்ட தாக்குதல் 249

இந்தத் தளங்கள் மீது வெற்றிகரமான தாக்குதல்களை நடத்திய வான்புலிகளின் கரும்புலிகளான கேணல் ரூபன், லெப்டினண்ட் கேணல் சிரித்திரன் ஆகியோரின் திறமையான வீரச்செயல்களுக்கு தலைவர் பிரபாகரன் அவர் களால் நீலப்புலிகள் என்ற தேசிய விருது இந்த 2 மாவீரர்களுக்கும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

### பிரபாகரனுடன் சந்திப்பு

கொழும்பில் விமானத் தாக்குதல் நடத்திய 2 வான் கரும்புலிகளும் தாக்குதலுக்குப் புறப்படுவதற்கு முன்னர் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து விடடுச் சென்றனர்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் தமிழ் நெட் டொட்காம் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டது.

ரூபன், சிரித்திரன் ஆகிய இருவரும் புறப்படுவதற்கு முன்னர் பிரபாகரனுடன் எடுத்துக்கொண்ட புகைப்படமும் வெளியிடப்பட்டது.

### அரசு ஒப்புதல்

அரசாங்கமும் இந்தத் தாக்குதல் தற்கொலைத் தாக்குதல் தான் என்பதை ஒப்புக் கொண்டது. சுட்டு வீழ்த்தப்பட்டதில் செயல் இழந்த நிலையிலுள்ள ஒரு குட்டி விமானத்தில் ஏராளமான சக்தி வாய்ந்த வெடிபொருட்கள் (280 பவுண்டுக்கும் மேல்) இருந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

விமானத்தின் உடைந்த பாகங்களைக் கொண்டு பார்க்கும் போது அவை சாதாரண கருவிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை. ஏராளமான வெடி பொருட்களைக் கொண்ட வந்துள்ளன என்று இராணுவச் செய்தித் தொடர்பாளர் உதயநாணயக்காரா கூறினார்.

### முரண்பட்ட தகவல்கள்

விடுதலைப்புலிகள் நடத்திய விமானத்தாக்குதல் குறித்து அரசாங்கம் முரண்பட்ட தகவல்களைத் தெரிவித்தது. தாக்குதலில் 2 பேர் பலியானதாக கூறிய அரசாங்கம் 5 பேர் பலியானதாக பின்னர் அறிவித்தது.

ஜனக நாணயக்கார என்ற இராணுவ அதிகாரி தாக்குதல் நடத்திய ஒரு விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாகவும் இன்னொரு விமானம் விமானப் படை தலைமையகம் எதிரே உள்ள வருவாய் துறை அலுவலக கட்டடம் மீது வெடித்துச் சிதறியதாகவும் தெரிவித்தார். ஆனால் இன்னொரு இராணுவ அதிகாரி கூறுகையில், ஒரு விமானத்தைச் சுட்டு வீழ்த்திய தாகவும் மற்றொரு விமானம் தப்பிச் சென்று விட்டதாகவும் தெரிவித்தார்.

### வெற்றிகரமாக

ஆனால் தங்களது தற்கொலலப்படையின் வான் கரும்புலிகள் தாக்குதலை வெற்றிகரமாக முடித்ததாக விடுதலைப்புலிகள் தெரிவித்தனர்.

தாக்குதல் நடத்த வந்த விடுதலைப்புலிகளின் 2 விமானங்களும் கொழும்பில் நீண்ட நேரம் தாழ்வாகப் பறந்து தாக்குதலை நடத்தியதாகவும் கொழும்பு நகரமே வெடி குண்டு சத்தத்தால் அதிர்ந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.


### நேரில் பார்த்தவர்

2 விமானங்களும் புதுக் குடியிருப்பில் இருந்து கிளம்பி ரேடார் கண்ணில் மண்ணைத் தூவுவதற்காக கிளிநொச்சி, மன்னார், மாங்குளம் வழியாக கொழும்புக்கு வந்ததாகத் தெரியவந்தது.

நானும் என் நண்பரும் உயரமான கட்டடத்தின் மொட்டை மாடியில் உலவிக் கொண்டிருந்தோம். அப்போது மிகவும் ஆபத்தான நிலையில் எங்கு செல்கிறோம் என்று தெரியாதபடி வானத்தில் பயங்கர சத்தத்துடன் 2 விமானங்கள் சென்றன என்று நேரில் பார்த்த ஜெயந்த டி சில்வா என்பவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் விமானிகள் வெளிநாடுகளில் பயிற்சி பெற்று இருக்க வேண்டும் என்று வர்த்தக விமானங்களை செலுத்தும் விமானிகள் கருத்து தெரிவித்தனர்.





◆ ◆ ◆ ◆ ◆

விடுதலைப்புலிகளின் வசம் இருந்த கடைசி பெரிய நகரமான புதுக்குடியிருப்பை இராணுவம் கைப்பற்றியது. விடுதலைப்புலிகளுடன் முல்லைத்தீவில் உச்சகட்டப் போரை நடத்தி வந்த சிங்கள இராணுவம் முப்படையைக் கொண்டு பயங்கர தாக்குதல் நடத்தியது.

விமானப்படையில் இஸ்ரேல் நாட்டில் தயாரான கபிர் என்னும் அதிநவீன ரக போர் விமானத்தை இராணுவம் குண்டு வீசுவதற்குப் பயன்படுத்திவந்தது.

இந்த ரகத்தை சேர்ந்த சில விமானங்கள் தான் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளில் குண்டு மழை பொழிந்தது. நூற்றுக்கணக்கானவர்களைத் கொன்று குவித்தன.

### சுட்டு வீழ்த்தப்பட்டது

27-02-2009 அன்று காலை 11.25 மணி அளவில் கபிர் ரக போர் விமானம் ஒன்று இராணுவம் சண்டையிட்டு வரும் முல்லைத்தீவு பகுதியில் தரைப்படை வீரர்கள் முன்னேறிச் செல்வதற்கு உதவியாக குண்டுகளை வீசுவதற்கு புறப்பட்டு சென்றது.

அந்த விமானம் இலக்கை குறிவைத்து குண்டுகளை வீசத்தயாரான போது அதை நோக்கி விடுதலைப்புலிகளின் விமான எதிர்ப்பு அணியினர் ஏவுகணைத் தாக்குதல் நடத்தினர்.

அந்த ஏவுகணை போர் விமானத்தைத் துல்லியமாகத் தாக்கியது.

இதனால் அந்த விமானம் நடு வானிலேயே தீப்பிடித்து வெடித்து இரணைப்பாலை என்ற இடத்தில் சிதறி விழுந்தது.

இராணுவத்துக்குச் சொந்தமான போர் விமானம் நடு வானில் வெடித்ததையும் அந்த விமானம் பிறகு தீப்பிடித்தவாறு கரும்புகையுடன் கீழே விழுந்ததையும் அப்பகுதியில் உள்ள மக்கள் பார்த்ததாக தமிழ் நெட் இணையத்தளம் செய்தி வெளியிட்டது.

(தொடரும்)

# திருவள்ளுவர் தந்த திருக்குறளின் வாழ்க்கைத் தத்துவங்கள்



உலகளாவிய தத்துவங்களைக் கொண்ட திருக்குறளை இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் திருவள்ளுவர் படைத்து உலக இலக்கிய அரங்கில் தமிழ்மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலை பெறச் செய்தவர்.

இந்த உண்மையைப் பாரதியார், வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்று புகழாரம் சூட்டியுள்ளார்.நம் அன்னைத் தமிழ்மொழியில் காலத்துக்குக் காலம் பல்வேறு நூல்கள் தோன்றிய வண்ணமுள்ளன. அவற்றுள் கால வெள்ளத்தில் மறைந்தன சில உண்டு.காலத்தை வென்று வாழும் சிறப்பிற்குரியன சிலவும் உண்டு. அத்தகு சிறப்பிற்குரிய ஈடு இணையற்ற நூலாகப் போற்றப்படுவது திருக்குறள் ஒன்றேயாகும். காலத்தை வென்று வாழும் இந்நூல் உலக மக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் பெருமைக்குரியது. திருமால் ஈரடியால் உலகளந்தார் என்றுரைப்பர் புராண வித்தகர்கள். ஆனால் திருவள்ளுவர் இரண்டு அடிகளால் உலக மக்கள் அனைவரதும் உள்ளங்களை அளந்துள்ளார் என்றால் அது மிகையல்ல. இதனாலே புரட்சிக்கவி பாரதியும்

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"எனப் போற்றினார்.

வள்ளுவன் தந்த முதற்குறளே பரந்த நோக்குடையதாக உலக சமுதாயம் அனைத்தையும் ஒன்றாகக் கருதும் பண்புடையதாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் கருத்துடையதாக மிளிர்வதைக் காணலாம்.

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு" என்கிறார் வள்ளுவர்.இது இன்றைய நிலையில் மிக முக்கியமாக நோக்கு தற்குரிய கருத்தாகும். சமயப் பொதுமைக்கும் முற்போக்குச் சிந்தனைக்கும் தொடக்கமாக அமைகிறது இக்குறள். குறளின் அமைப்பு அதன் சீரிய சிந்தனைகளை மக்கள் மனதில் பதிக்கும் வகையில் அமைந்துள்ளது எனலாம்.இவர் உலக மக்களால் தெய்வப்புலவர், பொய்யாப் புலவர், செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யா மொழிப்புலவர் என்றெல்லாம் பல பெயர்களால் அழைக்கப்படுகின்றார். இவர் எழுதிய திருக்குறள் வாழ்வியலில் எல்லா அங்கங்களையும் இனம்,மொழி,பாலின பேதங்களின்றி காலம் கடந்தும் பொருந்துவது போல் கூறியுள்ளது.

இந்நூல் அறத்துப்பால்,பொருட்பால் ,காமத்துப்பால் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது.133 அதிகாரங்களையும் அதிகாரம் ஒன்றிற்கு பத்துப்பாடல்கள் வீதம் 1330 குறட்பாக்களையும்




கொண்டு விளங்குகின்றது. திருக்குறளின் அறத்துப்பால் 38 அதிகாரங்களையும் பொருட்பால் 70 அதிகாரங்களையும் காமத்துப்பால் 25 அதிகாரங்களையும் கொண்டுள்ளது.இது அறநூலாகவும் வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியுரைக்கும் சீரிய இலக்கியமாகவும் திகழ்கிறது. வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டியாகத் திருக்குறள் விளங்குகிறது.மனித வாழ்க்கையை நுணுகி ஆராய்ந்து வாழும் வழியிதுவென வையகத்தாருக்கு வள்ளுவர் வழிகாட்டுகின்றார். அவரது குறள்கள் ஒவ்வொன்றும் மனித வாழ்க்கையை செம்மைப்படுத்துவனவாகவே அமைகின்றது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"(குறள்238) என்கிறார்.

நிகழ்ந்ததை நிகழ்ந்தபடி அல்லது கேட்டதைக் கேட்டபடி கூறுதல் அன்று வாய்மை.கேட்போருக்கு ஒரு சிறிதேனும் தீமைதராத ஒன்றே வாய்மை என்பது வள்ளுவர் தரும் கருத்தாகும்.

"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின்" (குறள் 292) என்று வாய்மைக்குப் புதுவிளக்கம் தருகின்றார் வள்ளுவர். இவ்வாறு வையத்து வாழ்வாங்கு வாழும் நெறியினை வள்ளுவரது திருக்குறள் நமக்குணர்த்துகின்றது.

அறத்துப்பாலில் அறநெறி உணர்த்திடும் வள்ளுவர் பொருட்பாலில் புதிய பல கருத்துக்களை நமக்குப் புலப்படுத்துகின்றார். ஆட்சி புரிவோருக்கு அறிவுரை கூறுகின்றார். பொருள்வளம் பெருக்கிடும் முறைகளைப் புகழ்கின்றார்.மனித வாழ்க்கையைச் செம்மைப்படுத்தும் கருத்துக்களை எடுத்துக் கூறுகின்றார்.

காமத்துப்பாலில் இல்லறத்தான் இன்பம் பெறும் வழிகளை இனிய முறையில் எடுத்துரைக்கிறார்.அறம், பொருள்,இன்பம் மூன்றையும் அழகாக எடுத்துக்கூறும் திருக்குறள் வாழ்வியல் நூலாகத் திகழ்கிறது. அதனாலேயே உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் ஒருநூலாக உலகப் பொதுமறையாக இது விளங்குகிறது.வள்ளுவம் இன்று வானுயர்ந்த சிறப்பினைக் கொண்டுள்ளது.உலக மொழிகள் பலவற்றிலும் மொழிபெயர்க்கப்பட்டு உலக மக்களால் பெரிதும் போற்றிப் படிக்கப்படும் ஒரு நூலாக விளங்குகிறது.'கடுகு சிறிதெனினும் காரம் பெரிதென்பர் ' குறுகிய இரு அடிகளில் ஆக்கப்பெற்ற குறளானது இன்று எல்லா மக்களாலும் போற்றப்படுகின்றது என்றால் அதன் பொருட் சிறப்பே அதற்குக் காரணமாகும்.

"கடுகைத்துளைத் தேழ் கடலைப் புகட்டிக்குறுகத் தறித்த குறள்"என்பது ஔவையாரின் அருள் வாக்கு.

குறளின் பெருமைக்கு வேறு சான்றும் வேண்டுமா?திருக்குறளின் சிறப்பினைப் புலவர்கள் பலரும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். வள்ளுவரின் பின்வந்த புலவர்கள் யாவரும் அவரது கருத்துக்களைத் தத்தம் பாக்களில் புகுத்தியுள்ளமையைக் காண்கிறோம்.

புலவர் போற்றும் புலவராக வள்ளுவர் விளங்குகிறார்.அவர் படைத்த குறள் உள்ளவரை அவர் நாமம் நின்று நிலைக்கும் என்பதில் ஐயமில்லை. உலகப் புகழ்வாய்ந்த நீதிநூலாக உலக மாந்தர்க்கு வழிகாட்டும் தமிழ்மறையாக விளங்கும் திருக்குறளை ஓதியின்புறுவதே நமது கடனாகும்.

உலகனைத்துக்கும் பொதுவான இந்நூல் வாழ்வில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு கூறும் நூலாகவும் விளங்குகிறது. இல்லறத்தை நல்லறமாக்கி மேற்கொண்டொழுகும் முறைகளையும் விருந்தோம்பல் பண்பையும் மக்கட்பேற்றின் சிறப்பையும் திருக்குறளில் நாம் காண முடிகின்றது. இதனாலேயே திருக்குறளை சிறந்த வாழ்வியல் நூலாகக் கருதுகின்றோம்.

ஒருநாட்டுக்கோ,ஒரு மொழிக்கோ,ஒரு இனத்துக்கோ உரிய நல்ல திருக்குறள்.அது உலக மக்கள் அனைவரதும் உள்ளங்களை ஒன்றுபடுத்தவல்லது. அத்தகைய சிறப்புக்குரிய நூலை எந்நாளும் போற்றிக்கற்பதே நம் பெரும் பணியாக அமைதல் வேண்டும். உலகப் பொதுமறை நூலின் ஊடாக பெருநாவலர் உலக இலக்கிய அரங்கில் தமிழர்களைப் பெருமிதம் கொண்டு நெஞ்சில் நிமிர நிற்கும்படி செய்த உன்னத படைப்பாளி என்று கூறினால் மிகையாகாது.

க.கனகசபை

# தமிழரின் தன்னலமற்ற போராட்டம் வெறும் பேச்சுப்பொருளாக மாறும்

(நேற்றைய தொடர்ச்சி). மேலைத்தேயம் உள்நாட்டில் வேறு எந்த திசையிலும் (மொழி ரீதியான வேறுபாட்டிற்குள்ளோ மதரீதியான வேறுபாட்டிற்குள்ளோ) தலையிடாத வகையில் ஏற்கனவே இருக்கும் பிரதமர், ஜனாதிபதி பிரிவினையை கொண்டு மேலை நாடுகளையும் சீனாவையும் சமாளிக்கும் தன்மையை கொழும்பு உருவாக்கி உள்ளது.

எதிர்வர இருக்கும் பிரச்சினைகளில் இனஅழிப்பு குற்றச்சாட்டு கொழும்புக்கு என்றும் ஒரு பின்தங்கலாக உள்ளது. எந்த இராஜதந்திர நகர்வுக்கும் எதிராக இனஅழிப்பு குற்றச்சாட்டு முன்வைக்கப்படுவதை அது விரும்பவில்லை. இதற்கு எதிராக நகர்வதெனில் அனைத்துலக நாடுகளை தனது வாதங்களை ஏற்றுக் கொள்ள வைப்பது. உள்நாட்டில் தமிழ் சமுதாயத்தை அரசுக்குத் துணை செய்ய தூண்டும் வகையில் திசை திருப்புவது. புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழர்களின் வாதங்களை செயலிழந்து நீர்த்துப்போக செய்வது ஆகிய விடயங்கள் முக்கிய கவனத்தில் கொள்ளப்பட்டு வருகிறது.

அனைத்துலக நாடுகளை கொழும்பின் விவாதங்களை ஏற்றுக்கொள்ள வைத்தல் என்ற வகையில் வெளிநாட்டு அரச, அரசசார்பற்ற அமைப்புகளின் இராஜதந்திரிகளை கௌரவிப்பது முக்கிய விடயமாகப் பார்க்கப்படுகிறது என்பது, இவ்விடயம் கொழும்பு செய்தித்தாள்களில் வெளிவரும் தகவல்களின் அடிப்படையில் கூறக்கூடியதாக உள்ளது. பச்சையாக இனஅழிப்பு விடயங்களை எடுத்து விளக்குவதை தவிர்த்து, நேரடி முதலீட்டு வாய்ப்புகளை விளக்குவது, வர்த்தக உடன்படிக்கைகளை உருவாக்கிக் கொள்வது என்பன முக்கிய பங்கு வகிக்கிறது.

மனித உரிமை விவகாரங்களில் நேரடியாக இடம்பெறக்கூடிய அமைப்புகளின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வது, ஆய்வுகள் செய்வது என காலம் தாழ்த்தும் பொறிமுறைக்குள் கொண்டு செல்வது என்பன இவற்றுள் மேலும் முக்கிய பங்கு வகிக்கிறது. உள்நாட்டு மக்களை நன்கொடைகள் மூலமும் வீட்டுக் கடன் வசதிகள் மூலமும், அல்லது நெருக்கடிகள் மூலமும் பதவிகள் மூலமும் சலுகைகளை உருவாக்குவதுடன், இலங்கை தேசத்திற்கு கடமைப்பாடு உடையவர்கள் என்ற




உணர்வை மனோயியல் ரீதியாக ஏற்படுத்துவது உள்நாட்டில் குறிப்பாக தமிழ் சமுதாயத்தை கவனத்தில் கொண்டு கொழும்பு அரசுக்கு இந்த நகர்வுகள் முக்கியமானதாகும்.

ஒரு அரசை ஏற்றுக் கொள்வது என்பது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஆளும் உரிமை பெற்ற அரசை மக்கள் மனதளவில் உடன்பாடு கொண்டவர்களாக மாற்றுதல் மிக முக்கியமானதாகும். குறிப்பிட்ட ஒரு அரசின் சட்ட ஒழுங்கை பின்பற்றுவர்களும் அதன் பாதுகாப்பில் அன்றாட வாழ்க்கையை நடத்தும் உரிமை பெற்றவர்களும், அரசிடம் உதவிகள் பெற்றுக் கொள்பவர்களும் என எல்லோரும் மனதளவில் ஏற்றுக்கொள்ளும் பிரஜைகளுக்குள் அடங்குவர். இந்த வகையில் தமிழ் மக்கள் இலங்கை அரசை ஏற்று வாழ்கின்றனர் என உலகிற்கு காட்டிக் கொள்வதில் இன அழிப்பு விவகாரத்தை சாதாரண குற்றச்செயலாக மாற்றுவதற்கு இலகுவாக அமையும். வல்லரசுகளை சமாளிப்பதற்கு சாதாரண பிரஜைகள் அன்றாட வாழ்க்கையை நாடிநிற்க வைப்பது மிக முக்கியமான நகர்வாக கொழும்பு அரசு கொண்டுள்ளது.

(தொடரும்..)

# தமிழ் சினிமா வரலாறு

## "நடிப்பு என் உயிர்" – சிவாஜிகணேசன் 229

அவர்களுக்கும், பெண் பிள்ளை, பேரன் ,பேத்திகள் எல்லோரும் இருக்கிறார்கள்.

எனக்கு ஏராளமான பேரன், பேத்திகள் இருக்கிறார்கள். உலகம் முழுவதும் எனக்கு நண்பர்களும், சுற்றினத்தினரும் இருக்கின்றனர். நான் ஒரு பெரிய குடும்பஸ்தன். முன்பெல்லாம் பெரும்பாலும் கலைஞர்களுடன் அல்லது நாட்டு மக்களுடனும் இருந்தேன். இப்போது ஓய்வு காலத்தில் என்னுடைய வீட்டு மக்களுடனும் சந்தோஷமாக இருக்கிறேன்.

நேரம் கிடைக்கும் போது நல்ல நண்பர்களுடன் பேசி, நல்ல விடயங்களைப் பகிர்ந்து கொள்கிறேன். நிறைய புத்தகங்கள் படிக்கிறேன். சில சமயங்களில் டி.வி. பார்க்கிறேன். இதற்கிடையில் மரியாதை நிமித்தமாக சில பேர் வந்து படங்களில் நடிக்கக் கூப்பிடுகிறார்கள். ஓரிரு படங்களில் நடித்துக் கொண்டும் இருக்கிறேன்.

### நடிகர் சங்கம்

கேள்வி:-நடிகர்களுக்காக தனிப்பட்ட முறையில் நீங்கள் ஏதாவது செய்து இருக்கிறீர்களா?அதைப்பற்றி கூறுங்கள்.

சிவாஜி:- தனிப்பட்ட முறையில் நான் எதுவும் செய்து விட்டேன் என்று கூற முடியாது. என்னைப் பொறுத்தவரை நடிகர்களுக்காக நடிகர் சங்கம் ஒன்றை உருவாக்க என்னாலானதைச் செய்தேன். நான் அதனுள் நுழைந்ததே ஒருகதை

எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபோது யார் நடிகர் சங்கத்திற்கு தலைவராக இருக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தார்கள். சிவாஜி கணேசனை கண்டுபிடியுங்கள். அவரை தலைமை வகிக்க சொல்லுங்கள். அவர் தான் எல்லா காரியங்களையும் நன்றாக செய்வார் முதலில் முடியாது என்பார். ஆனால் விட்டு விடாதீர்கள் என்று எம்.ஜி.ஆர். கூறியிருக்கிறார்.

அதன்படி பல பேர் என்னிடம் வந்து நீங்கள் தான் தலைவராக இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அவர்கள் மிகவும் கட்டாயப்படுத்தியதாலும் அண்ணன் எம்.ஜி.ஆர் விரும்பியதாலும் நான் ஒப்புக் கொண்டேன்.

நடிகர் சங்கத்திற்கு தலைவரானால் சிறப்பாக ஏதாவது நடிகர்களுக்குச் செய்ய வேண்டாமா? அதனால் நடிகர் சங்கத்திற்காக ஒரு கட்டடமும் நாடக அரங்கமும் கட்ட வேண்டும் என நினைத்தேன்.

அது மட்டுமல்லாமல் வசதியில்லாமல் இருக்கும் நடிகர் நடிகைகளுக்கு தங்குவதற்கு வீடு கட்ட வேண்டும். அவர்கள் சாப்பிடுவதற்கு கன்டீன் ஒன்று அமைக்கவேண்டும்



என்றெல்லாம் விரும்பினேன்.

இதற்காக வங்கியில் கொஞ்சம் கடன் வாங்க வேண்டியிருந்தது. நடிகர் சங்கத்திலிருந்து வருகின்ற வருமானத்தை வைத்துக் கடனை அடைக்கவேண்டும் என்ற வழிமுறையையும் ஏற்பாடு செய்தேன்.

எம்.ஏ.எம். ராமசாமி, நாகேஸ்வரராவ், ராஜ்குமார் என்று நிறையப்பேர் என்னுடன் இருந்தார்கள். அந்த தைரியத்தில் வங்கியில் கடன் வாங்கி தென்னிந்திய நடிகர் சங்க கட்டடம் கட்டினேன். கட்டி முடிந்தவுடன் என்னை எப்படி வெளியேற்றுவது என்று சிலர் திட்டம் போட்டார்கள். எப்படியோ அவர்கள் என்னைப் பயன்படுத்திக் கொண்டு பிறகு வெளியே தள்ளிவிட்டார்கள். நானும் ஒதுங்கிக்கொண்டேன்.

அன்றிலிருந்து இன்று வரை நடிகர் சங்கம் பக்கமே செல்லவில்லை. எல்லாத் துறைகளிலும் என்னை விதையிடும் போது பயன்படுத்தி விட்டு அறுவடைக் காலத்தில் ஒதுக்கி விடுவார்கள். சாப்பாட்டில் இருக்கின்ற கருவேப்பிலை போல நான்.

தம்பி விஜயகாந்த் நடிகர் சங்கத்திற்கு தலைமையேற்று அச்சங்கத்தை வளர்க்கப் பாடுபட்டு வருகிறார். பல நடிகர் நடிகைகள் முன்வந்து இப்பணியில் ஒத்துழைக்கிறார்கள். நடிகர் சங்கம் மேலும் வளர்ந்து சிறப்பாக செயற்பட இறைவனை வேண்டுகிறேன். இவ்வாறு சிவாஜிகணேசன் கூறினார்.

சிவாஜிகணேசனும் ரஜினிகாந்தும் இணைந்து நடித்த படையப்பா 86 தியட்டர்களில் நூறு நாட்களைக் கடந்து ஓடியது. 6 தியட்டர்களில் வெள்ளிவிழா கொண்டாடியது.

சிவாஜிகணேசனும் ரஜினிகாந்தும் இணைந்து நடித்த முதல் படம் ஜஸ்டிஸ் கோபிநாத். இது 1978இல் வெளிவந்தது. இதுசராசரி படம்.

(தொடரும்..)

தாடி பற்றி எரியும் போது பீடிக்கு நெருப்புக் கேட்டானாம்

–தமிழ் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# தன் பேரனுக்கு தாத்தா சொன்ன கதை கேளீர்!

சின்னப் பிள்ளைகளுக்கு கதை கேட்பதென்றால் அலாதிப்பிரியம். கதை கேட்டு வளர்ந்த பிள்ளைகளிடம் அபரிதமான ஆற்றல்கள் உருவாகுவதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன.

ஒரு பேரன் தன் தாத்தாவிடம் கதை கேட்பது வழக்கம். சதா கதை சொல்லுமாறு தாத்தாவை தொந்தரவு செய்வான்.

பத்திரிகை வாசித்துக் கொண்டிருந்த தாத்தாவை கதை சொல்லுமாறு பேரன் அடம்பிடிக்க, பத்திரிகைச் செய்திகளால் ஆத்திரமுற்றிருந்த தாத்தா பேரனுக்கு ஒரு வித்தியாசமான கதையைச் சொன்னார்.

**தாத்தா:** அது ஒரு பெரிய கட்டடத் தொகுதி. அங்கே சுமார் முப்பது நாற்பது பேர் குந்தியிருக்கின்றனர். ஒருவர் மேடையில் அமர்ந்திருக்கிறார்.

இந்தக் கூட்டத்தில் சிலபேர் அடிக்கடி எழுந்து ஏதோ சொல்லிவிட்டு அமர்கின்றார்கள். இடையிடையே குழப்பங்கள் நடந்தேறும்.

வசிட்டமா முனிவர் போல ஒருவர் அமர்ந்துள்ளார். நீதியை எடுத்துரைப்பதற்காக அவர் படாப்பாடு படுகிறார். எனினும் அவரைப் புரிந்துகொள்ளவோ அவரின் நேர்மைத்தனத்தை மதிப்பதற்கோ அங்கு ஒரு சிலரைத் தவிர வேறு எவருமில்லை.

மேடையில் இருப்பவரும் அடிக்கடி வசிட்டமா முனிவரைப் பார்த்து ஏதோ கடுமையாகச் சொல்கிறார். யாராக இருப்பார்? சிலவேளை விசுவாமித்திரராக இருப்பாரோ? எதுவும் புரியவில்லை.

ஆனால் அந்தக் கட்டடத்தில் ஒருநாளும் அவர்கள் ஒற்றுமையாக இருந்து ஒற்றுமையாகக் கதைத்துப் பேசி தீர்வு கண்டதே கிடையாது.

இன்னொருவர் இடையிடையே எழுந்து முக்கியமான விடயங்களைக் கூறுகிறார். அவரின் உரையில் புள்ளிவிபரங்கள், ஆதாரங்கள் இருப்பதைக் காண முடிகிறது.

இவரும் தாடியுடன் தான் காட்சியளிப்பதால் இவர் துர்வாச முனிவராக இருப்பாரோ என்ற ஐயம் எழுகிறது.

அதோ! அங்கு தொடங்கிவிட்டது குழப்பம்.

**சிலகுரல்கள் :** குற்றச்சாட்டு மீதான விசாரணை – வெளியார் விசாரிப்பதை ஏற்க முடியாது.

**ஒருகுரல் :** நீங்கள் தானே விசாரணை வேண்டும் என்கிறீர்கள்.

**சிலகுரல்கள் :** அது அப்போது. இப்போது நீங்கள் விசாரிக்க உடன்பட்டதால் விசாரணை வேண்டாம்.

**ஒருகுரல் :** அப்படியானால் முன்னர் நீங்கள் கேட்டது.

**சிலகுரல்கள் :** எல்லாம் குழப்புவதற்குத்தான்.

**ஒருகுரல் :** இப்படியே குழப்பினால்...

**மேடைக்குரல் :** என்னை அரசியலிலிருந்து ஒதுக்கப் பார்க்கிறீர்கள்....

**ஒருகுரல் :** நான் அப்படிச் செய்யவில்லை.

**மேடைக்குரல் :** என்னை யாராலும் எதுவும் செய்ய முடியாது.

**சம்மனசுகள் :** என்ன அங்கே நடக்கிறது? அந்தக் கட்டடத்தில் கூட்டம் ஆரம்பமான நாளிலிருந்து ஒரே சண்டை; ஒரே குழப்பம் நடக்கிறது.

யார் இவர்கள்? இவர்களை இங்கே அனுப்பி வைத்தது யார்? இந்தக் கட்டடத்தின் வாஸ்து பிழை போல...

**தேவர்கள் :** ஓ! பொதுமக்களே! தமிழ் மக்களே! அங்கே பாருங்கள் முதியோர் இல்லம். எவ்வளவு அமைதியாக அவர்கள் இருக்கின்றனர்.

இவர்களும் அந்த முதியோர் இல்லத்துக்குப் பக்கத்தில்தானே இருக்கின்றனர். இவர்களால் ஏன்? அமைதியை கடைப்பிடிக்க முடியவில்லை.

**பொதுக்குரல் :** அதுதானே நாங்கள் இவர்களை நம்பினோம். அவர்கள் எங்கிருந்தோ வரும் கட்டளைகளை நிறைவேற்றுவதிலேயே காலம் கடத்துகின்றனர். நாங்கள் படும் துயர் தொடர்பில் அவர்களுக்கு எந்தக் கவலையும் கிடையாது. அவர்களின் நோக்கம் எல்லாம் அந்தக் கூட்டத்தை குழப்புவதுதான்.

அதோ வசிட்டமா முனிவர் போல் இருப்பவரில் ஞானம் தெரிகிறது, உண்மை தெரிகிறது, நேர்மை தெரிகிறது அவரை நம்புவோம்... நம்புவோம்...

தாத்தா இப்படிக் கதை சொன்னதும் பேரன் கேட்டான். தாத்தா இந்தக் கதைக்கு என்ன பெயர்? **வ.மா.ச.அ** என்றார் தாத்தா. பெயரைக் கேட்ட பேரன் அதிர்ந்து போனான்.

# வயற்காணிகளை இலக்கமிடும் திட்டம்

வரணிவடக்கு விவசாய சம்மேளனத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வயற்காணிகள் இலக்கமிடும் வேலைத்திட்டம் இடம்பெறவுள்ளதால் கீழ்க் குறிப்பிடப்படும் திகதிகளில் காலை 9 மணிக்கு வயல் காணிகளுக்கு வருகை தந்து இலக்கமிடுவதற்கு ஒத்துழைக்குமாறு வரணி வடக்கு விவசாய சம்மேளனச் செயலாளர் க.தியாகராசா அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை தம்பாலை வயல்வெளி வரணி வடக்கு, 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வண்ணான்வயல் வரணி வடக்கு, தல்வளை வயல்– பருத்தித்துறை வீதி கிழக்குப் பக்கமுள்ள வயல்கள், 18 ஆம் திகதி வியாழக்கிழமை தம்பான் வயல்வெளி –சிவிழங்கிராய் குள எல்லையில் இருந்து கிழக்குப் பக்கம் உள்ள வயல்கள் பருத்தித்துறை வீதி வரை, 19 ஆம் திகதி வெள்ளி தம்பான் வயல்வெளி– சிவிழங்கிராய் குள எல்லையில் இருந்து கரவெட்டி எல்லை வரையான வயல் வெளிகள் அனைத்தும் இலக்கமிடப்படவுள்ளன.

மேற்குறித்த திகதிகளில் அப்பகுதியில் உள்ள வயல் உரிமையாளர்கள் வருகை தந்து வயல் துண்டங்களை இலக்கமிட ஒத்துழைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-60)

## சிகிச்சை பலனின்றி முதியவர் மரணம்

யாழ் நாவலர் வீதியில் பயணித்த வேளை மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்த முதியவர் 5 நாட்களின்பினனர் சிகிச்சை பலனின்றி யாழ்போதனா வைத்தியசாலையில் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார்.

யாழ. பலாலி வீதியை சேர்ந்த தங்கவேலு குழந்தை வேலு (வயது 71) என்ற முதியவரே மேற்படி உயிரிழந்தவராவார். (செ-9)

நல்லூர்க்கந்தனுக்கு



**எனக் கின்பமே வா**

**இராகம்: தோடி** **தாளம்:திஸ்ரம்**

**பல்லவி**

எனக்கின்பமே– வா

**அனுபல்லவி**

ஏரகம் பழனிப்பதி இலங்குங் கந்தசுவாமி நாதா
(எனக்கின்பமே)

**சரணம்**

இரவும் பகலும் ஏத்தித் தொழும்
ஏழை யடியார்க் கிரங்கு வாய்நீ
எழிலார் நல்லூர் வாழும் வாசனே
ஏத்தும் யோக சுவாமி நேசனே
(எனக்கின்பமே)

**சிவத்திரு யோகர்சுவாமிகள்**

# முத்திரையிடும் பணி இரு நாட்களுக்கு

பருத்தித்துறை பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள், பலநோக்குகூட்டுறவுச் சங்கங்கள், சந்தை வியாபாரிகள் தமது அளத்தல் கருவிகளுக்கு முத்திரையிடும் பணி எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் பருத்தித்துறைப் பிரதேச சபையின் புலோலி உப அலுவலகத்தில் காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெறும் என்று பருத்தித்துறை பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார். (இ-60)

# சுகாதார சீர்கேடு; உணவகத்திற்கு சீல் வைப்பு

(மல்லாவி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் கிராமத்தில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றை பூநகரிப் பொதுச் சுகாதாரப் பரிசோதனைகளின் திடீர் ஆய்வு மூலம் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் மேற்படி உணவகத்தின் உரிமையாளர் முற்படுத்தப்பட்டார்.

இவ்வழக்கை விசாரணை செய்த நீதிபதி அவ் உணவகத்தை சீல்வைத்து மூடுமாறு உத்தரவிட்டார். (2-15)

# தடையுத்தரவை மீறினால் கைது செய்யப்படுவார்கள்

## நீதிபதி இளஞ்செழியன் எச்சரிக்கை

தனிப்பட்ட ஒரு நபருக்காக பொதுமக்களை பாதிப்படைய செய்யும் எந்த போராட்டத்திற்கும் நீதிமன்று அனுமதியளிக்காது என தெரிவித்துள்ள யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், தாதியர்களால் யாழ். போதனா வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டிருந்த போராட்டத்திற்கு இடைக்காலத்தடையுத்தரவினையும் பிறப்பித்துள்ளார். இந்த தடையுத்தரவினை மீறுபவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகத்தினரால் சத்திரசிகிச்சை கூடததில் பணியாற்றிய தாதிய பெண் வேறு ஒரு பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டமை குறித்து எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முப்பதாம் திகதிக்கு முன்னதாக அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை கூடத்தில் வைத்தியர் ஒருவருக்கும் தாதியர் ஒருவருக்கும் முரண்பாடு ஏற்பட்டிருந்தது. இந்த முரண்பாடு குறித்து வைத்தியசாலை தரப்பினரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு குறித்த பெண் தாதி சத்திர சிகிச்சை பிரிவிலிருந்து வேறு பிரிவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

இதனை அடுத்து குறித்த பெண் தாதியை சத்திர சிகிச்சை கூடத்திலேயே பணியாற்ற அனுமதிக்குமாறு கோரி தொடர் போராட்டத்தினை முன்னெடுத்திருந்தனர். இதன் எதிரொலியாக வைத்தியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டங்களினால் நோயாளர்கள் பெரும் அவதியை எதிர்நோக்கி இருந்தனர்.

இதன் காரணமாக தாதியர்களின் தொடர் போராட்டத்திற்கு யாழ்.மேல் நீதிமன்றம் இடைக்காலத்தடை உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த தடை உத்தரவு மீதான விசாரணை நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்றில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது கட்டளை இட்ட நீதிபதி, தனிப்பட்ட ஒருவர் மீது யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த ஒழுக்காற்று நடவடிக்கையில் பக்கச்சார்பு இருந்திருந்தால் அதனை வைத்தியசாலை நிர்வாகத்திடம் முறையிட்டிருக்க முடியும் அல்லது நீதிமன்றத்தை நாடியிருக்க முடியும்.

அதனை விடுத்து தனியொருவருடைய நலனுக்காக பொதுமக்களை, நோயாளிகளை பாதிப்படைய செய்யும் போராட்டங்களில் ஈடுபடுவது சட்டவிரோதமாகும். குறித்த சம்பவத்திற்காக தேசிய அளவில் எந்தவித போராட்டங்களும் இடம்பெறவில்லை. ஆனால் வடக்கு மக்களை பாதிக்கும் வகையில் யாழில் மட்டும் இடம்பெற்றது. தாதிய தாய்ச் சங்கம் தமது அறிவுறுத்தலின் பேரிலேயே போராட்டம் இடம்பெற்றதாக அறிக்கை அனுப்பியுள்ளது. அவர்கள் கொழும்பில் இருந்து கொண்டு எங்களது மக்களை அவதிக்குள்ளாக்கும் செயற்பாடுகளுக்கு மன்று ஒருபோதும் அனுமதிக்காது.

ஆகவே குறித்த உள்ளக இடமாற்றம் தொடர்பில் எந்தவிதமான பணிப்புறக் கணிப்பும் இந்த வழக்கு முடிவடையும் வரை இடம்பெறக்கூடாது. அதுவரை குறித்த போராட்டங்களுக்கு இடைக்காலத்தடை மன்று விதிக்கின்றது. மேலும் செப்டெம்பர் முப்பதாம் திகதிக்கு முன்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் குறித்த தாதி இடமாற்றம் செய்யப்பட்டமைக்கான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

அடுத்த வழக்கு தவணையின் போது சம்பந்தப்பட்ட தாதிய பெண் மன்றில் முன்னிலையாக வேண்டும். இந்த போராட்டத்திற்கு பின்னர் ஏதும் சதி உள்ளதா என்பது தொடர்பிலும் மன்றும் ஆராய்வதற்கு தீர்மானித்துள்ளது என நீதிபதி கடுமையாக கூறினார். இதன் போது தாதியர் தரப்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி கடும் வாதங்களை முன்வைத்தார்.

ஒரு போராட்டம் இடம்பெறும் போது அதற்கு தேசிய ரீதியான காரணங்கள் இருக்க வேண்டும். தாதியத்தின் தாய் என கருதப்படும் புளோரன்ஸ் நைட்டிங் கேல் அம்மையார் செய்த தொண்டுகள் அர்ப்பணிப்புக்கள் வழி வந்தவர்கள் நோயாளர்களை பாதிப்படைய செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவரது சேவைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் எனவும் நீதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். (இ-4)

# இந்துக் கல்லூரியை வீழ்த்தியது கிளி.மத்திய மகா வித்தியாலயம்



யாழ்.இந்துக்கல்லூரிக்கு எதிரான துடுப்பாட்டப்போட்டியில் வெற்றி பெற்றது கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்.

அகில இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச்சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் 15 வயதுப்பிரிவினர்களுக்கிடையிலான பிரிவு III இற்கான துடுப்பாட்டப் போட்டியின் இரண்டாம் சுற்றில் இரு அணிகளும் மோதியிருந்தன.

கடந்த 07/08/2016 ஞாயிறு அன்று யாழ். இந்துக்கல்லூரிமைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற கிளி/ மத்திய மகாவித்தியாலய அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடியயாழ். இந்துக்கல்லூரி அணி தனது முதல்முறை (இன்னிங்ஸ்) ஆட்டத்திற்காக 47 பந்துப்பரிமாற்றங்களை எதிர்கொண்டு அனைத்து இலக்குகளையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் ஆன்சிகன் சிறப்பாக 82 ஓட்டங்களையும் நிவாசன் 24 ஓட்டங்களையும் நாகதீசன் 23 ஓட்டங்களையும் சாருகன் 10 ஓட்டங்களையும் அதிக பட்சமாக பெற்றனர்.

பந்து வீச்சில் கிளி/மத்திய மகா வித்தியாலயம் சார்பாக பகலவன் 4, பிரதிக்ஸன் 3, கிருசாந்-1 என இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு தனது முதலாம் முறை ஆட்டத்திற்காக துடுப்பெடுத்தாடிய கிளி/மத்திய மகா வித்தியாலய அணி 57 பந்துப் பரிமாற்றங்களை எதிர்கொண்டு ஆட்ட நேர முடிவின் போது 7 இலக்குகளை இழந்து 257 ஓட்டங்களை குவித்தது.

முதலாம்முறை (முதல் இன்னிங்ஸ்) ஆட்டத்தில் பெற்ற முன்னிலையின் அடிப்படையில் புள்ளிகள் அதிகம் பெற்று வெற்றியைத்தனதாக்கியது.

துடுப்பாட்டத்தில் அதிரடி காட்டிய விதுர்சன் ஆட்டமிழக்காது 97 ஓட்டங்களைப் பெற்று சதத்தை நெருங்கியிருந்தார்.

அணித்தலைவர் யுகேந்திரன் சிறப்பாக 71 ஓட்டங்களையும் அபிராஜ் 20, பகலவன் 16, டனோஜன் 10 என ஓட்டங்களை அதிக பட்சமாக பெற்றனர்.

பந்துவீச்சில் சாருஜன் 2, துசிதன் 2, ஆன்சிகன் 01, ஜெனிதன் 01 என இலக்குகளை வீழ்த்தினர். (கு)

# எவரெஸ்ட் உதைபந்தாட்டம்; கில்லறி அரையிறுதிக்கு தகுதி



புத்தூர் எவரெஸ்ட் வி.க. நடத்தும் வடமாகாண ரீதியிலான (பொன் விழாக்கிண்ணம்2016) உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் சுப்பர் 08 போட்டிகள் மின்னொளியில் நடைபெற்றன. இதில் கில்லறி றோயல் போட்டி சமநிலையில் முடிவடைந்ததால் கில்லறி B குறூப்பில் 02 ஆவது அணியாக அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. (கு)

# பாரதி உதைபந்தாட்ட தொடர் ஞானமுருகன் A,B அணிகள் வெற்றி

பொலிகண்டி பாரதி உதைபந்தாட்ட தொடரில் (07/08/2016) நடைபெற்ற முதற்போட்டியில் ஞானமுருகன் B அணி அல்வாய் நண்பர்கள் அணியை 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஞானமுருகன் B அணி சார்பாக சுபோசன் 2, பிரசாந், கஜன் தலா ஒரு கோலினையும் போட்டனர்.

இரண்டாவது போட்டியில் ஞானமுருகன் A அணி கலட்டி ஐக்கியம் அணியை 6:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. ஞானமுருகன் A அணி சார்பாக சுபாஷினி அதிரடி ஹற்றிக் கோலுடன் சுமித், சுமன் மற்றும் தீபன் தலா ஒவ்வொரு கோலினையும் போட்டனர். (கு)

# புத்தூர் எவரெஸ்ட் வி.கழக உதைபந்தாட்ட சுற்றுத்தொடர்


## ஞானமுருகன் வெற்றி



புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியில் (பொன்விழா கிண்ணம் 2016) உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி மின்னொளியில் நடைபெற்று வருகின்றது.

06.08.2016 (சனி) நடைபெற்ற போட்டியில் சென்.நீக்கிலஸ் வி.கழகத்தை 1:2 என்ற ரீதியில் வீழ்த்தி அரையிறுதி வாய்ப்பினைத் தக்க வைத்துள்ளது மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம். (கு)


# இறுதிப்போட்டிக்கு ஞானம்ஸ் தகுதி



இமையாணன் மத்தி வி.கழகம் நடத்தும் அணிக்கு 8 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் அரையிறுதியில் வீனஸ் அணியை 40 ஓட்டங்களால் வெற்றி கொண்டு இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது ஞானம்ஸ். (கு)

# விழிப்புலன் பாதிக்கப்பட்டோருக்கான சத்தப்பந்து கிரிக்கெட் போட்டி

கண் பார்வை அற்றோர் கிரிக்கெட் விளையாடுகின்றார்கள் என்றால் அது நம்புவது கடினம். ஆனால் அவ்வாறானதொரு புதிய முயற்சியை இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு எங்கிலும் வாழும் தமிழ் மாற்றுத் திறனாளிகள் முன்னெடுக்கின்றார்கள். ஓசை கொண்ட பந்து அவர்களுக்கு உதவுகின்றது.



அவ்வாறான விழிப்புலன் பாதிக்கப்பட்டோர் விளையாடும் சத்தப் பந்து கிரிக்கெட் போட்டி கடந்த திங்கட்கிழமை 08.08.2016. பரந்தன் இந்து மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் இணைப்பில் உரிமை நிறுவனம் நடத்தும் தமிழ் மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி 2016 ஆம் ஆண்டின் , முதல் போட்டியாக விழிப்புலன் பாதிக்கப்பட்டோருக்கான சத்தப் பந்து கிரிக்கெட் பரந்தன் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டு நடத்தப்பட்ட இச் சத்தப் பந்து கிரிக்கெட் போட்டியில் வடக்கு வாழ் விழிப்புலன் பாதிக்கப்பட் டோர் அணிக்கும் கிழக்கு வாழ் விழிப்புலன் பாதிக்கப்பட்டோர் அணிக்கும் இடையில் நடைபெற்றது .

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற வடக்கு வாழ் விழிப்புலன் பாதிக்கப்பட்டோர் அணி துடுப்பாட்டத்தினை தீர்மானித்து 30 பந்துப் பரிமாற்றங்களினை எதிர்கொண்டு 7 விக்கெட் இழப்பிற்கு 267 ஓட்டங்களைப் பெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கிழக்கு வாழ் விழிப்புலன் பாதிக்கப்பட்டோர் அணியினர் 27 பந்துப்பரிமாற்றத்தின் இறுதியில் 9 விக்கெட் இழப்பிற்கு 268 ஓட்டங்களினைப் பெற்று வெற்றியினைத் தமதாக்கிக் கொண்டனர்.

அடுத்த நிகழ்வாக 20.08.2016 இல் சக்கர நாற்காலி கூடைப் பந்தாட்டப்போட்டிகள் வவுனியாவில் நடைபெறவுள்ளது எனவும் இறுதிப் போட்டிகள் மட்டக்களப்பில் 28.08.2016 இலும் வவுனியாவில் 04.09.2016 இலும் நடைபெறவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (கு-312)

# இன்றைய போட்டிகள்

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான உதைபந்தாட்ட போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மணற்காடு சென். அன் ரனிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

➤➤➤

கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் 5 ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியாக வொலிகிங்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் கரப்பந்தாட்ட போட்டியில் இன்று இரவு 7 மணிக்கு மின்னொளியில் நடைபெறும் போட்டியில் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து அச்சுவேலி யூத் விளையாட்டுக்கழமும் இரவு 7.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் இளவாலை மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழகமும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சண்டிலிப்பாய் வசந்த சிறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (கு)

## சி.எஸ்.என் நிறுவன...

ராஜபக்ஷவுக்கு சொந்தமானதாக கூறப்படும் சி.எஸ்.என். தொலைக் காட்சி நிறுவனத்துக்கு சொந்தமான 163 மில்லியன் ரூபாயுக்கும் மேற்பட்ட நிதியை இலங்கை மத்திய வங்கியில் தடுத்து வைப்பதற்கு நீதிமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நேற்றைய ஊடக சந்திப்பின் போது அவர் இதனை தெரிவித்தார்.

அதேபோன்று முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு சொந்தமான இரண்டு காணிகளை கையகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி பசில் ராஜபக்ஷவுக்கு சொந்தமான கடுவலை மற்றும் மாத்தறை பகுதிகளில் இருக்கின்ற இரண்டு காணிகளை கையகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கை விமானப்படைக்கு புதிதாக யுத்த விமானங்களை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவையின் சம பேச்சாளரும் அமைச்சருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு கருதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானமொன்றுக்கு அமைய அமைசசரவை இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-11)

## குற்றவாளிகள்...

யூலை மாதம் 29ஆம் திகதி அன்று கடத்தி சென்று பற்றை ஒன்றுக்குள் வைத்து நான்கு நபர்கள் பாலியல் வன்புணர்வு புரிந்துள்ளனர். இந்த பாலியல் வன்புணர்வு குற்றச்சாட்டில் பாதிக்கப்பட்ட யுவதியின் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு சந்தேகத்தின் பேரில் நால்வர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் தொடர்பான வழக்கு விசாரணைகள் சாவகச்சேரி நீதிமன்றில் நடைபெற்று சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய யாழ்.மேல்நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டது. எதிரிகள் நால்வர் மீதும் கூட்டு பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு சட்டமா அதிபரினால் யாழ்.மேல்நீதிமன்றில் குற்றப்பத்திரமும் தாக்கல் செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த வழக்கு தொடர்பான விசாரணை நடைபெற்று வந்த நிலையில் பாதிக்கப்பட்ட யுவதி காது கேளாதவராகவும், வாய் பேசாதவராகவும் இருக்கும் காரணத்தினால் அவரது வாக்குமூலம் சைகை மொழியில் பதிவு செய்யப்பட்டு, மொழி பெயர்ப்பு செய்யப்பட்டு மன்றுக்கு பாரப்படுத்தப்பட்டது.

அதில் தனது அப்பம்மா வீட்டிலிருந்து வெளியே செல்லும்போது எதிரிகளான குறித்த நால்வரும் தன்னை வற்புறுத்தி அழைத்து சென்று கைகளை கட்டி, வாயில் துணியை அடைந்து வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகவும், அதன் பின்னர் மீண்டும் தன்னை அப்பம்மா வீட்டில் கொண்டு சென்று தன்னை தூக்கி போட்டதாகவும் பாதிக்கப்பட்ட யுவதி கூறியுள்ளார்.

மேலும் சட்டமருத்துவ அதிகாரி மருத்துவ கலாநிதி ரட்ணசிங்கமும் பிரஸ்தாப பெண்ணின் உடலின் மீது வன்புணர்வு செய்யப்பட்டு இருக்கும் மாற்றங்கள் இருப்பதாகவும் சாட்சியமளித்திருந்தார்.

அத்தோடு அப்பெண் ஒருநாள் இரவு முழுவதும் காணாமல் போயுள்ளமை உறுதியாகியுள்ளது என பொலிஸாரும் சாட்சியமளித்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வழக்கு தொடர்பான அனைத்து விசாரணைகளும் முடிவுற்ற நிலையில் நேற்றைய தினம் தீர்ப்புக்காக யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது தனது கட்ட ளைத் தீர்ப்பை வழங்கிய நீதிபதி, இத்தகைய குற்றங்கள் சாட்சிகளை வைத்துக்கொண்டு செய்யப்படுவதில்லை எனவும், பாதிக்கப்பட்ட பெண்ணின் சாட்சியம் நீதிமன்றை திருப்திப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது எனவும் ஆகையால் அதனை அடிப்படையாக கொண்டு எதிரிகளுக்கு தண்டனை வழங்க முடியும் என கூறி இந்திய உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினையும் மேற்கோள் காட்டினார்.

பல தடைகளை தாண்டியே இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்கள் நீதிமன்றத்துக்கு வருவதாக தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டிய நீதிபதி, குறித்த பெண்ணுக்கு காது கேளாது, வாய் பேசமுடியாது என்ற அனுதாப அலை தீர்ப்பில் காட்டப்படவில்லை என்பதையும் சுட்டிக் காட்டினார்.

இறுதியாக தண்டனை தீர்ப்பை வாசித்த நீதிபதி, திருமணம் செய்யாத குறித்த பெண்ணின் எதிர்கால வாழ்க்கையை குற்றவாளிகள் சீரழித்துள்ளனர்.

பிரஸ்தாப பெண்ணின் குடும்ப கௌரவத்தையும் நாசம் செய்துள்ளனர். உடல் ரீதியாக பாதிக்கப்பட்ட பெண்ணை கூட்டு வன்புணர்வு புரிந்துள்ளனர். ஆகவே நான்கு பேருக்கும் தலா பதினைந்து ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதிப்பதோடு, 25 ஆயிரம் அபராதமும் செலுத்த தவறின் 6 மாதகால சிறைத்தண்டனையும், நஷ்டஈடாக 5 இலட்சம் ரூபாயும் செலுத்தத் தவறின் 2 வருடகால சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார்.

மேலும் குற்றவாளிகளின் உறவினர்களால் பாதிக்கப்பட்ட தரப்பு மீது எந்தவிதமான தலையீடும் இருக்கக்கூடாது எனவும், அச்சுறுத்தும் செயற்பாடுகளில் ஈடுபட்டால் பிணையில் வெளி வராத வகையில் அவர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் எனவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (செ-4)

## பிணை வழங்...

செய்யப்பட்ட ஒரு வழக்கில் தான் சுற்றவாளி என தெரிவித்ததை யடுத்து நிபந்தனையுடன் கூடிய பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

ஐந்து லட்சம் ரூபா ரொக்கப் பிணையுடன், தலா ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான நான்கு அரச ஊழியர்களின் சரீரப் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

எனினும், சரீரப் பிணையாளிகளை நீதிமன்றம் நேரில் பார்வையிட வேண்டும் என தெரிவித்த வவுனியா மேல்நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன், அந்தப் பிணையாளர்களை இன்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டதுடன், அதுவரையில் இந்த வழக்கின் எதிரியாகிய தயா மாஸ்டரை வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் பிரதேசத்தில் இருந்த பொதுமக்களை இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வர விடாமல், விடுதலைப்புலிகளின் செயற்பாட்டாளர்களாகிய இளம்பரிதி மற்றும் திலக் ஆகியோருடன் இணைந்து தடுத்ததாக தயா மாஸ்டர் மீது குற்றம் சுமத்தி வவுனியா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்கு தான் சுற்றவாளி என தயா மாஸ்டர் நீதிமன்றத்தில் தெரிவித்தார். இதனையடுத்து இந்த வழக்கு விளக்கத்துக்கு நியமிக்கப்படுவதாகத் தெரிவித்த நீதிபதி, இவர் முன்னதாக கொழும்பு நீதவான் நீதிமன்றத்தினால் பிணையில் விடப்பட்டிருப்பதைக் கவனத்தில் கொண்டு இவரைப் பிணையில் செல்ல அனுமதிப்பதாகத் தெரிவித்தார்.

இந்த வழக்கு விளக்கத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் வரையில் வட மாகாணத்தை விட்டு அவர் வெளியில் செல்லக்கூடாது.

ஒவ்வொரு நாளும் யாழ் தலைமையக பொலிஸ் நிலையத்தில் காலை 9 மணிக்கும் மதியம்12 மணிக்கும் இடையில் கையெழுத்திட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்து 5 லட்சம் ரூபாய் சரீரப் பிணையிலும் தலா ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான 4 அரச ஊழியர்களின் சரீரப் பிணையிலும் செல்ல நீதிபதி அனுமதி வழங்கினார்.

ஆயினும் சரீரப் பிணையாளர்களை நீதிமன்றம் பார்வையிட வேண்டும் என்பதற்காக அவரை அதுவரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் முடிவடைந்ததையடுத்து, விடுதலைப் புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் மொழிபெயர்ப்பாளராக இருந்த ஜோர்ஜ் மாஸ்டரையும் விடுதலைப் புலிகளின் ஊடக இணைப்பாளராகிய தயா மாஸ்டரையும் இராணுவத்தினர் கைது செய்திருந்தனர்.

பின்னர் இருவரையும் பிணையில் செல்ல நீதிமன்றத்தின் ஊடாக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. தொடர்ந்து ஜோர்ஜ் மாஸ்டருக்கு எதிரான வழக்கு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு அவர் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே தயா மாஸ்டருக்கு எதிராக வவுனியா மேல்நீதிமன்றத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. (செ-11,250)

## மிருக பலியிடல்...

மனு மீதான விசாரணை நேற்றைய தினம் இடம்பெற்றபோதே யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனால் மேற்படி தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

மேலும் வழக்கில் தாமும் பங்குகொள்ள வேண்டும் என ஆலய நிர்வாக சபையினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

யாழில் சில ஆலயங்களில் மிருக பலியிடலை மேற்கொண்டு வழிபாடு இடம்பெற்று வந்த நிலையில் குறித்த மிருகபலியிடலை நிறுத்த கோரி சைவ மகா சபையினரால் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவின் மீதான விசாரணை கடந்த சில மாதங்களுக்கு முன்னர் எடுத்துக் கொள்ளப்பட்டபோது,

மிருக பலியிடலுக்கு இடைக்காலத்தடை நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டிருந்தது. நேற்றைய தினம் வழக்கு தவணைக்காக குறித்த வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஏற்கெனவே குறித்த வழக்கில் எதிரிகளாக பிரதேச சபையும், சுகாதார வைத்திய அதிகாரியும் இணைக்கப்பட்டுள்ளனர். மிருக பலியிடலை தடுத்து நிறுத்துமாறு கோரி இவர்கள் மீதும் வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மேற்படி வழக்கில் தாமும் இணைய வேண்டும் என மிருகபலியிடலை மேற்கொள்ளும் ஆலய நிர்வாகத்தினரால் நீதிமன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்து. இதற்கு வழக்கு தொடுநர் சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்த நிலையில், அந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

வழக்கினை விசாரணை செய்த நீதிபதி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இருபத்து ஆறாம் திகதி வரை வழக்கினை ஒத்திவைத்து அதுவரை மிருகபலியிடலுக்கு தடை பிறப்பிக்கப்பட்டதாகவும் கட்டளையிட்டிருந்தார். (செ-4)

## 2016ஆம் ஆண்டு...

சபையின் ஆணையாளரும் சைவ சமய விவகாரக்குழுவின் தலைவருமாகிய பொ.வாகீசன் தெரிவித்தார்.

நேற்றைய தினம் கூடிய சைவ சமய விவகாரக்குழுவின் மகா சபை 2016ஆம் ஆண்டுக்கான யாழ் விருதை ஓய்வுபெற்ற அரச அதிபரும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தலைவருமாகிய தி.இராசநாயகம் அவர்களுக்கு வழங்குவதென ஏகமனதாகத் தீர்மானித்தது.

கிளிநொச்சி மாவட்டத்தின் அரச அதிபராக இருந்தபோது அவர் ஆற்றிய உயர்சேவைக்காகவும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் நானூறுக்கும் மேற்பட்ட சிறுவர்களைப் பராமரித்து அவர் களின் எதிர்காலநல்வாழ்வுக்காக ஆற்றி வரும் அர்ப்பணிப்பான சேவையை கௌரவிக்கும் வகையிலும் இந்த ஆண்டுக்கான யாழ்விருது தி.இராசநாயகத்துக்கு வழங்கப்படுவதாக சைவ சமய விவகாரக்குழுவின் மகா சபை தீர்மானித்ததாகவும் ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

இதேவேளை நல்லைக்குமரன் மலர்வெளியிட்டு விழாவில் யாழ் விருது வழங்கும் வைபவம் இடம் பெறும் என்றும் அவர் தெரிவித்தார். (நு)

## விஷ ஊசியில்...

மேற்படி கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

முன்னாள் போராளிகளின் உயிரிழப்புத் தொடர்பில் வீணான வதந்திகள் பரப்பப்படுகிறது. ஊடகங்களும் இந்த விடயத்தில் பொய்யுரைக்கின்றன.

முன்னாள் போராளிகள் மட்டுமா உயிரிழக்கிறார்கள். சாதாரண பொதுமக்களும்தானே உயிரிழக்கிறார்கள்.

புற்றுநோய் போன்ற கொடிய நோய் பாதிப்புக்கள் முன்னாள் போராளிகளுக்கு மட்டுமா ஏற்படுகிறது?

சாதாரண பொது மக்களும் புற்றுநோயால் உயிரிழக்கின்றனர் தானே?

உயிரிழக்கின்ற அனைவருக்கும் விஷ ஊசி ஏற்றப்பட்டதா? எனவே இவ்வாறு ஊசி ஏற்றப்பட வாய்ப்பில்லை. விஷ ஊசிப் பிரச்சினையை யாரோ பின் நின்று பூதாகரமாக இயக்கி வருகின்றனர்.

சிறைச்சாலையில் முன்னாள் போராளிகள் கைதிகளாக அடைத்து வைக்கப்பட்டிருந்தபோது அவர்களுக்கு பலநோய்த்தாக்கங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

வாந்திபேதி, வயிற்றுக்குத்து போன்றவற்றுக்கு சிகிச்சையளிக்கவும் ஊசி மூலம் மருந்து ஏற்றப்படும் என தனது கருத்தை வைத்திய கலாநிதி சிவமோகன் தெரிவித்தார்.

இதன்போது இக்கருத்தை இடைமறித்த இரா.சம்பந்தன், முன்னாள் போராளிகளின் உயிரிழப்பை சாதாரண விடயம் எனக்கருதி ஒதுக்கிவிட முடியாது. முன்னாள் போராளிகளை நாம் மருத்துவ பரிசோதனை செய்தாக வேண்டும்.

அதில் குறைந்தது ஒருவருக்காவது விஷ ஊசி ஏற்றப்பட்டிருப்பது கண்டறியப்பட்டால் இலங்கை அரசாங்கத்தின் பயங்கரமான போர்க் குற்றம் வெளிக் கொணரப்படும். எனவே இவ்விடயத்தில் முன்னாள் போராளிகளின் விபரங்களை திரட்டி அவர்களை மருத்துவ பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (செ-1)

## சரத்துக்கு எதிரான மனு விசாரணைக்கு

அமைச்சர் சரத் பொன்சேகாவின் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்ய உத்தரவிடுமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் அனு மதி வழங்கியுள்ளது.

இதன்படி, குறித்த மனு ஒக்ரோபர் 26ஆம் திகதி விசாரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முன்னாள் தென் மாகாண சபை உறுப்பினர் அஜீத் பிரசன்னவால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் அல்லாத பொன்சேகா, தேசியப் பட்டியலில் நியமிக்கப்பட் டமை அரசியலமைப்புக்கு முரணானது எனவும், அதனை இரத்துச் செய்ய உத்தரவு பிறப்பிக்குமாறுமே அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது. (செ-11)

## பாலம் எதுவும்...

மன்றத்தில் பிரதமரிடம் வினா தொடுக்கும் நேரத்தில் இந்திய - இலங்கைக்கு இடையில் அமைக்கப்படுவதாக கூறப்படும் பாலம் குறித்த கேள்விகள் எழுப்பப்பட்டன.

இந்தக் கேள்வி நேரத்தின் போது சபையில் எழுந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர, இருநாடுகளுக்கும் இடையில் இவ்வாறு பாலமொன்று அமைக்கப்படுமா என்று வினா தொடுத்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்திய - இலங்கைக்கு இடையில் எவ்வித பாலமும் அமைக்கப்படாது என்று குறிப்பிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சுதந்திரமாக திருப்பதிக்கு சென்றாரே அப்படியானால் இந்திய - இலங்கைக்கு இடையில் ஏன் அனுமான் பாலத்தை அமைக்க எமக்கு சுதந்திரம் இல்லை என்றும் பிரதமர் ரணில் கேள்வி எழுப்பினார்.

எனினும் பாலம் அமைப்பதற்கான எந்தவித தேவைப்பாடுகளும் இலங்கை அரசாங்கத்துக்கு இல்லை என்று தெரிவித்த பிரதமர், இது தொடர்பில் எவ்வித இரகசிய முயற்சிகளும் இடம்பெறவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை எட்கா உடன்படிக்கை ஊடாக அதிகளவிலான இந்தியர்களுக்கே இலங்கையில் வேலைவாய்ப்பு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்ற விடயம் குறித்து ஜயதிஸ்ஸ எம்.பி பிரதமரிடம் மற்றுமொரு கேள்வியை முன்வைத்தார்.

இதற்கு பதிலளித்த பிரதமர், எட்கா ஒப்பந்தம் மூலம் இந்தியர்களை விட இலங்கையர்களுக்கே வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிவித்தார். (செ-11)

## அநாதரவாகப்...

கிழமை அதிகாலை 4.30 மணிக்கு இளவாலைப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் வடலியடைப்பு ஆலயம் ஒன்றுக்கு அருகாமையில் உள்ள வீடு ஒன்றில் முன்னால் இருந்து கடதாசிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த ஆண் குழந்தை ஒன்று மீட்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் இளவாலைப் பொலிஸ் புலனாய்வுப்பிரிவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். இதன் போது குழந்தை ஒன்று அப்பகுதியில் ஆண் ஒருவருக்கு பிறந்தாகத் தெரிவித்து பெண் ஒருவர் அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து தாக்கப்பட்டதாக இரகசிய தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றது.

இதனடிப்படையில் அப்பெண் தொடர்பான தகவல்களை திரட்டிய புலனாய்வுப் பிரிவிற்கு அப்பெண்ணே குழந்தையின் தாய் என உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அளவெட்டியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான 36 வயதுடைய அத் தாயினை நேற்று புதன்கிழமை முற்பகல் இளவாலைப் பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையின் அடிப்படையில் வடலியடைப்பைச் சேர்ந்த 26 வயதுடைய நபரே இக் குழந்தைக்கு தந்தை என அப் பெண்மணி பொலிஸாருக்கும் அளித்த வாக்கு மூலத்தின் அடிப்படையில் அந்த நபர் மதியம் கைதுசெய்யப்பட்டார்.

மேற்படி இரு நபர்களிடமும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ-60)

## வடக்கு மீள்குடியேற்ற...

வின் புதல்வர்களில் ஒருவராகவே கூறப்பட்டு வந்தவர். ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான கூட்டமைப்பினர் சார்பில் ஒருவரேனும் அந்தச் செயலணியில் இல்லாததினால் அதன் மீது மக்களது நம்பிக்கை வீழ்ந்து கொண்டிருப்பதால் வடமாகாண முதலமைச்சரை அச்செயலணிக்குள் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை சார்ள்ஸ் எம்.பி சபையில் முன்வைத்தார்.

இதன்பின்னர், அமைச்சரவையை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற உறுப்பினர்களே இந்தச் செயலணியில் அங்கம் வகிக்க முடியும். தற்போது மூன்று அமைச்சர்கள் இதில் உள்ளனர். இவ்வாறான நிலையில் வடமாகாண முதலமைச்சரை எவ்வாறு இதில் சேர்ப்பது? அது சாத்தியமில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித்தார்.

இதனால் கோபமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மகிந்த ராஜபக்ஷ செய்ததையே நீங்களும் செய்யுங்கள். நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்று கூறிவிட்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

இதேவேளை வடமாகாண மீள்குடியேற்ற செயலணி சர்ச்சை குறித்து இவ்வாறு வாதப் பிரதிவாதம் இடம்பெற்ற வேளையில் எதிர்க் கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் சபையில் இருந்தபோதிலும் எதுவித கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. (செ-11)

## சந்திரிகா இன்று...

சனையின் கீழ் யாழ் மாவட்டச்செயலகத்தில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில், சுற்றுலா மற்றும் ஏற்றுமதிக்கான ஒன்றிணைந்த சேவைகள் அலுவலகத்தினை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க காலை 9 மணிக்கு திறந்து வைக்கவுள்ளார்.

அத்துடன் அவரின் தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் நல்லிணக்கத்துக்குமான அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதார பங்குபற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்தப்பட்ட விசேட நுண் நிதியியல் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் காலை 10 மணிக்கு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் யாழ்.மாவட்டதின் 6 பிரதேச செயலக பிரிவில் உள்ள 371 குடும்பங்களுக்கான மழை நீர் சேகரிப்பு தொட்டி திறப்புவிழா நிகழ்வு பிற்பகல் 2.30 மணியளவில் வேலணை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (செ-9)

## சர்வதேச நீதிபதிகளை...

ளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் இதுவரை இந்த தகவலை நிராகரிக்க தவறியுள்ளது.

எனவே, தகவல் அறியும் உரிமை தொட ர்பான சட்டத்தின் கீழ் இது குறித்து தெளிவு படுத்தும்படி அரசாங்கத்துக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு மனு மூலம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மனு அழைக்கப்பட்ட போது கருத்துக்களை தெரிவித்த அரசு தரப்பு வழக்கறிஞர், தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள போதிலும், அந்த சட்டம் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என்று கூறினார்.

எனவே இந்த மனுவை முன்கொண்டு விசாரணை செய்ய முடியாதென்று கூறிய அரச தரப்பின் வழக்கறிஞர் அதனை தள்ளுபடி செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தார்.

அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் மனுவை தள்ளுபடி செய்வதாக அறிவித்தனர். (செ-11)


CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




(C-5419)

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062

அன்னை முத்துமாரி பஸ்சேவை

கொழும்பு ⇄ யாழ்ப்பாணம் ⇄ பருத்தித்துறை

12ம் திகதி முதல் பகல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது




Web www.annaimuthumari.com
www.valvaitourism.com

நான்கு புதிய A/C பஸ்களுடன்

இரு வழிச் சேவையை இரவு, பகல் என விஸ்தரித்துள்ளது

| | |
|---|---|
| Colombo | +94 77 544 9251 |
| Jaffna | +94 77 544 8503 |
| Nelliyadi | +94 77 285 0285 |
| Pointpedro | +94 77 555 2973 |
| Valvettithurai | +94 21 226 1977 |
| | +94 77 544 7359 |

| | காலை | இரவு |
|---|---|---|
| பருத்தித்துறை | 7.00 am | 7.00 pm |
| யாழ்ப்பாணம் | 8.00 am | 8.00 pm |
| வெள்ளவத்தை | 7.30 am | 7.30 pm |
| கொட்டாஞ்சேனை | 8.30 am | 8.30 pm |


(5552)

Bus booking || Courier || Boating


## மரண அறிவித்தல்

### அமரர் வைரமுத்து சிவலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும் குப்பிளான் தெற்கு ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து சிவலிங்கம் அவர்கள் 10.08.2016 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து நன்னிப்பிள்ளையின் மகனும், சேகரம்பிள்ளை-நாகம்மாவின் மருமகனும், கனகமணியின் அன்புக் கணவரும், லிங்கனமலர், லிங்கனரூபன், லிங்கனவதனா, லிங்கனலதா, லிங்கனதாஸ் (அதிபர்), லிங்கனகீதா அவர்களின் அன்புத் தந்தையும், உதயசூரியன், சந்திரா, விக்கினேஸ்வரன், ரவீந்திரன், நிருத்திகா, ஜெயக்குமார் ஆகியோரின் மாமனாரும், கஜன்சிகா, தௌமிகா, லிபிசிகா, மிதுர்ஷன், லேனுஜன், அனிஸ்ரன், கோபி, பவித்திரன், காயர்த்தனா, சஞ்சய், சாருஜன், சஸ்வின், சுஜானன், ஆருஷா, ஆதர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜான்வி, யஸ்மித்தின், பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11.08.2016 இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குப்பிளான் தெற்கு,
பரிசயப்புலம், ஏழாலை. (சி-5421) -குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி கதிரவேலு செட்டியார் நாகம்மா



காரைநகர் களபூமி சத்திராந்தையைப் பிறப்பிடமாகவும் இல.29/6 மாடசாமி கோவில் வீதி, பண்டாரிக்குளத்தை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி கதிரவேலு செட்டியார் நாகம்மா 10-ம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், கதிரவேலு செட்டியார் அவர்களின் அன்பு மனைவியும், கிருபானந்தம் (டென்மார்க்), அருணகிரிநாதன் (அம்பாள் களஞ்சியம் கொக்குவில்), பரமானந்தம் (தாரணி ஸ்ரோர்ஸ், மாடசாமி கோவில் வீதி) விக்னேஸ்வரன் (தோணிக்கல்), நித்தியானந்தம், அருளானந்தம் (பாட்ஷா), சரஸ்வதிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மகேஸ்வரி (டென்மார்க்), சிவயோகேஸ்வரி, இந்திராணி, மலர்விழி, வசந்தேஸ்வரி, ஜெயமாலா, காலஞ்சென்ற வன்னியசிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, செல்வநாயகம் மற்றும் கனகம்மா ஆகியோரின் சகோதரியும், ஞானேஸ்வரி, அன்னலட்சுமி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11ஆம் திகதி) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மகன்:அருளானந்தம் (பாட்ஷா)

(சி-5423)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி கல்விப்பிரிவு

# தரம்-5 மாணவர்களுக்கான
# புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-24

பகுதி-II

நேரம்:- ஒரு மணித்தியாலம் 15 நிமிடங்கள்

பின்வரும் கதைப்பாடலை வாசிக்க.

சற்று நேரத்தில் பிட்டுக்காரி வந்தாள். பிட்டையும் வடையையும் பெரிய பையன் தட்டில் வாங்கினான். அவற்றை ஆவலுடன் தின்னத் தொடங்கினான். அப்பொழுது என்ன நேர்ந்தது? கவிஞர் கூறுகிறார்.

''வடையின் சுவையோ 'விடேன் விடேன்' என்றது
கொல்லை நோக்கிச் செல்லவும் துடித்தான்.
மெல்லும் வடையை விழுங்கவும் துடித்தான்.
வில்லம்பு போல மிக விரைவாக
நடுவிற் கிடந்த நாயை மிதித்துப்
படபடவென்று பானையைத் தள்ளிக்
கன்றின் கயிற்றால் கால் தடுக்குற்று
நின்ற பசுவின் நெற்றியில் மோதி
இரண்டு பற்கள் எங்கேயோ போட்டுப்
புரண்டெழுந்தோடிப் போனான் கொல்லைக்கு"

எப்படியிருக்கிறது இக்காட்சி! பிட்டையும் தின்னவில்லை, பல்லும் போயிற்று.

01. இக்கதைப் பாடலை நன்றாக வாசித்த பின் இக்கதையை உமக்குப் புரிந்த வரையில் நான்கு வாக்கியங்களாக எழுதுக.

1) ............................................................

2) ............................................................

3) ............................................................

4) ............................................................

02. பாடலில் உள்ள சொற்களின் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்க.

1) கொல்லைப்பக்கம் 1. கழிவறை 2. சமையலறை 3. படிப்பறை

2) புரண்டெழுந்து 1. நித்திரைவிட்டெழுந்து 2. விழுந்தெழுந்து 3: பாய்ந்து விழுந்து

03. பாடலில் உள்ள உவமானத்தை எழுதுக

............................................................

04. பின்வரும் தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.

1) எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.

............................................................

2) நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது.

............................................................

- அடைப்பினுள்ளே இருக்கும் சொற்களை மாத்திரம் பயன்படுத்திச் சரியான கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. ( ஒரு சொல்லை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்துக. )

பழமும் / இல்லை / என்பவர் / அதன் / வேடிக்கை / கயிற்றை / கழுத்தில் / லூயிபாஸ்ட்டர்/ எனக்கு / ஆவார் / புகழ்பெற்ற / பார்த்தனர் / கிளியை / கட்டிக் / பறக்கவிட்டு / விஞ்ஞானி / பாலும் / தேவை

05............................................................


06............................................................

07............................................................

08. வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்களை எழுதுக.



01) THIS IS A.......................................................................................................



02) WHAT IS THIS?............................................................................................

09. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
நீர் பிறந்த இடம் எது?..........................................................................................

10. பின்வரும் சிங்கள வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.
ஓயாகே கம மாத்தறதா?..........................................................................................

11. 'விரைந்து வாருங்கள்' என்னும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.
..........................................................................................................................

12 தொடக்கம் 26 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

12. உருவில் உள்ள தாவரத்தின் பெயர்
1) ஆமணக்கு
2) வேம்பு
3) கண்டங்கத்தரி



13. நெல் அறுவடை செய்வதற்கு உகந்த நிலை
1) கதிர் முற்றிப் பச்சை நிறமாக மாறியிருத்தல்.
2) கதிர் முற்றி மஞ்சள் நிறமாக மாறியிருத்தல்.
3) கதிர் விரிந்து சாம்பல் நிறமாக மாறியிருத்தல்.

14. சிக்கனமான மின்சாரப் பாவனைக்கு உகந்த மின்குமிழ் எது?
1) CFL பல்புகள் 2) TUBE பல்புகள் 3) தங்குதன் பல்புகள்

15. காற்று வீசும் திசையை அறிவதற்கு உகந்த செயல்முறை யாது?
1) புகைக்கும் சாம்பிராணிக் குச்சியின் புகை செல்வதை அவதானித்தல்.
2) கொடியில் காயும் ஈர உடைகள் அசைவதை அவதானித்தல்.
3) உடல் குளிர்வதைக் கொண்டு கண்டறிதல்.

16. மகாவலி கங்கை கடலுடன் சங்கமிக்கும் பிரதேசம் எது?
1) களனி 2) திருகோணமலை 3) மட்டக்களப்பு

17. குழந்தைகள் அருந்துவதற்கு தகுந்த பால்மா வகை எது?
1) முழுஆடைப்பால்மா 2) கொழுப்பகற்றப்பட்டபால்மா 3) ஆடையகற்றப்பட்ட பால்மா


18. இலங்கைத் தீவு அமைந்துள்ள சமுத்திரம் எது?
1) பசுபிக் சமுத்திரம் 2) இந்து சமுத்திரம் 3) ஆட்டிக் சமுத்திரம்

19. பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் பூச்சிகளை அழிப்பதற்கு உகந்த முறை அல்லாதது எது?
1) பாவட்டை, புகையிலை, வேப்பச் சாறைத் தெளித்தல்
2) சவர்க்கார கரைசல், சுண்ணாம்புக் கரைசல், மஞ்சள் நீர் தெளித்தல்.
3) நத்தைகளின் இனவிருத்தியைக் கூட்டுதல்.

20. நீரினுள் அமிழ்ந்து விபத்துக்குள்ளானவருக்கு அளிக்கப்பட வேண்டிய முதலுதவி அல்லாதது எது?
1) வயிற்றுப் பகுதியை அமுக்கி நீரை வெளியேறச் செய்தல்.
2) விபத்துக்குள்ளானவரின் வாயில் எமது வாயை வைத்து காற்றை இழுத்து ஊதி செயற்கைச் சுவாசத்தை ஏற்படுத்துதல்.
3) வயிற்றுப் பகுதியை ஈரத்துணியினால் இறுக்கிக் கட்டுதல்.


21. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் வீட்டின் மூலைகளில் சிலந்திகள் அமைத்த வலைகள் தூசிகள் படிந்து ஒட்டடை ஆக மாறும்?
   1) வீட்டில் அதிகமானவர்கள் தங்கி இருப்பதனால்
   2) வீட்டைப் பயன்படுத்தாது அதிக காலம் பூட்டி வைப்பதனால்
   3) எவராவது சிலந்திக்கு தொந்தரவு செய்ததனால்

22. சந்திகளில் கடமையில் நிற்கும் இப்பொலிஸாரின் சைகையின் கருத்து யாது?



   1) முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் வரும் வாகனங்களை நிறுத்துங்கள்.
   2) பாதசாரிகள் பாதையைக் கடந்து செல்லுங்கள்.
   3) முன்னாலிருந்து வரும் வாகனங்கள் செல்லலாம் பின்னாலிருந்து வரும் வாகனங்களை நிறுத்தவும்.

23. இவ்வுருவின் பயன்பாடு யாது?




   1) சுவரின் நிலைக்குத்துத் தன்மையை பேணுதல்.
   2) தரையின் கிடைத்தன்மையைப் பேணுதல்.
   3) படிக்கற்களின் உயரங்களை சீராக்கல்.

24. இவ் அடையாளத்தின் கருத்து யாது?




   1) சக்கர நாற்காலியில் உள்ளவருக்கு உதவி செய்யவும்.
   2) வலது குறைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கவும்
   3) ஓட்ட வீரர் உற்சாகப்படுத்தவும்.

25. சூரிய நமஸ்காரத்தில் முதல் நிலையாகவும் இறுதி நிலையாகவும் அமைவது எது?

1)  2)  3)  4) 

26. மின்சுற்றுக்களில் 'S' எனும் ஆளியை இணைப்பதன் மூலம் ஒளிரக் கூடியது எது?




சரியான விடைகளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

27. 'முப்பதாயிரத்து முந்நூற்று முப்பத்தாறு' என்பதை இலக்கங்களில் எழுதுக.

........................................................................................................................

28. ஒரு வாகனத்தின் தூரமானியின் இரு வேறு நிலைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 0 | 6 | 3 | 7 | 8 | 4 | 2 | km |

முதல் நிலை

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 0 | 6 | 3 | 8 | 8 | 6 | 7 | km |

இரண்டாம் நிலை


ஒரு குறித்த வருடத்தின் தை மாதம் முதலாம்திகதி முதல் மானி நிலையும், மாசிமாத முதலாம்திகதி இரண்டாம் மானி நிலையும் காணப்பட்டது. ஒரு மாத காலத்தினுள் ஓடிய தூரம் எவ்வளவு?

........................................................................................................................

29. அட்டவணையைப் பூர்த்தி செய்க.

| ஒரு கிலோ கிராம் விலை | 2kg 500g விலை | 3kg 500g விலை |
|---|---|---|
| ரூபா 18.00 | .................... | .................... |
| .................... | .................... | ரூபா 56.00 |
| ரூபா 12.00 | .................... | .................... |

30. வட்ட வரைபுத் தகவலை சலாகைக் கோட்டு வரைபில் குறிக்குக.




31. ஒரு மேசைக்கரண்டி கொள்ளத்தக்க மருந்தின் கனவளவு 10 ml ஆகும். ஒரு நோயாளிக்கு ஒரு தடவைக்கு மூன்று மேசைக்கரண்டி வீதம் ஒரு நாளைக்கு மூன்று தடவைகள் மருந்து கொடுக்கப்பட்டது. அவருக்கு ஒரு வாரத்துக்கு கொடுக்கப்பட்ட மருந்தின் கனவளவு யாது?

........................................................................................................................

32. ஒரு நகரிலிருந்து காலை 10.00 இற்குப் பயணத்தை ஆரம்பித்த பேருந்து 2 மணி 20 நிமிடங்கள் பயணம் செய்து சிற்றுண்டிச் சாலையில் 30 நிமிடங்கள் தரித்து நின்று மீண்டும் 3 மணி 30 நிமிடங்கள் பயணம் செய்து இன்னொரு நகரை அடைந்தது.

1) பயணம் முடிவுற்ற நேரத்தை நியம நேரத்தில் எழுதுக........................................

2) பயணத்திற்கு செலவான மொத்த நேரம் எவ்வளவு?........................................

33. கூட்டுக.

1) $\frac{1}{3} + \frac{1}{6} =$ ______________ 2) $\frac{1}{4} + \frac{1}{8} =$ ______________

34. கழிக்குக.

1) $\frac{6}{8} - \frac{1}{4} =$ ______________ 2) $\frac{5}{6} - \frac{1}{3} =$ ______________

35. 306 புத்தகங்களை ஒருவருக்கு 3 வீதம் எத்தனை பேருக்குப் பகிர்ந்து கொடுக்கலாம்?..................

36. 6 மீற்றர் நீளமுள்ள ஒரு நாடாவிலிருந்து ஒவ்வொன்றும் 25cm நீளமுள்ள 6 துண்டுகளை வெட்டிய பின் மீதமிருந்த நாடாவின் நீளம் யாது?........................................

வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையைத் அடைப்புக்குறிகளினுள்ளேயிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.

37. மக்கள் கூட்டமாகச்.................................... ( சென்றார்கள் / சென்றது )

38. வாசற்பூட்டு தொலைந்து.................................... ( போய்விட்டது / போய்விட்டன )

39. பாடசாலைக் கல்விச் சுற்றுலாவில் பங்குகொள்வதற்கு அனுமதியும் பண உதவியும் கேட்டு விடுதியில் தங்கியிருந்த மகள் தனது தாய்க்கு கடிதம் வரைபது போல் ஒன்றை எழுதுக.

முகவரி..........................

விளிப்பு ........................................

விடயம் ........................................

........................................

........................................

........................................

40. முடிவு ..........................

ஒப்பம் ..........................

இவ் வினாக்களுக்குரிய விடைகள் நாளை வெள்ளிக்கிழமை (12.08.2016) வலம்புரி பத்திரிகையில் பிரசுரமாகும்.

◆◆◆